துன்பத்தில் துளிர்த்த துளிர்



ஆசிரியர்கள் :

Rev.Y. ஜாண் பிரைட்

Rev.D. ஐசக் சுந்தர் சிங்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

துன்பத்தில் துளிர்த்த
தளிர்

தென்திருவிதாங்கூர் கிறிஸ்தவர்கள் அனுபவித்த
துன்பங்கள்

ஆசிரியர்கள் :

Rev. Y. ஜாண் பிரைட், M.A., B.D., M.Th.,

Rev. D. ஐசக் சுந்தர் சிங், M.A., B.D., M.Th.,

Title	:	**THUNBATTHIL THULIRTTHA THALIR**
Authors	:	Rev. Y. John Bright Rev. D. Isaac Sundar Singh
Language	:	Tamil
Edition	:	April, 2011
Pages	:	152
Cover Design	:	Rev. S.M. Daniel Devadhasan
Price	:	Rs. 80.00
Printed at	:	Jashua Printers, Nagercoil. Mob : 94435 80066

சமர்ப்பணம்

நற்செய்தியினால் அருளப்பட்ட
விடுதலையின் வாழ்வை சுதந்தரித்து,
திருச்சபையை கட்டி எழுப்ப
தங்கள் வாழ்வை தியாகம் செய்த
இம்மண்ணின் மைந்தர்களுக்கு
இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்.

Off. : (04652) 231539 / Resi. : (04652) [illegible]
Fax : (04652) 226560 / E-Mail : [illegible]

CHURCH OF SOUTH INDIA

KANYAKUMARI DIOCESE

C.S.I Diocesan Office, 71-A, Dennis Street, Nagercoil - 629 001, South India

Rt. Rev. G. DEVAKADASHAM, M.A., B.D., M.Th.
Deputy Moderator, C.S.I.
Bishop in Kanyakumari

ஆசியுரை

ஒவ்வொரு தலைமுறையினருக்கும் உண்மைகளை எடுத்துச் செல்லும் ஊடகமாக விளங்கும் வரலாறு, மக்களை விடுதலையின் வாழ்வுக்கு நேராக வழிநடத்துகிறது. வரலாறு அறியாதோர் என்றும் அடிமைகளே. வரலாற்றில் வெளிக் கொணரப்பட்ட விடுதலைச் செய்திகளே மக்களின் சுயதிறமையையும், ஆளுமையையும் மேம்படுத்துகிறது. வரலாற்றை ஆவணமாக்கி பாதுகாப்பது, எதிர்கால சந்ததியினர் தன்னம்பிக்கையுடன் செயல்பட உதவுகிறது. அவ்வகையில் எழுதப்பட்டு ஆவணமாக்கப்பட்டுள்ள "துன்பத்தில் துளிர்த்த தளிர்" என்னும் இந்நூல், நற்செய்தியை அறிவித்து திருச்சபையைக் கட்டியெழுப்பவும், அடிமைகளாக வாழ்ந்த முன்னோர்களின் விடுதலைக்காகவும் உழைத்த அயல்நாட்டு அருட்பணியாளர்களின் வழியாக நற்செய்தியை ஏற்றுக்கொண்டதால் நம் மண்ணின் மைந்தர்கள் அனுபவித்த துன்பங்களையும், அவைகளை சகிப்புத் தன்மையுடன் எதிர்கொண்டு இறைமக்களாக வாழ வேண்டும் என்ற லட்சியத்தை உருவாக்கினதையும் பாங்குடன் எடுத்துச் சொல்லுகிறது. இந்நூலை எழுதிய ஆசிரியர்கள் Rev. Y. ஜாண் பிரைட், Rev. D. ஐசக் சுந்தர் சிங் ஆகியோரைப் பாராட்டுகிறேன். இந்நூல் அனைத்து தலைமுறையினரையும் சென்றடையட்டும் என வாழ்த்தி ஜெபிக்கும்.

பேரருள்திரு. G. தேவகடாட்சம்,
துணைபிரதமப் பேராயர், CSI,
பேராயர், குமரிப் பேராயம்.

அணிந்துரை

முதல் மூன்று நூற்றாண்டுகள், தொடக்க காலத் திருச்சபை சந்தித்த துன்பத்தின் விளைவு தான் திருச்சபையின் வளர்ச்சி. திருச்சபையின் தந்தை தெர்துல்-யன் கூறிய "இரத்தச் சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து" என்னும் கூற்று தொடக்கக் கால திருச்சபையின் வளர்ச்சியில் வடிவமாயிற்று. துன்பம் என்னும் பந்தத்தை பற்றிக் கொண்ட பற்றுறுதியாளர்களின் கூட்டம் எண்ணிக்கையில் அடங்காதவை. உரோமை பேரரசன் நீரோ காலத்தில் தொடங்கிய துன்பம், எங்கெல்லாம் நற்செய்தி சென்றதோ அங்கெல்லாம் தொடர்ந்தது. தென் திருவிதாங்கூர் திருச்சபை வரலாற்றிலும் கிறிஸ்தவம் துன்பத்தை சந்தித்தது நாம் அனைவரும் அறிந்த உண்மை. இந்த சந்திப்பில் சான்று பகர்ந்தவர்களை மறவாமல், மறைக்காமல், திருச்சபைக்கும், சமுதாயத்துக்கும் வெளிச்சம் போட்டு காட்டுவதே ஆசிரியர்களின் நோக்கம். குறிப்பாக குமரி மண்ணில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பங்களை பட்டியலிட்டு தன் எழுத்துக்களில் பதித்துள்ளார்கள். திருச்சபைக்காகவும், நற்செய்திக்காகவும், நம் மண்ணின் மைந்தர்கள் சந்தித்த துன்பங்களை கிறிஸ்தவ வரலாற்றில் இணைக்கும் ஆசிரியர்களின் முயற்சி பாராட்டுதலுக்குரியது.

பற்றுறுதி வாழ்வின் அடித்தளம் கிறிஸ்தவ வரலாறு. இயேசு கிறிஸ்து வரலாற்றில் செயலாற்றினார் என்பதற்குரிய வரலாற்று தடயங்கள் இன்னும் வலுவாக பதிக்கப்படட்டும். இந்த முயற்சியில் ஆசிரியர்கள் இன்னும் பல தடயங்களை திருச்சபைக்கும், இந்த சமுதாயத்திற்கும் தர வேண்டும் என வாழ்த்தி துன்பத்தில் துளிர்த்த தளிர் என்ற இந்த நூல் ஈசாயின் அடிமரம் துளிர்த்து உலகுக்கு விடுதலை தந்தது போல இன்றும், துன்பத்தில் துவண்டு, விடுதலைக்காய் காத்திருக்கும் மானுடத்திற்கு நம்பிக்கையின் தளிராய் விளங்கட்டும்.

Rev. S. M. டேனியல் தேவதாசன், M.A., B.D., M.Th.

அறிமுகம்

நற்செய்தியை நானிலத்தோர்க்கு அறிவிக்க இயேசு கிறிஸ்துவின் கட்டளையைப் பெற்று, நற்செய்தி அறிவிக்க இந்தியாவிற்கு வந்த இயேசு கிறிஸ்துவின் சீடர் தோமாவின் பணியினால் கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவம் இந்திய மண்ணில் வேரூன்றியது. பல கால சூழல்களில் நற்செய்திப் பணிசெய்த அருட்பணியாளர்களின் வழியாக இந்திய மண்ணில் நிலைத்து நின்ற கிறிஸ்தவம், 19-ஆம் நூற்றாண்டில் அருட்பணி செய்திட வந்த சீர்திருத்த கிறிஸ்தவ சபையின் மிஷனெரிகளால் (அருட்பணியாளர்களால்) வேகமாக வளரத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் தான் இந்திய சமுதாயத்தில் அடிமைகளாக வாழ்ந்த மக்கள் விடுதலை காற்றை சுவாசிக்கத் தொடங்கினர்.

அதிகார வர்க்கத்தினரின் கொடுமைகளி-ருந்து ஏழை மக்களை விடுவிக்க அவர்களுக்குக் கல்வியறிவை புகட்டி, அடிமைத்தனத்தி-ருந்து விடுதலை பெற்று தர உழைத்தவர்கள் அருட்பணியாளர்கள் தான் என்பது உலகமறிந்த உண்மை. அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்களுக்கு விடுதலை பெற்று தருவதற்காகக் கொடுமையான துன்பங்களையும், தாங்கொணா வேதனைகளையும் அனுபவித்து, தங்கள் வாழ்வையும் தியாகம் செய்து இந்திய மண்ணிலே மாண்டு போன அருட்பணியர் ஏராளம்! ஏராளம்!! அதே வேளையில் நற்செய்தியை ஏற்றுக் கொண்டு, அயல் நாட்டு அருட்பணியரோடு இணைந்து திருச்சபையை வளர்க்கவும், ஆலயங்களை கட்டியெழுப்பவும், அடிமைகளாக வாழ்ந்த மக்கள் விடுதலை பெறவும் பணிசெய்த மண்ணின் மைந்தர்கள் அனுபவித்த கொடுமைகளும், துன்பங்களும் ஏராளம்! ஏராளம்!! இதனால் மாண்டுபோனவர்களும் அநேகர். அப்படி 19-ஆம் நூற்றாண்டில் தென்திருவிதாங்கூர் மண்ணில் கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பத்தின் பலன் தான் இன்றைய திருச்சபை மட்டுமல்ல, நாம் பெற்ற விடுதலையும் என்றால் மிகையாகாது. அவர்கள் அனுபவித்த

துன்பங்களையும், அதற்கான காரணங்களையும் சுருக்கமாக விளக்கும் புத்தகமே "துன்பத்தில் துளிர்த்த தளிர்".

முக்கடலும் சங்கமிக்கும் குமரியை தென் எல்லையாகக் கொண்ட திருவிதாங்கூர் பேரரசை சிறப்பாக ஆட்சி செய்தவர்கள் சேர மன்னர்கள். பாகுபாடின்றி சமத்துவமாக வாழ்ந்து வந்த சான்றோர்கள் மகிழ்ச்சியுடன் வாழ அனைத்து வளங்களையும் குறைவின்றி பெற்றிருந்ததும், தமிழ் மொழியை வளர்த்த சான்றோர்கள் வாழ்ந்ததும் திருவிதாங்கூரின் சிறப்பு ஆகும். ஆனால் வட இந்தியாவி-ருந்து இடைக்காலத்தில் குடியேறிய ஆரியர்களால் திருவிதாங்கூர் பேரரசில் காணப்பட்ட மேன்மையான பண்புகள் அழிந்தன; ஒழுக்கக் கேடுகள் ம-ந்தன; மனித நேயம் மறைந்து அடிமைத்தனம் மலர்ந்தது; மண்ணின் மைந்தர்கள் அடிமைகளாக்கப்பட்டனர். ஆரியர்கள் தங்கள் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள தாங்கள் மட்டும் தான் கடவுளால் படைக்கப்பட்டவர்கள், மற்றவர்கள் தங்களுக்கு பணிவிடை செய்ய பிறந்தவர்கள் என்னும் தவறான கருத்தை பரப்பினர். மன்னர்களை நயவஞ்சகமாக தங்கள் வலையில் விழச் செய்து மக்களின் நிலங்களையும், மன்னர்களின் நிலங்களையும் தங்கள் கோவில்களின் பெயருக்கு மாற்றினர். எல்லாவற்றிற்கும் மேலாக, தொழில்களை அடிப்படையாகக் கொண்டு சாதிகளை உருவாக்கி ஒற்றுமையாக வாழ்ந்து வந்த இம்மண்ணின் மக்களைப் பிரித்துவிட்டனர்.

இந்த சூழ்நிலையில் திருவிதாங்கூருக்கு நற்செய்தியை அறிவிக்க வந்த அருட்பணியர், பல நூற்றாண்டுகளாக இங்குள்ள மக்கள் அனுபவித்து வந்த வேதனைகளைப் பார்த்து, மக்களின் விடுதலைக்காக உழைத்தனர். அயல்நாட்டி-ருந்து வந்த மக்கள் தங்களின் சுய நலனுக்காக அல்லாமல், அடிமைகளாக வாழ்ந்த மக்களின் நலனுக்காக உழைத்ததைப் பார்த்த இம்மண்ணின் மைந்தர்கள் புத்துணர்ச்சி பெற்றனர். அடிமைத்தனத்தை எதிர்த்துத் துணிந்த போது துன்பங்களே பரிசாகக் கிடைத்தன. தங்கள் விடுதலைக்கு அடித்தளமாக அமைந்த திருச்சபையைக்

கட்டியெழுப்ப முயன்ற போது சித்திரவதைகளும், கொடுமையான துன்பங்களுமே அனுதின வாழ்வின் அனுபவங்களாக மாறின. எனினும் மரணம் வரைக்கும் கிறிஸ்துவுக்காக சான்று பகர உறுதியுடன் நின்ற நம் மண்ணின் மைந்தர் அனுபவித்த பாடுகளையும், வேதனைகளையும் இந்நூலில் காணலாம். நம் முன்னோர்கள் உணவுக்காகவோ, உடைக்காகவோ, பணத்துக்காகவோ கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல, மாறாக துன்பங்களின் நடுவே விடுதலையையும், நற்செய்தியையும், திருச்சபையையும் சொத்துக்களாக நமக்கு தந்துள்ளனர். அவர்களின் தியாக வாழ்வுக்காக கடவுளுக்கு நன்றி சொல்- கடவுளுக்கு சான்றுகளாக வாழ்வோம்.

ஈசாம் என்னும் அடிமைத்தி-ருந்து துளிர்த்த தளிரானது இஸ்ரவேலருக்கு மட்டுமன்றி முழு உலகத்திற்கும் விடுதலையளித்தது. ஆம், இன்றும் துன்பத்தில் துளிர்த்த தளிரான திருச்சபையால் அனுதினமும் அநேகர் வாழ்வு பெறுகின்றனர். இந்தப் பணி தலைமுறை தலைமுறையாய் தொடர நம் முன்னோர்களின் தியாகத்தை தெளிவாக கற்று, அவர்கள் விட்டுச் சென்ற பணியை தொடருவோம்.....

இந்த புத்தகத்தை எழுதி வெளியிட கடவுள் எங்களுக்கு அருளிய வாய்ப்புக்களுக்காக கடவுளை போற்றுகின்றோம். ஆசியுரை வழங்கிய கண்ணியத்திற்குரிய நமது பேராயர் Rt. Rev. G. Devakadasham அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம். இம்மண்ணின் மைந்தர்கள் அனுபவித்த வேதனைகளை நூல் வடிவமாக்க உற்சாகமூட்டி, அணிந்துரை எழுதிய Rev. S.M. Daniel Devadhasan அவர்களுக்கும், இப்புத்தகத்தை எழுத எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும், நல்ல ஆலோசனைகளும் தந்த Rev. I. Victor Gnanaraj அவர்களுக்கும் மனதார நன்றி சொல்லுகிறோம். இப்புத்தகம் தரமுள்ள புத்தகமாக வெளியிட உதவிகள் செய்திட்ட பேராசிரியை Mrs. Roselet Dani Bai அவர்களுக்கும், Mr. B. Sam Jetha Singh அவர்களுக்கும், அச்சிட்ட ஜாஸ்வா அச்சகத்தாருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

25. 04. 2011

பொருளடக்கம்

1. திருவிதாங்கூர் பேரரசு
2. மக்களின் அவல நிலை
3. திருவிதாங்கூரில் கிறிஸ்தவம்
4. திருவிதாங்கூரில் ஆங்கிலேய ஆதிக்கம்
5. திருவிதாங்கூரில் சீர்திருத்தக் கிறிஸ்தவம்
6. கிறிஸ்தவர்களின் துன்பத்திற்கான காரணங்கள்
7. கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பங்கள்

1

திருவிதாங்கூர் பேரரசு

உலகம் தோன்றிய காலம் முதலே இருந்துவரும் திருவிதாங்கூர் பேரரசு இந்தியாவிலுள்ள அரச மரபுகளில் மிகவும் தொன்மையானதாகும். வளமுள்ள, புனிதமான பகுதி என்னும் பொருளில் 'ஸ்ரீவாழும்கோடு' அல்லது 'திருவாழுங்கோடு' என்று அழைக்கப்பட்ட இப்பகுதி பின்னர் 'திருவாங்கோடு' என மாற்றமடைந்தது. இந்தியாவில் வந்து குடியேறிய ஆங்கிலேயர்கள் தங்கள் மொழிக்கேற்பத் 'திருவாங்கூர்' (Travancore) என மாற்றிக் கொண்டனர். இது வரலாற்றின் ஆரம்பக் காலத்தில் 'சேரநாடு' என அழைக்கப்பட்டது.[1]

வேத காலத்துக்கு முன்பிருந்தே தென்னகத்தைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் சிறப்புடன் ஆளுகை செய்து வந்தனர். அவர்களில் புகழ் பெற்றவர்கள் சேர மன்னர்கள் ஆவார். பரப்பளவிலும் சேர நாடு பெரிய நாடாகத் திகழ்ந்தது. சங்க காலத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வித்திட்ட சான்றோர்கள் சேர நாட்டில் வாழ்ந்திருக்கின்றனர் என்பது சேர நாட்டிற்குக் கிடைத்த பெருமை எனலாம். சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அடிமைதனத்தைத் தகர்த்தெறிந்த சான்றோர்கள் வாழ்ந்த தேசம் சேர நாடு ஆகும். குடநாடு, குட்ட நாடு, பூமி நாடு, கற்கா நாடு மற்றும் வேணாடு என்னும் மேற்கு கடற்கரை பகுதிகளிலுள்ள 5 நாடுகளை உள்ளடக்கிய சேர நாடு ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில்

திருவிதாங்கூர் என்றும் பிற்காலத்தில் கேரளம் என்றும் பெயர் மாற்றம் பெற்று அழைக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டமும் சேர நாட்டின் கீழ் அமையப் பெற்றிருந்தது. தென் இந்தியாவில் ஆரியர்களின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் மூவேந்தர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளது. சேர மன்னர்களின் முன்னோர்களைப் பற்றியோ, அவர்களது வழிமரபினர்களைப் பற்றியோ திட்டமாகக் கூறமுடியாவிட்டாலும், சங்க கால இலக்கியங்களில் காணப்படும் வரலாற்று உண்மைகள் இவர்களைச் சான்றோர் குலத்தவர் எனக் கூறுகிறது.

சங்க காலத்தில் சேர நாட்டின் எல்லையாகக் கிழக்கே இன்றைய கோயம்புத்தூர் மாவட்டம் வரையிலும், வடக்கே இன்றைய கர்நாடக மாநில எல்லை வரையிலும், மேற்கே அரபிகடலும் தெற்கே முக்கடலும் சங்கமிக்கும் குமரி வரையிலும் அமைந்திருந்தது. குமரிக்கும் கொல்லத்திற்கும் இடையே காணப்பட்ட மேற்கு கடற்கரை நாட்டை வேணாடு என்று அழைத்தனர். இது பிற்காலத்தில் திருவாங்கோடு எனவும், ஆங்கிலேயர்களின் காலத்தில் திருவிதாங்கூர் எனவும் அழைக்கப்பட்டது.[2]

இது தென்னந்தோப்புகள் நிறைந்த வளமான பகுதியாகையால் 'கேரளம்' என அழைக்கப்படுகின்றது. இப்பகுதியை ஆட்சி செய்த சேர மன்னர்கள் 'கேரளன்' என்று அழைக்கப்பட்டனர். பரசுராமனால் பிராமணர்களுக்குத் தானமாய் தரப்பட்டப் பகுதியாதலால் இது தர்ம பூமி என்று அழைக்கப்பட்ட மரபுக்கதையும் உள்ளது. மலைவளம் மிகுந்து மலைகளால் சூழப்பட்டிருப்பதால் 'மலையாளம்' என்றும் அழைக்கப்பட்டதாகக் கூறுவர். மேலும் பரசுராம ஷேத்திரம், மலபார், மலைநாடு, வேணாடு என்ற பெயர்களாலும் இத்திருவிதாங்கூர் பேரரசு அழைக்கப்பட்டது.[3]

சேன் என்னும் பதத்தி-ருந்து எழுந்த சேரன் என்ற சொல் அமுதக் குலத்தைக் குறிக்கிறது. சேரன் என்பதற்கு பனையமுது என்று பொருள். இதி-ருந்து சேர மன்னர்கள் நாடார் குலத்தின் முன்னோர்களான அமுதக் குலத்து சான்றோர்கள் என்பது

புலனாகிறது. இதனால் சேர மன்னர்கள் தங்கள் கொடி சின்னமாக வில்லையும், பனம் பூவையும் வைத்திருந்தனர். தமிழ் இலக்கியங்களில் வரும் குட்டுவன், கேரளன், கொங்கன், போந்தின் கண்ணிசேரன், போந்தின் கண்ணிக்கோன், பெண்ணெயந் தொங்கலான் எனச் சேர அரசர்களைக் குறிப்பிட பயன்படுத்திய பெயர்களின் அர்த்தம் பனையமுதையே குறிப்பிடுகிறது எனவும் சேர மன்னர்கள் சான்றோர் குலமாகிய நாடார் இனத்தவர்கள் என்பதில் ஐயமில்லை எனவும் இளந்தோட்டம் கு. சுகுமாறன் தன் நூ-ல் கூறியுள்ளார்.[4]

சேர நாட்டை ஆட்சி செய்த சேர மன்னர்கள் அனைவரைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்து கொள்ள தகுந்த ஆவணங்கள் இல்லை என்றாலும் சங்க காலத்தில் சேர அரசர்களின் வீரம், கொடை, ஆட்சி பற்றி புகழ்ந்து பாடப்பட்ட பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் சங்க கால இலக்கியங்கள் வழி சிலரைப் பற்றி மட்டும் அறிய முடிகிறது. அவர்களில் இமயத்தை எல்கையாகக் கொண்ட இமயவரம்பன் சேரலாதன், பாரதப் போரில் இரு படைகளுக்கும் உணவு கொடுத்த பெருஞ்சோற்று உதியன், ஆரிய மன்னர்களைக் கொண்டு கல் சுமந்து வரச்செய்து கண்ணகி சிலை எழுப்பிய சேரன் செங்குட்டுவன், சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோ அடிகள் போன்றவர்களின் புகழ் இன்றும் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

சேர நாட்டு மக்கள் கல்வியில் சிறப்புப் பெற்றிருந்தனர். தமிழ்மொழியே பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் காணப்பட்டது. தமிழ் மொழியை வளர்த்த சங்க கால புலவர்கள், அறிஞர்கள் வாழ்ந்ததும்; ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் கல்வியிலும், ஞானத்திலும் புலமை பெற்றிருந்ததும் சேர நாட்டில் தான். தமிழுக்கு இலக்கணம் வகுத்த புலவர் அகத்தியர் சேர நாட்டில் வாழ்ந்தவர். அவரது சீடர்களான தொல்காப்பியர், அதங்கோடு ஆசான், பணம்பாரனர் என்பவர்கள் வாழ்ந்ததும் சேர நாட்டிலாகும். தொல்காப்பியனாரின் சொந்த இடம் காப்பிக்காடு என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். சங்க காலத்தில் வாழ்ந்த பெண் புலவரான ஔவையார் சேர நாட்டிலுள்ள அதிகனூரில் பிறந்தார்.

இந்த ஊர் இன்று அழகியபாண்டிபுரம் என்று அழைக்கப்படுகிறது. ஔவையாருக்கு மூன்று இடங்களில் (தாழக்குடி, குறத்தியறை, முப்பந்தல்) கோயில்கள் உள்ளதால் அவர் இப்பகுதியைச் சார்ந்தவர் என்பது புலனாகுகிறது. தமிழ் புலவர்களில் சிறந்தவர்களாகப் போற்றப்படும் திருவள்ளுவர் பிறந்ததும் சேர நாட்டில் தான் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவர் சேர நாட்டில் உள்ள வள்ளுவ நாடு என்னும் இடத்திலுள்ள திருநயினார்குறிச்சி என்ற ஊரில் பிறந்தார் என வரலாற்று ஆசிரியர்கள் உறுதியாகக் கூறுகின்றனர்.[5]

சேரர்கள் சிறந்த வீரர்களாகக் காணப்பட்டனர். யானைப்படை, தேர்ப்படை, குதிரை படை, காலாட்படை போன்ற படைப்பிரிவுகள் வழியாகச் சேர நாட்டின் எல்கையை விரிவுப்படுத்தியது மட்டுமல்ல, எதிரிகளையும் எளிதாக வீழ்த்தி வெற்றிக்கண்டனர். தொடக்கம் முதலே சாதிய அமைப்புகள் இல்லாததால் அனைவரும் சமமாக ஏற்றத்தாழ்வுகள் இன்றி வாழ்ந்தனர். உடல் வலுமிக்க அனைத்து மக்களும் படையில் பங்கு பெற்றனர். விவசாயத் தொழிலே மிக முக்கியமான தொழிலாகக் காணப்பட்டது. குறிப்பாக, பனை ஏறும் தொழில்புரிபவர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். சங்க கால முதலே சேர நாட்டில் குறிப்பிட்ட எந்தச் சமயமும் இல்லை. ஆனால் முன்னோர்களை வழிபடும் வழக்கம் இவர்களிடம் காணப்பட்டது. மேலும் பத்திரகாளி என்னும் தேவதையைக் குல தெய்வமாக வழிபட்டு வந்துள்ளனர்.

சேர நாடு இயற்கை வளங்கள் மிகுந்த நாடாகக் காணப்பட்டது. மலைகளும் கடலும் சூழப்பெற்ற இந்நாட்டில் மழை செல்வமும், இயற்கை செல்வங்களும் மிகுதியாகக் காணப்பட்டன. விலையுயர்ந்த மரவகைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் மரங்களும் (வாணிபத்திற்கான ஏலம், சந்தனம், மிளகு, தேக்கு, காப்பி, வாசனை திரவியங்களை உற்பத்தி செய்யும் மரங்கள்) அதிகமாக நிறைந்திருந்தன. இதனால் சேர நாட்டு மக்கள் வாணிபத்தில் சிறந்து விளங்கினர். கடல் வழி வாணிபம் சிறப்புடன் செயல்பட்டு வந்தது. இஸ்ரவேல் மன்னன் சாலொமோன் காலத்தில் சேர நாட்டில் இருந்து வாசனை திரவியங்களான சந்தனம், ஏலம்,

மிளகு போன்றவை கொண்டுச் செல்லப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன. ரோமர்களின் ஆட்சிக்காலத்தில் வாணிபத் தொடர்பு சிறப்பாகக் காணப்பட்டது. இந்தக் கடல் வழியாகத் தான் இயேசுவின் சீடர் தோமா இந்தியாவிற்கு வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவ்வளவு சிறப்புடன் காணப்பட்ட சேர நாட்டில் ஆரியர்களின் குடியேற்றம் அடிமைத் தனத்தையும் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கிற்று. அதன் தொடர்ச்சியாக சனாதன தர்மம் (சாதி கோட்பாடுகள்) உருவாகி, இம்மண்ணின் மைந்தர்கள் அடிமைகளாக்கப்பட்டு கொடுமைகளை அனுபவித்தனர். அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன; உணர்வுகள் புதைக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாகத் தீண்டதகாதவர்கள் என ஒதுக்கப்பட்டு விட்டனர். இந்தத் தீமைகளால் இன்றும் தலைதூக்க முடியாதபடி தவிக்கும் அநேகம் மக்கள் இம்மண்ணில் வாழ்கின்றனர்.

திருவிதாங்கூர் பேரரசு கன்னியாகுமரி முதல் கொச்சி வரையுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், அரபிக்கடலுக்கும் இடையில் அமைந்த பகுதியாகும். வடக்கே கொச்சி, கோயம்புத்தூர், தெற்கே இந்துமகா சமுத்திரம், கிழக்கே மதுரை, இராமநாதபுரம், திருநெல்வே- மாவட்டங்கள், மேற்கே அரபிக்கடல் ஆகியவற்றை எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது. இப்பகுதியின் நீளம் ஏறத்தாழ 261 கிலோ மீட்டரும் (174 மைல்) அகலம் ஏறத்தாழ 112 கிலோ மீட்டரும் (75 மைல்) ஏறத்தாழ 9556 சதுர கிலோ மீட்டர் (6371 சதுர மைல்) பரப்பளவும் கொண்ட பகுதியாகும். இதில் மூன்றில் ஒரு பகுதி மலைகளால் சூழப்பட்டுள்ளது.[6]

கேரள மாநிலத்தின் தென்பகுதியும், இன்றைய தமிழ்நாட்டின் தென்கோடி மாவட்டமுமான கன்னியாகுமரியும் இணைந்த நிலப்பகுதியானது பதினெட்டு, பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை 'திருவிதாங்கூர்' என அழைக்கப்பட்டது. இப்பகுதி பத்மனாபபுரம், திருவனந்தபுரம், கொல்லம், சேர்த்தலை என்னும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டும் இந்த நான்கு பிரிவுகளும் 32 வட்டங்களாகப் (தாலுகா)

பிரிக்கப்பட்டுமிருந்தது. இப்பகுதி மக்களின் மொழி, கலாச்சாரம், பண்பாடு, அரசியல் அமைப்புச் சார்ந்து 'வட திருவிதாங்கூர்' என்றும், 'தென் திருவிதாங்கூர்' என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பத்மனாபபுரம், திருவனந்தபுரம் ஆகிய இரு பிரிவுகளும் கொல்லம் பிரிவின் சில பகுதிகளும், 'தென்திருவிதாங்கூர்' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. எனினும் தென்திருவிதாங்கூர் என்ற பகுதி தொடக்க முதலே திருவிதாங்கூர் என்றுதான் அழைக்கப்பட்டு வந்தது. இதில் நாகர்கோவில், இரணியல், பத்மனாபபுரம், திருவிதாங்கோடு என்னும் இடங்கள் சிறப்பான பகுதிகளாகும்.[7]

திருவிதாங்கூரின் தென் எல்லையான கன்னியாகுமரி முதல் மத்திய திருவிதாங்கூரிலுள்ள கொல்லத்தையடுத்த கல்லடையாறு வரையுள்ள பகுதியே வெற்றிகரமாகச் செயல்பட்டு சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்த இலண்டன் மிஷனெரிச் சங்கத்தின் பணித்தளமாகும். இப்பகுதி 'தென் திருவிதாங்கூர்' என அழைக்கப்பட்டது.[8]

1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்தியா ஆங்கிலேய ஆதிக்கத்தி-ருந்து விடுதலை பெற்றாலும், இந்திய நாட்டின் பல பகுதிகளில் சாதிய அடிப்படையிலும், மொழி அடிப்படையிலும் அஃடிமைத்தனங்கள் மிகுந்திருந்தன. 1956 அக்டோபர் 31-ஆம் நாள் வரையிலும் தமிழகத்தின் தென் எல்லை கன்னியாகுமரி அல்ல. முக்கடலும் சங்கமித்து முழு நிலவின் தண்ணொளியில் முகம் பதித்து நிற்கும் இன்றைய கன்னியாகுமரி 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் நாள் தமிழகத்தின் தென் எல்லை ஆயிற்று.[9]

தென்திருவிதாங்கூரை மொழியின் அடிப்படையில் இரண்டாகப் பிரித்தனர். தமிழ்மொழி பேசும் மக்கள் வாழும் பகுதி தமிழ்நாடு மாநிலத்துடனும், மலையாளமொழி பேசும் மக்கள் வாழும் பகுதி கேரள மாநிலத்துடனும் இணைந்தது.[10] அன்று முதல் நாகர்கோவிலைத் தலைநகராகக் கொண்டு அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு[11] என நான்கு வட்டங்களாகப் பிரிக்கப்ட்டுச் சிறப்பாகச் செயல்பட்டுவரும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆறு சட்டமன்றத் தொகுதிகளும்[12], ஒரு நாடாளுமன்ற

தொகுதியும்[13] உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி 16.76,034 மக்கள் உள்ளனர். இதில் 8,32,269 ஆண்களும், 8,43,765 பெண்களும், 60,639 மாற்றுத்திறனாளிகளும் உள்ளனர்.[14]

இயற்கை அமைப்பு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதியின் இயற்கை அழகு காண்போரின் கவனத்தைக் கவர்ந்துள்ளன. அன்றைய இந்திய மாநிலங்களுக்குள்ளே, முதல் நிலையில் நிற்கும் சிறப்பினைத் 'திருவிதாங்கூர்' பெற்றிருந்தது, என்பதனை வரலாற்று ஆசிரியரான T.K. வேலுபிள்ளை குறிப்பிடுகின்றார். M.E. கிரேன்ட் டப் (M.E. Grant Duff) என்பார் தம் விளக்க உரையில் ஆசியாவில் காணக்கூடிய அருங்காட்சிகளில் திருவிதாங்கூர் நிலப்பரப்பு அழகு வாய்ந்ததும், மகிழ்ச்சி அளிக்கிறதுமாய் அமைந்துள்ளது என எழுதியுள்ளார். சென்னை ஆளுநரான கன்னிமரா பிரவு (Lord Connemara) இதனை இத்தா-க்கு ஒப்புமைபடுத்தி 'தேவதைகளின் நகரம்' (Fairy Land) எனப்புகழுகின்றார்.[15] புகழ் பெற்ற யூத அரசனாகிய சாலமோனின் பணியாளர்கள் இங்கு வந்து வாசனைப் பொருட்களைப் பெற்றுச் சென்றதாக சாமுவேல் மேட்டீர் குறிப்பிடுகின்றார்.[16]

திருவிதாங்கூர் பகுதி இயற்கை வளம் கொழிக்கும் செழுமையான பகுதியாகும். 2400 சதுர மைல் (3600 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவில் அடர்ந்த வனப்பகுதி உள்ளது. இதில் 582 வகையான மரங்களும் (Timber trees) 3538 வகை தாவர இனங்களும் காணப்பட்டன. இதில் தேக்கு கருங்கா-, சந்தனம், ஈட்டி மூங்கில் போன்ற மரங்கள் மிகுந்துள்ளன. மொத்த நிலப்பரப்பில் 25 விழுக்காட்டு நிலப்பரப்பில் தென்னை மரங்களும், பனை மரங்களும் நிறைந்திருந்தன. ஏறத்தாழ 77,000 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகு, இஞ்சி, மஞ்சள், ஏலம், மா, பலா, வாழை, முந்திரி, ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை, மாதுளை, முத-ய மானிடருக்குப் பயன்படும் மரங்களும் நிறைந்து காணப்பட்டன.[17] இஞ்சி, மிளகு உற்பத்தி செய்யும் தலைமையிடமாகத் திகழ்ந்தது திருவிதாங்கூர்[18].

சங்ககால சமூக அமைப்புத் தற்போதைய சமூக அமைப்பினின்று வேறுபட்ட ஒன்றாகவே இருந்தது. ஆலமரத்தடி கிராம சபைகளும், நிர்வாகமும் ஒவ்வொரு கிராமத்திலும் மக்களிடையே சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்தியதால் பாகுபாடின்றி சாதிய ஏற்றத்தாழ்வின்றி மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். ஆனால் ஆரியர்கள் வட இந்தியாவி-ருந்து தென்னிந்தியாவிற்குக் குடிபெயர ஆரம்பித்த போது சமுதாய வாழ்வில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. கூட்டம் கூட்டமாக நுழைந்த ஆரியர்கள் சங்க காலத்திற்குப் பிறகு வ-மை வாய்ந்த சக்தியாக உருவெடுத்தார்கள். ஒன்பதாம் நூற்றாண்டில் ஆரிய சமயத்தின் செல்வாக்கு மிக உயர்ந்தது.[19]

ஆரியர்களின் வருகைக்கு முன் சாதிய அமைப்பு திருவிதாங்கூரில் இருந்ததாக அறியப்படவில்லை. ஆரியர்களின் குடியேற்றத்திற்குப் பிறகு இந்தியா வட மொழிமயமாக்கப்பட்டதன் விளைவாகச் சாதிய அமைப்புகள் தோன்றின.[20] சாதியற்றச் சமுதாயத்தில் சாதி முறையைத் தந்திரமாகப் புகுத்திக் கூரிய மதிநுட்பத்தாலும், புலமையாலும், அரசர்களின் நன்மதிப்பைப் பெற்றனர். அரசர்களின் நன்மதிப்பும், தார்மீக உறுதுணையும் பெற்ற பிராமணர்கள், தாங்களே சமூகத்தில் மிகவும் உயர்ந்தவர்கள் என்னும் கருத்தை உருவாக்கினர். "கி.பி. 8-ஆம் நூற்றாண்டி-ருந்து 11-ஆம் நூற்றாண்டு வரை தங்கள் முழு அதிகாரத்தையும் இங்கு உறுதியாக நிலை நிறுத்தினார்கள்".[21] சமூக அரசிய-ல் மாற்றங்கள் ஏற்பட்டன. சேர நாட்டின் அரசிய-ல் உடைவுகளும், உருக்குலைவுகளும் ஏற்பட்டு, பாரம்பரிய அரசாளுகை முறைமை மாறி மருமக்கள் தாய முறைமை உருவானது. இந்த நிலைமையால் சாதிய பாகுபாடு, பொருளாதார ஏற்றதாழ்வு எனச் சமுதாயமே ;உருக்குலைந்து மனித நேய உணர்வுகளும், பண்புகளும் அழிந்து போனது.

சாதிய அமைப்பு

தென்திருவிதாங்கூரின் சமுதாயப் பின்னணி சாதிய அமைப்புக்குள் பின்னிப் பிணைந்திருந்தது. சாதியைப் பின்பற்றுகின்ற வழக்கமும், சாதியின் அடிப்படையில் சமுதாயத்தைக் கூறுபோடுதலும் இந்தியாவுக்கே உரியதாகும். ஒருவர் செய்த தொழி-ன் அடிப்படையிலும், இனம், நிறம், சார்ந்தும் சாதியம் இந்தியாவில் வந்தது எனப் பல்வேறு கருத்துகள் நிலவினாலும், சாதியம் இந்து சமயத்தின் அமைப்பாதலால் இந்து சமய நூல்களின் அடிப்படையில் ஏற்பட்டன. குறிப்பாக ரிக் வேதத்தின் அடிப்படையில் சாதிய முறை அமைந்தள்ளது என்பர்.[22]

சமுதாயத்தில் அடிமைதனத்தை உருவாக்க சாதிய அமைப்பைப் புகுத்துவது இந்துத்துவத்தின் அடிப்படையான கொள்கையாகும். இது உலகில் வேறெங்கும் இல்லை. சமூக, பொருளாதார ஒழுங்குமல்ல. மாறாக, சமயத்தின் அடிப்படையில் ஏற்பட்டப் பிரிவு என J.W. கிளாட்சன் குறிப்பிடுகிறார்.[23] சமயத்தின் ஒழுங்கு சமூகத்தில் பல உடைவுகளை ஏற்படுத்தி, உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஆண்டான் அடிமை என்ற சமுதாயப் பகுப்பாகப் பின்னர் மாறியது.

திருவிதாங்கூர் சமுதர்யமானது சமயத்தின் அடிப்படையில் இந்துக்கள் (Hindu) எனவும், இந்துக்களல்லாதோர் (Non - Hindus) எனவும் பிரிக்கப்பட்டிருந்தனர். இந்துக்கள் சாதிய அடிப்படையில் சவர்ணர்கள் (Savarnas) அல்லது மேல்சாதியினர் எனவும் அவர்ணர்கள் (Avarnas) அல்லது கீழ்ச்சாதியினர் எனவும் பிரிக்கப்பட்டிருந்தனர். மேல் சாதியினர் சாதி இந்துக்கள் (Caste Hindus) எனவும், கீழ்ச் சாதியினர் சாதி இந்துக்களல்லாதோர் (Non-Caste Hindus) எனவும் அழைக்கப்பட்டனர்.[24] இதில் பல உட்பிரிவுகள் இருந்தன. 1891-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி திருவிதாங்கூர் பேரரசில் 578 சாதியப் பிரிவுகள் இருந்தன.[25]

பிராமணர்கள் - நம்பூதிரிகள்

பிராமணர்கள் சமூகத்தில் சகலவித சலுகைகளையும் பெற்று செல்வாக்கு மிக்கவர்களாக வாழ்ந்தனர். மேல்தள மக்கள் தாங்கள் மட்டும் தான் உயர் சாதி மக்கள் எனத் தங்களை அழைத்துக் கொண்டார்கள். இவர்களில் நம்பூதிரிகள் அல்லது மலையாளி பிராமணர், அன்னிய பிராமணர் அல்லது மலையாளி அல்லாத பிராமணர் என இருபிரிவினர் காணப்பட்டனர். கல்வி இவர்களின் தனிப்பட்ட உரிமையாயிருந்தது. சமய குருக்களாக, வேதங்களுக்கு விளக்கம் தரும் இறைதொண்டர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். அரசாங்கத்தில் உயர் அதிகாரிகளாகப் பணியாற்றினர். தங்களுக்கு நன்மை தருகின்ற, தங்களைத் தண்டனையி-ருந்து தப்புவிக்கின்ற சமூக, சமய அரசியல் சட்டங்களை வடிவமைத்தனர். இவர்கள் எத்தகைய கொடூரமான தவறு செய்தாலும் மரண தண்டனையி-ருந்து விலக்குப் பெற்றனர். கொடூர குற்றங்கள் செய்தாலும் சாதாரண குற்றம் செய்ததாகவே கணக்கிடப்பட்டன.[26]

திருவிதாங்கூர் அரசர்களும் பிராமணர்களைத் திருப்திப்படுத்த அவர்களின் ஆடம்பரமான வாழ்வுக்காக நாட்டின் செல்வங்களைச் செலவு செய்தனர். திருவிதாங்கூர் பகுதி முழுவதும் 'ஊட்டுப்புரை' என்று அழைக்கப்படும் பிராமண சத்திரங்களை எழுப்பி அதில் பிராமணர்களுக்கு இலவச உணவு வழங்கி மகிழ்வித்தனர். 19-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் குழந்தை திருமணத்தை ஆதரித்த பிராமணர்கள் விதவை மறுமணத்தைக் கடுமையாக எதிர்த்தனர்.[27] பிராமணர்களின் ஆடம்பர வாழ்வு திருவிதாங்கூர் பேரரசின் வளர்ச்சியைத் தடுத்தது. பொருளாதார தடுமாற்றம் ஏற்பட்டது. அடிமைகள் அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்ற நிலை எழுதப்படாதச் சட்டமாகப் பின்பற்றபட்டது. இவர்கள் அனுபவித்த எல்லையற்ற சமூக, பொருளாதார, அரசியல் சமய அதிகாரங்கள் திருவிதாங்கூர் மக்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருந்தன.

நாயர்கள்

இந்து சமயத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ளவர்கள் நாயர்கள். 18-ஆம், 19-ஆம் நூற்றாண்டுகளில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்த நாயர்கள் மலையாளிகள் என அழைக்கப்பட்டனர்.[28] பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் பணியாற்றிய இவர்கள் நிலச்சுவான்தார்களாகவும், செல்வமிக்க விவசாயிகளாகவும், வணிகர்களாகவும், கைவினைஞர்களாகவும் இருந்தனர். இவர்கள் படைவீரர்களாகவும், காவலர்களாகவும் பணியாற்றினர். போர் முறையிலும், ஆட்சி முறையிலும் பயிற்சி பெற்ற இவர்கள் அரசு அலுவலகங்களில் முக்கிய பதவிகளை வகித்து வந்தனர். தேவை ஏற்படும் போது அரசர்களுக்குப் படைகளைக் கொடுத்து உதவியதால் அரசர்கள் நாயர்களுக்குப் பயந்து வாழ்ந்தனர். பிராமணர்களோடு உள்ள உறவு இவர்களுக்கு அதிகாரத்தையும், செல்வாக்கையும் கொடுத்தன. தமது அடிமைகளை'விற்கவும் கொல்லவும்' உரிமை பெற்றிருந்த இந்த நிலச் சுவன்தார்களின் முன் தாழ்ந்த சாதியினர் அச்சத்தால் நடுங்கி, குறிப்பிட்டத் தூரத்தி-ருந்து பாதி வளைந்து, திறந்த மார்புடன் கையினால் வாயை மூடிப் பணிந்து நின்றனர். நாட்டின் முக்கிய நிகழ்வுகளைத் தீர்மானிக்கும் தலைவர்களாய் இவர்கள் இருந்ததால் அரசரும் அவர்களுக்குப் பயப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.[29] திருவிதாங்கூர் விளைநிலத்தில் பெரும்பகுதி இவர்களிடம் இருந்ததால் நாயர்களுடைய நிலங்களில் பணிபுரிவதற்காகத் தாழ்ந்த சாதியினர் அடிமைகளாய் மாற்றப்பட்டனர்.[30]

நாடார்கள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலும் உயர்சாதியினரால் 'சாணார்கள்' என அழைக்கப்பட்ட மக்கள் 1921 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் பிறப்பித்த ஆணையின்படி 'நாடார்கள்' என அழைக்கப்பட்டனர்.[31] தாழ்ந்த சாதியினர் என ஒதுக்கப்பட்ட பிரிவில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். பனைமரத்தில் ஏறி அதி-ருந்து கிடைக்கும் பதநீர் மற்றும் பனை சார்ந்த பொருள்களின் வழி தங்கள் வாழ்வினை நடத்திய இவர்கள் அருள்பணியரின் பணியால் அதிகம் ஈர்க்கப்பட்டு கிறிஸ்தவத்திற்கு

[illegible]. இவர்கள் திருவிதாங்கூரின் தென் பகுதியில் அதாவது கன்னியாகுமரிக்கும் திருவனந்தபுரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்தனர்.[32]

விவசாயப் பணியாளர்களான நாடார் இன மக்களின் சமூக வாழ்வு தாம் தாழ்த்தப்பட்ட, வருந்தத்தக்க இழிநிலையில் தான் இருந்தது. நாடார் இனப் பெண்களுக்கு இடுப்புக்கு மேலே ஆடை அணிவது, குடைகளை எடுத்துச் செல்வது, காலணி அணிவது, தங்க அணிகலன்கள் அணிவது, இடுப்பில் தண்ணீர் எடுத்துச் செல்வது போன்ற மனித நேயம் சார்ந்த தேவைகள் கூட மறுக்கப்பட்டன. இவர்களின் உழைப்பு நாயர் இனத்தவரால் சுரண்டப்பட்டது. ஊதியமற்ற நிலையில் இவர்கள் உழைக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். இப்பணி 'ஊழியம்' என அழைக்கப்பட்டது.[33] அரசு பல நியாயமற்ற வரிகளை இவர்கள் மீது விதித்தது. கி.பி. 1754 ஆம் ஆண்டு ஏற்பட்ட இராணுவச் செலவினங்கள் அனைத்தையும் ஈடுகட்டுவதற்காகத் 'தலைவரி' என்ற வரி நாடார் இனத்தவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. இவர்கள் மீது, 110 வகையான வித்தியாசமான வரிகள் விதிக்கப்பட்டன.[34] இவர்களின் நீண்டகால அடிமைத்தனத்தின் விளைவாக நாடார் இன மக்கள் எளிதில் அச்சம் கொள்பவர்களாய், ஏமாற்றப்பட்ட விரக்தியோடு காணப்பட்டனர். ஆனால் பிற சாதி மக்களை விட மனித நேய மாண்பில் சிறந்து விளங்கினர். இல்லற இணைவு உறவில் உண்மை உள்ளவர்களாகவும், சொல், செயல்களில் தூய்மை உள்ளவர்களாகவும், உண்மை பேசுகிறவர்களாகவும், நன்றியுணர்வு மிக்கவர்களாகவும், பிறருக்குக் கேடு விளைவிக்காதவர்களாகவும் இருந்தனர். பிராமணர்களைப் போன்று பாரம்பரியமிக்க மூட நம்பிக்கை நாடார் இன மக்களிடம் காணப்படவில்லை. இப்பண்பு, இவர்கள் நற்செய்தியின் உண்மையை விரைவில் ஏற்றுக்கொள்ள உந்துதல் தந்தது எனலாம்.[35]

இவர்கள் தீய ஆவிகளை அதிகமாக நம்பினர். மாடன், பத்திரகாளி, அம்மன், சாஸ்தா முத-ய தெய்வங்களை வழிபட்டனர். பொதுவாக நாடார் இனமக்கள் அவரவர் இல்லங்களிலேயே கோவில்

கட்டி வழிபட்டனர். இதற்காக வீட்டின் தென்மேற்கு மூலையில் வழிபட ஒரு வழிபாட்டு அறை கட்டி அதில் அவ்வீட்டின் மூத்தப் பெரியவர் வழிநடத்த ஏனைய உறுப்பினர்கள் வழிபட்டனர். கிராமத்திலுள்ள இந்து ஆலயங்களிலும் நாடார் இனத்தவரே பூசாரிகளாக இருந்தனர்.[36]

இதர இன மக்கள்

நாடார் இன மக்களைப் போல சமநிலையில் ஈழவ இனத்தவர் வாழ்ந்தனர். இவர்கள் அதிகமாக வடதிருவிதாங்கூரில் வாழ்ந்தனர். கடின உழைப்பாளிகளான இவர்கள் விவசாயிகளாகவும், தென்னை மரம் சார்ந்த பணிகளிலும் ஈடுபட்டிருந்தனர். நாடார்களுக்கு அடுத்தபடியாகத் தட்டான், கன்னான், தச்சன், கல்தச்சர், கொல்லன் ஆகிய ஐந்து உட்பிரிவுகளை உள்ளடக்கிய கம்மாளர் என்ற பிரிவினர் இருந்தனர். சலுகைகள் மறுக்கப்பட்டு சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்தவர்கள் வட திருவிதாங்கூரில் வாழ்ந்த புலயர்களும், தென்திருவிதாங்கூரில் வாழ்ந்த பறையர்களுமாவர். நீண்டகாலமாக உயர்சாதியினர்களுக்கும், அரசுக்கும் நில அடிமைகளாக இருந்த இவர்கள் ஊருக்கு வெளியே வாழ்ந்து வந்தனர். மேலும் மீனவர்கள், வெள்ளாளர், வேடர், குறவர், காணிக்காரர், மலையர் முத-ய இன மக்களும் வாழ்ந்தனர்.[37]

அரசியல் வாழ்வு

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் இந்தியா வந்த வெனீசிய நாட்டுப் பயணி மார்க்கோ போலோ, "திருவிதாங்கூர் பேரரசு ஆற்றல் மிகுந்த, சுதந்திரமான பேரரசு" எனக்குறிப்பிடுகிறார்.[38] அத்தகைய ஆற்றல் பெற்ற அரசு அயல் நாட்டுப் போர், உள்நாட்டுக் கலவரங்களால் உடைந்து, சிதைந்து, 18-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரையிலும் வேனாடு (Venad) என்ற பெயரில் சிறிய அரசாகக் காட்சியளித்தது. 1729-1758 வரையிலும் ஆட்சி செய்த மார்த்தாண்டவர்மா அரசரின் திறமையான ஆட்சியினால் மீண்டும் புத்துயிர் பெற்றது. பேரரசைச் சுற்றியுள்ள சிறிய அரசுகள் முறியடிக்கப்பட்டுத் திருவிதாங்கூர் எல்லை கொச்சி வரைக்கும் விரிவுபடுத்தப்பட்டது. கி.பி. 1731-ஆம் ஆண்டு நடைபெற்ற குளச்சல் போரில் பிடிபட்ட பெனடிக்ட் டே லனோய் (Benedict De Lannoy)

என்ற டச்சுக் கைதியை இராணுவத் தளபதியாக நியமித்து இராணுவத்தில் பல புதிய சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.[39] இதனால் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே கொச்சி வரை ஏறத்தாழ 7600 சதுர மைல் (11,400 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவுள்ள பகுதி மார்த்தாண்டவர்மாவின் ஆட்சியின் கீழ் வந்தது.[40] இவர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோடு நல்ல உறவை வைத்திருந்தார். ஆகவே தம் மரணத்திற்கு முன் இளவரசர் ராமவர்மாவிடம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியுடனான உறவை எந்தக் கடினமானச் சூழ-லும் முறித்து விடக்கூடாது, உறவைக் பராமரிக்க வேண்டும் எனக் கூறினார்.[41] திருவிதாங்கூரில் விளையும் மிளகினைப் பெற்றுக் கொண்டு அங்குள்ள போர்க் கருவிகளை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அளித்தது. இந்த உறவு 18-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தொடர்ந்தது.

மார்த்தாண்டவர்மாவுக்குப் பின் மன்னரான கார்த்திகைத் திருநாள் மன்னரின் ஆட்சிகாலம் (1758-1798) திருவிதாங்கூர் வரலாற்றில் ஒரு சிறந்த காலமாகும். இம்மன்னருடைய காலத்தில் தான் முதன் முதலாகத் தலைமை அமைச்சரை 'திவான்' என்று அழைத்தனர். இராஜா கேசவதாஸ் முதல் திவானாகத் திகழ்ந்தார்.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி

கி.பி. 1685-ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் ஆற்றிங்கல் இளவரசியிடம் அஞ்சங்கோ என்ற இடத்தைப் பெற்றனர். மிளகு வணிகத்தில் தனியுரிமைப் பெற்றிருந்த டச்சு நிறுவனத்தின் வாணிபத்தைத் தடுப்பதற்காக 1695-ஆம் ஆண்டு அங்கு தொழில் கூடத்தை நிறுவியது. ஆனால் 18-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் திருவிதாங்கூர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் பணித்தளமாய் மாறியது.[42]

மைசூர் சுல்தான்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மைசூர் சுல்தான் ஆற்றல் மிகுந்த ஆட்சியாளராய் ஆங்கிலேயருக்கு எதிராகப் பல

போர்களில் ஈடுபட்டார். இவரது கவனம் திருவிதாங்கூர் அரசின் மீது திரும்பியது. அதற்குரிய காரணங்களைத் திருச்சபை வரலாற்றாசிரியர் R.N. ஏசுதாஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அ. மைசூர் சுல்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த குறுநில மன்னர்களுக்கும், அதிகாரிகளுக்கும், திருவிதாங்கூர் அரசு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதரவுடன் உதவிகள் செய்தது.

ஆ. கிழக்கிந்தியக் கம்பெனி தென்னிந்தியாவில் விரிவடைய திருவிதாங்கூர் அரசு எல்லா உதவிகளையும் அளித்தது.

இ. 1778 ஆம் ஆண்டு பிரஞ்சு படைகளைத் தாக்க ஆங்கிலப் படைகள் திருவிதாங்கூர் வழியாகக் கடந்து செல்ல அனுமதியளித்தது.

ஈ. ஆங்கில மைசூர் போரில் ஆங்கில வீரர்கள் அஞ்சங்கோ என்ற இடத்தில் இறங்கி, போர்க் கருவிகளைப் பாதுகாக்க அனுமதி அளித்தது மட்டுமல்லாது, ஹைதர் அ-க்கு எதிராக யுத்தம் செய்ய ஆங்கில படையோடு திருவிதாங்கூர் படையும் அனுப்பப்பட்டது.[43]

மேற்கூறிய காரணங்களால் திருவிதாங்கூர் அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே இருந்த இழுவை நிலை, 1784 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலையீட்டினால் அமைதிக்கு வழி வகுத்தது. ஆனால் 1790-ஆம் ஆண்டு மீண்டும் மைசூர் சுல்தான் திருவிதாங்கூர் மீது போர் தொடுக்கவே ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி உதவியுடன் திவான் கேசவபிள்ளை தலைமையில் 1792-ஆம் ஆண்டு திருவரங்கப்பட்டினத்தில் (Seringapatam) வைத்து மைசூர் சுல்தான் தோற்கடிக்கப்பட்டார்.[44]

ஆங்கிலேய இராணுவம்

மைசூர் சுல்தானின் அச்சுறுத்தலால் திருவிதாங்கூர் இராணுவம் நவீன மயமாக்கப்பட வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. எனவே அரசர் தம்முடைய இராணுவத்திற்குப் பயிற்சியளிப்பதற்குரிய இராணுவத் தளபதிகளை அனுப்பித்தருமாறு கிழக்கிந்தியக்

கம்பெனியிடம் முறையிட்டார். ஆனால் சென்னை அரசு பயிற்சியளிப்பதற்குரிய இராணுவத் தளபதிகளை அனுப்புவதற்குப் பதிலாக இரண்டு படைப்பிரிவுகளை அனுப்பி அதற்குரிய செலவுகளையும் திருவிதாங்கூர் அரசரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆணையையும் பிறப்பித்தது.

1793 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருவிதாங்கூர் அரசர் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோடு ஒரு நிலையான உடன்படிக்கை வேண்டும் எனக் கேட்கவே 1795 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாள் நிலையான தற்காப்பு அளிக்கும் உடன்படிக்கை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், திருவிதாங்கூர் அரசருக்கும் இடையே ஏற்பட்டது. இந்த உடன்படிக்கை மூலம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஓர் ஆணையரின் (Commanding officer) தலைமையின் கீழ், இரண்டு படைப்பிரிவுகளை நிரந்தரமாக நிறுவி, பாதுகாப்புக் கொடுக்க ஒப்புக் கொண்டது. அரசர் அதற்குரிய அனைத்துச் செலவினங்களையும் வருடந்தோறும் கொடுக்க ஒப்புக் கொண்டார்.[45] இந்த உடன்படிக்கை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் திருவிதாங்கூருக்கும் இடையே ஓர் அசையாத அடித்தளத்தை ஏற்படுத்தியது.

அரசியல் மாற்றங்கள்

கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், திருவிதாங்கூர் அரசுக்கும் இடையே இருந்த நெருங்கிய உறவில் தொடர்ந்து வந்த அரசியல் மாற்றங்களால் விரிசல் எற்பட்டது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோடு நல்லுறவை வைத்திருந்த மன்னர் கார்த்திகைத் திருநாள் மரிக்கவே 12.02.1798 அன்று 16 வயதான பாலராமவர்மா அரசராக முடிசூட்டப்பட்டார். இவரது உறுதியற்ற தன்மையைப் பயன்படுத்தி மலையாள பிராமணராகிய ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி திருவிதாங்கூர் அரசைத் தம் கீழ் கொண்டுவந்தார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோடு நெருங்கிய உறவை வைத்திருந்த அனுபவமிக்கத் திவான் இராஜா கேசவதாஸ்க்கும், அரசருக்கும் இடையே அரசியல் பகையை விதைத்தார்.[46] இந்தச்

செயல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் திருவிதாங்கூர் அரசுக்கும் இடையே பிளவை உருவாக்கியது.

திருவிதாங்கூர் அரசுக்கு அதிக நெருக்கடி தந்த திப்புசுல்தான் 1799-ஆம் ஆண்டு மரணம் அடையவே போர் அபாயம் நீங்கியது. எனவே ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் உறவும், உதவியும் தேவையில்லை எனக் கம்பெனியின் உறவை விடுத்து பிரஞ்சு, டச்சு கம்பெனிகளோடு புதிய உறவை ஏற்படுத்த திருவிதாங்கூர் அரசு திட்டமிட்டது.[47] இது திருவிதாங்கூரில் ஆங்கில ஆதிக்கம் திணிக்கப்படக் காரணமாயிற்று.

கி.பி.1804-ஆம் ஆண்டு, திருவிதாங்கூர் அரசு, இராணுவத்தில் பணியுரியும் நாயர்களின் ஊதியத்தைக் குறைக்கவே திருவிதாங்கூரில் இராணுவக் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலப் பிரதிநிதியாக கர்னல் மெக்காலே, (Col. Macauly) திவான் வேலுதம்பி ஆகியோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினர். ஆனால் கலவரம் கர்னல் மெக்காலேயின் ராஜதந்திரத்தால் அடக்கப்பட்டது. உள்நாட்டு கலவரங்களை அடக்க ஆங்கிலப் படைகளின் உதவி வேண்டும் எனத் திருவிதாங்கூர் அரசு எண்ணியது. இது 1805- ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், திருவிதாங்கூர் அரசுக்கும் இடையே புது உடன்படிக்கை ஏற்படவும், இதன் மூலம் ஆங்கிலக் கம்பெனி இங்கு நிரந்தரமாக நிலைநிறுத்தப்படவும் காரணமாயிற்று. 1805-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் நாள் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை திருவிதாங்கூரில் பெரிய வரலாற்று மாற்றங்களைக் கொண்டு வந்தது.[48]

பொருளாதார வாழ்வு

திருவிதாங்கூரின் பொருளாதாரம் நிலச்சுவாந்தார் என்ற முறையில் அமைந்திருந்தது. 11-ஆம், 12-ஆம் நூற்றாண்டுகளில் நடந்த சோழப்படையெடுப்புகளில் பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. நாட்டில் அரசியல் நிலை சீர் குலைந்தது. சுயமாகச் செயல்பட்ட குறுநில மன்னர்கள் தலை தூக்கினர். ஏற்கனவே சமுதாயத்தில் உயர்நிலையில் இருந்த ஆலய தர்மகர்த்தாக்களான

நம்பூதிரிகள் இக்குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்தி ஆலய நிலங்களைத் தங்களுக்குச் சொந்தமாக்கினர். சாதாரண குடிமக்கள் மற்றும் விவசாயிகளின் நிலங்களையும், குறுக்கு வழிகளைக் கையாண்டு தங்களுக்குச் சொந்தமாக்கினர். நாளடைவில் நம்பூதிரிகள் பெரும் நிலச்சுவான்தார்களாக மாறினர்.[49]

அரச குடும்பதினரின் செலவுக்காகச் "சேரிக்கல்" என்ற பெயரில் ஒதுக்கப்பட்டச் சொத்துகளும், மத காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேவஸ்தானங்களும் போக எஞ்சிய நிலங்கள் முழுவதும் பிராமண நம்பூதிரிகளின் வசமாயின. நம்பூதிரி ஜமீன்தார் என்னும் முறை நடைமுறைக்கு வந்ததும் விவசாயிகள் தங்கள் நிலங்களின் உரிமையை இழந்தனர். விவசாய நிலங்களுடன் தொடர்புடைய புலையர், பறையர், குறவர், உழவர் இன மக்கள் அடிமைகளாக்கப்பட்டனர். விவசாயிகளின் உழைப்பின் பயன்களை ஜமீன்தார்கள் சுரண்டினர்.

வட இந்தியாவி-ருந்து வந்து தென் இந்தியாவில் குடியேறி, ஏழைகளை நயவஞ்சகமாகச் சுரண்டி, அவர்களின் உரிமையைப் பறித்து செல்வந்தர்களாக வாழ்ந்து அரசியல் அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்திருந்த ஆரியர்களை மகிழ்விக்கவும் அவர்களின் ஆசியைப் பெறவும், சத்திரியர்களான சிற்றரசர்கள் ஏராளமான கோயில்களைக் கட்டினர். வழிபாட்டிற்கும், ஏனைய நிகழ்ச்சிகளுக்கும், பராமரிப்புக்கும், பிராமணர்களின் உணவுக்கும் நாட்டின் பொருளாதாரத்தில் பெருமளவு செலவழிக்கப்பட்டது. அதைக் குறித்து அறிவர் ஜே. டபிள்யூ. கிளாட்சன் கூறும் போது, பிராமணர்களின் வசதியான வாழ்வுக்காகவும், ஆலயப் பராமரிப்பிற்காகவும், நாட்டின் மொத்த வருவாயில் இருபது விழுக்காட்டினைக் அரசர்கள் செலவழித்தனர்[50] என்கிறார். எடுத்துக்காட்டாக, கன்னியாகுமரியில் அமைந்துள்ள 'பகவதி அம்மன்' ஆலயத்திற்கு அரசின் ஒரு வருட மொத்தச் செலவு ரூ. 11,000/- என 1883 -ஆம் ஆண்டு நேட்டிவ் லைஃப் இன் திருவாங்கூர் (Native Life in Travacore) என்ற நூலை எழுதிய சாமுவேல் மேற்றீர் குறிப்பிடுகிறார்.[51] அப்படியானால் தென்திருவிதாங்கூரிலுள்ள அத்தனை ஆலயங்களுக்கும் அரசு செலவழித்த பணம் எத்தனை

கோடிகள் என்பதையும், ஏழைகள் எப்படி ஒடுக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் அறியலாம். தென்திருவிதாங்கூரில் அடிமைத்தனம் பெருக இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

திருவிதாங்கூர் பேரரசுக்குள் இருந்த சாதிய கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள், பொருளாதாரச் சீரழிவை ஏற்படுத்தியது. உயர்சாதியினர் வசதியாகவும், தாழ்த்தப்பட்ட சாதியினர் வறுமையிலும் வாழ்ந்த பரிதாப நிலை புதிய மாற்றங்கள் ஏற்பட உந்துதல் தந்தது. புதிய புதிய தொடக்கங்கள் ஏற்பட்டுத் தென்திருவிதாங்கூர் பகுதியில் கிறிஸ்தவத்தின் வேர் ஆழமாய் ஊன்றப்பட உதவியது.

1. P. Shungoonny Menon, *History of Travancore : From the Earliest Times*, Asian Educational Services, New Delhi, 1985, p.1.
2. ஜான். ஏ.ஜேக்கப், *தென்திருவிதாங்கூர் லண்டன் மிஷினெரி சங்க சரித்திரம்* 1806-1956, நாகர்கோவில், 1956, p.1.
3. Samuel Mateer, *The Land of Charity*, Asian Educational Services, New Delhi, 1991, p.1..
4. இளந்தோட்டம் கு. சுகுமாறன், *சேரர் வரலாறும் மக்கள் வாழ்வியலும்*, சாந்தினி பதிப்பகம், நாகர்கோவில், 2005, p.1.
5. *P. Gopala Krishnan, Gazetteers of India, Tamil Nadu State, Kanyakumari District, Madras Printers Industrial Society, Madras, 1995,* pp.829 - 833.
6. Samuel Mateer, *op.cit.*, p.2.
7. சாமுவேல் சகரியா, *தென்திருவிதாங்கோட்டு திருச்சபைச் சரித்திரச் சுருக்கம் பாகம் 1*, நாகர்கோவில், 1991, p.4.
8. ஜான்.ஏ.ஜேக்கப். *op.cit.*, p.6.
9. கு.பச்சைமால், *குமரி மாவட்டம் பிறந்த வரலாறு*, தமிழாலயம், சாமிதோப்பு, 2001,p.46.
10. J.W. Gladstone, "19th Century Mass Movement in South Travancore – A Result of Social Liberation", *Indian Church History Review,* Vol.X, No.1, June, 1976, p.54.

11. M. Jezer Jebaneasn, "District Profile", *Citizens Report on The State of Development and Environment in Kanyakumari District*, South Vision, Chennai, May 2001, pp.1,2.
12. கன்னியாகுமரி, நாகர்கோவில், பத்மனாபபுரம், குளச்சல், கிள்ளியூர், விளவங்கோடு.
13. கன்னியாகுமரி.
14. www. Google.com.
15. T.K. Velupillai, *The Travancore State Manual, Government of Kerala Vol. 1*, 1996, p.2.
16. Samuel Mateer, *Native Life in Travancore*, Asian Educational Services, New Delhi, 1991, p.l.
17. T.K. Velupillai, *op.cit.*, pp.5,6.
18. Samuel Mateer, *Native Life in Travancore*, p.l.
19. நிர்மால்யா, கேரளத்தின் முதல் த-த் போராளி அய்யன் காளி, தமிழினி, சென்னை, 2001, pp.21,22.
20. J.W. Gladstone, *Protestant Christianity and People's Movements in Kerala*, Seminary Publications, Trivandrum, 1984, p.17.
21. *Ibid.*, p.19.
22. துரை. ஆர்தர் ஜெயக்குமார், இந்திய வரலாற்றில் திருச்சபை : தேர்வு செய்யப்பட்ட தலைப்புகள், T.T.B.C, மதுரை, 2001, p.42.
23. J.W. Gladstone, *op.cit.*, p.16.
24. ஜவி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும், .KIDS, நாகர்கோவில், 2002, p.3.
25. J.W. Gladstone, *op.cit.*, p.17.
26. ஜவி பீட்டர், டி. பீட்டர், *op.cit.*, *p.3.*
27. J.W. Gladstone, *op.cit.*, p.23,24.
28. Samuel Mateer, *Native Life in Travancore*, p.111.
29. ஜாய் ஞானதாசன், ஒரு மறக்கப்பட்ட வரலாறு, இந்தியக் கல்விக் கழகம் மதுரை, 1998, p.25.
30. Samuel Mateer, *The Land of Charity*, p.35.
31. G.O. No. 785, July 1921, General Department, Government of Madras.
32. Samuel Mateer, *The Land of Charity*, p.39.
33. *Ibid.*, p.41.

34. Samuel Mateer, *Native Life in Travancore*, p.292.

35. Samuel Mateer, *The Land of Charity*, p.42.

36. J.W. Gladstone, *op.cit.*, pp.8, 29.

37. Samuel Mateer, *The Land of Charity*, pp.42,45.

38. K.P. Padmanabha Menon, *History of Kerala Vol.1*, Asian Educational Services, New Delhi, 1982, p.476.

39. J.W. Gladstone, *op.cit.*, p.50.

40. Robin Jeffrey, *The Decline of Nair Dominance : Society And Politics in Travancore 1847-1908*, London, 1975, pp.2,3.

41. R.N. Yesudas, *British Policy in Travancore* 1805-1859, Kerala Historical Society, Trivandrum, 1977, p.10.

42. *Ibid.*, p.9.

43. *Ibid.*, p.10.

44. *Ibid.*, pp.11,12.

45. *Ibid.*, p.11.

46. V. Nagam Aiya, *The Travancore State Manual Vol. I, Asian Educational Services*, Madras, 1906, p.417.

47. R.V. Yesudas, *op.cit., p.14*

48. *Ibid.*,p.18.

49. A. Sreedhara Menon, *Social and Cultural History of Kerala*, New Delhi, 1979, pp. 76, 77.

50. J.W. Gladstone, *"19th Century Mass Movement in South Travancore – A Result of Social Liberation,"*, *op.cit.*,p.56.

51. Samuel Mateer, *Native Life in Travancore*, p.22.

2

மக்களின் அவல நிலை

தந்தைக்குப் பின் மகன் அரசனாக முடிசூட்டப்படும் வாரிசுரிமையை உலகம் எங்குமுள்ள அரசுகள் கடைபிடித்தன. சேர மன்னர்கள் அனைவரும் மக்கள் தாய முறைமையிலே அரசர்களாக முடிசூட்டப்பட்டனர். ஆனால் ஆரியர்களின் குடியேற்றத்திற்குப் பின் திருவிதாங்கூர் அரசு மட்டும் இம்முறையைப் பின்பற்றாமல் மருமக்கள் தாய முறைமையைப் பின்பற்றினர். இம்முறையில் அரசனாகும் உரிமை தனது மகனுக்குப் பதிலாகத் தனது சகோதரியின் மகனுக்குக் கொடுக்கப்பட்டது. திற்பாப்பூர் அரச குடும்பத்தின் மன்னர் ஆதித்திய வர்மாவுக்கு ஆண் வாரிசு இல்லாததால் கொளத்து நாட்டி-ருந்து 2 அரசிகளைத் தத்தெடுத்து அவர்களை ஆற்றிங்கல் என்னுமிடத்தில் குடியமர்த்தினார். அவர்களில் மூத்த அரசிக்குப் பிறந்த மகன் தான் ஸ்ரீ வீரராம மார்த்தாண்ட வர்மா. ஆனால் இவரை திற்பாப்பூர் அரச குடும்பத்தினர் இவரை மன்னராக ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அதனால் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன.

இந்தக் காலத்தில் நம்பூதிரிகள் மன்னனின் நன்மதிப்பைப் பெற்றிருந்ததால் ஆதித்திய வர்மா நம்பூதிரிகளின் வாக்கைக் கேட்டு

அதன்படி செய்தார். இந்தத் தருணத்தைப் பயன்படுத்திய நம்பூதிரிகள் மன்னரின் சகோதரி மகனை மன்னராக முடிசூட்ட ஆலோசனை கூறினர். ஆதித்திய வர்மா மன்னரும் இதற்கு சம்மதம் தெரிவிக்க, தனது சகோதரியின் மகனை மன்னராக முடிசூட்டினார். மருமக்கள் தாய முறைமைப் படி முதன் முதலாக மன்னராக முடிசூட்டப்பட்டவர் வீர உதய மார்த்தாண்ட வர்மா (1314-1344) ஆவார். அவருக்குப்பின் மன்னராக முடிசூட்டப்பட்ட வீர கேரள வர்மா திருவடி பத்மனாப சுவாமி கோயிலுக்குத் தானங்கள் செய்தார். கோயில் நிர்வாகிகளுக்கும் அரசுக்கும் மோதல்கள் ஏற்பட்டதால் சில போற்றி பிராமணர்களை வதம் செய்தார். அரசுக்கு எதிராகக் கலகம் செய்த பிராமணர்களுக்குத் தண்டனை கொடுத்தது மாபெரும் பாதகம் அதற்காக அரசன் மன்னிப்புக் கேட்டு, அதற்கு பிராயசித்தமாக 3000 பணத்தைக் கோயிலுக்குக் கட்டவேண்டும் என நம்பூதிரிகள் கூறினர். நம்பூதிரிகளின் உதவியுடன் மருமக்கள் தாய முறைமைப் படி மன்னராக முடிசூட்டப்பட்டதால் நம்பூதிரிகளை எதிர்க்க முடியாமல் அவர்கள் சொற்படி கேட்டு பிராமணர்களைத் தண்டித்ததற்காக 3000 பணம் கோயிலுக்குக் கட்டினார். இதன் பின் நம்பூதிரிகள் அரசாட்சியையும் அரசாங்கத்தையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்[1].

மருமக்கள் தாய முறையானது பல கணவர்கள் முறையால் எழுந்த தீய பண்பாடு எனக் கூறலாம். நம்பூதிரிகள் குடும்பத்தில் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக மூத்த மகனுக்கு மட்டுமே திருமணம் செய்து வைத்தனர். மற்றவர்கள் திருமணம் செய்யாமல் வாழ்ந்தனர். நம்பூதிகளின் சுய நலனுக்காக உருவாக்கப்பட்ட கோட்பாடே "பல கணவன்" முறை ஆகும். இதனால் பெண்களுக்கிடையே கற்பு நெறி வாழ்வு இல்லாமல் போனது. தன்மான உணர்வும், கணவன் மனைவி என்னும் புனித உறவும் அழிந்தது. ஆண்களுக்கு குடும்பப் பற்று இல்லாததால் அடுத்தவர் உழைப்பைச் சுரண்டி வாழ்ந்தனர். நாளடைவில் சான்றோர்களாக வாழ்ந்த மக்களின் நிலங்களையும், உடைமைகளையும் தங்கள் சுக போகத்திற்காகப் பயன்படுத்தி அடுத்தவன் உழைப்பில் உல்லாசமாக வாழ்ந்தனர். நம்பூதிரிகள் தங்கள் சுய நலனுக்காகவும்,

சுகபோக வாழ்விற்காகவும், ஏழை மக்களின் நிலங்களையும், அரசனின் நிலங்களையும் கோயில்களின் பெயரில் மாற்றம் செய்து, அதன் வருமானத்தை அனுபவித்தனர். இதன் தொடர்ச்சியாகச் சம்பளமின்றி இலவசமாக வேலை செய்யும் ஊழியம் முறைமை, இடுப்புக்கு மேல் ஆடை அணிய தடை, தீண்டாமை, சாதிக் கொடுமைகள், வரிகள் என்னும் மனித நேய பண்புகள் இல்லாத பல தீமையான பழக்கங்கள் திருவிதாங்கூர் நாட்டில் உருவாகின.

திருவிதாங்கூர் சமுதாயத்தில் உருவான தீய பழக்க வழக்கங்களுக்கும், உயர் சாதி மக்களின் கொடுமைகளுக்கும் அடிமையாகி அவைகளால் பாதிக்கப்பட்டவர்கள் சான்றோர்களும், தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களுமே ஆகும். சமுதாயத்தில் காணப்பட்ட பழக்கவழக்கங்கள் மனித நேயத்திற்கு அப்பாற்பட்டவையாக இருந்தாலும் கொடிய பழக்க வழக்கங்கள் என்றோ, மனித நேயமற்ற செயல்கள் என்றோ கருதி அவற்றை மாற்றுவதற்கு எவரும் முயற்சி செய்யவில்லை.

சாதிக் கட்டுபாடுகள் என்ற பெயரில் மனிதநேயத்திற்கு மாறாக, கீழ்ச் சாதி இந்துக்கள் மீது வரிகள் விதிக்கப்பட்டு, அவர்களது உரிமைகளும் சுதந்திரமும் பறிக்கப்பட்டன. சாதி கட்டுபாடுகளை அழித்து விடாதபடி பாதுகாக்க, அதிகார வெறியில் வாழ்ந்த உயர்சாதி இந்துக்கள் கவனமாக இருந்தனர். கடுமையான சாதிக் கட்டுபாடுகள் தீண்டாமை என்னும் கொடியப்பழக்கத்திற்கு வழி வகுத்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர் தீண்டத்தகாதவர் என உயர்சாதியினரால் ஒதுக்கப்பட்டிருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் புலயரும், பறயருமாவர். அவர்கள் அருகில் செல்வதும், அவர்களைக் கண்களால் காண்பதும், அவர்கள் பேசுவதைக் கேட்பதும் கூட தீட்டு என எண்ணுமளவிற்குத் தீண்டாமை வேர்விட்டு வளர்ந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்குத் தொண்டு செய்வதற்கென்றே இறைவனால் படைக்கப்பட்டவர்கள் என உயர்சாதியினர் கருதினர். மனிதர்கள் மட்டுமல்ல பொருட்களும், தொழில்களும் கூட சுத்தமானவை, அசுத்தமானவை எனப் பிரிக்கப்பட்டிருந்தன. பசுவின் மாமிசம், அழுகிய மாமிசம், தோல் போன்ற தீட்டுள்ளவைகளைத்

தொடக்கூடாது. துணி துவைத்தல், முடிவெட்டுதல், ஆடு, மாடு போன்றவை இறைச்சிக்காக வெட்டுதல், தோல்பொருள்கள் வேலை செய்தல், மீன் பிடித்தல், கள் இறக்குதல் போன்ற தொழில்கள் தீட்டானவை எனக் கருதப்பட்டன. இத்தகைய தொழில்களைச் செய்வோரும் தீட்டானவர்களாகக் கருதப்பட்டனர்.

கீழ்ச் சாதியினரைத் தொடுவதும், பார்ப்பதும் அருகில் நெருங்குவதும் தீட்டு என்பதால் கீழ்ச்சாதியினர் உயர்சாதியினரை ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்திற்கு மேல் அருகில் நெருங்க முடியாது. அந்தத் தூரமும் கீழ்ச்சாதியினர் அனைவருக்கும் ஒன்று போல் குறிப்பிடப்படவில்லை. அவரது சாதியைப் பொறுத்து வேறுபட்டது. நாடார் அல்லது ஈழவ இனத்தைச் சார்ந்த ஒருவன் பிரமாணனிடமிருந்து 36 அடி தூரத்திற்கு அப்பாலும், நாயரிடமிருந்து 12 அடி தூரத்திற்கு அப்பாலுமே நிற்க முடியும். புலவர் இனத்தைச் சார்ந்த ஒருவனுக்கும், பிராமணனுக்கும் இடையில் இருக்க வேண்டிய குறைந்த அளவு தூரம் 96 அடி ஆகும். புலயன் ஒருவன் நாயர் இனத்தைச் சேர்ந்தவனிடமிருந்து 60 அடி தள்ளியே நிற்க வேண்டும். புலயன் ஒருவனை ஒரு பிராமணன் பார்த்தாலே அவன் தீட்டுப்பட்டவனாகக் கருதப்படுவான்.

இவ்விதக் கட்டுப்பாடுகளினால் கீழ்ச்சாதி இந்துக்கள் உயர் சாதியினர் வாழும் இடங்களுக்குச் செல்வது விலக்கி வைக்கப்பட்டிருந்தது. மட்டுமின்றி பொதுக்குளங்கள், கிணறுகள், சந்தைகள், ஆகியவற்றையும் பயன்படுத்த முடியாதபடி தடைகள் விதிக்கப்பட்டிருந்தது. பொதுசாலைகளைக் கூட பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. உயர் சாதி இந்துக்களின் கோவில்களுக்கு அருகில் அமைந்த சாலைகளைக் கீழ்ச்சாதியினர் பயன்படுத்துவதைத் தவிர்க்க அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. இச்சாலைகளை அவர்கள் உபயோகப்படுத்த முடியாததால் கடைகளுக்கோ, பணி செய்யும் இடங்களுக்கோ செல்ல வேறு வழியில் சென்றனர்.

கீழ்ச்சாதியினர் சாலைகளில் நடந்து வரும் போது உயர் சாதியினர் எதிரே வந்தால் சாலையை விட்டு இறங்கி அவர்கள் கடந்து செல்வது வரை ஒதுங்கி நிற்க வேண்டும். சில சமயங்களில் சுமக்க முடியாத பாரமான சுமைகளைச் சுமந்துக் கொண்டு வரும் போது கூட இவ்வாறு காத்து நிற்க நேரிடும். கீழ்ச்சாதியினர் இவ்வாறு செய்யத் தவறினால் கடும் தண்டனை அளிக்கப்பட்டது. அதே இடத்தில் அவர்களை வாளால் வெட்டி கொலை செய்யக்கூட ஒரு நாயருக்கு உரிமை உண்டு. இவ்விதியை மீறுபவர்களுக்கு மன்னிப்பளிக்க நாயருக்கு உரிமை கிடையாது. அவ்வாறு மன்னிப்பளித்தால் நாயருக்கும் அரசனால் மரண தண்டனை அளிக்கப்படும்[2].

அரண்மனைகள், சத்திரங்கள் மற்றும் உயர் சாதிக்காரர்களால் உபயோகிக்கப்படுகிற அரசுக் கட்டிடங்கள் இவற்றிற்குச் செல்ல கீழ்ச்சாதிக்காரர்களுக்கு அனுமதி கிடையாது. அரசு அலுவலகங்கள் நீதிமன்றங்கள் ஆகியவற்றி-ருந்து 50 அல்லது 60 அடி தூரத்திற்கு அப்பால் தான் அவர்கள் நிற்க முடியும். அவர்கள் அதிகாரிகளைச் சந்தித்து ஏதாவது மனுக் கொடுக்க வேண்டும் என்றால் அலுவலகங்களுக்கு வெளியே பல நாட்கள் மழையிலும், வெயி-லும் காத்து நிற்க வேண்டும்.

நீதிமன்றத்தில் கீழ்ச்சாதியைச் சேர்ந்த ஒருவனைச் சாட்சியாக விசாரிக்க நேரிடும் போது, அவர் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நிற்க, நீதிபதிக்கும் அவனுக்கும் இடையில் மற்றொருவன் நிற்பான். நீதிபதி கேள்விகளைக் கேட்கும் போது இடைவெளியில் நிற்பவன் அக்கேள்விகளைத் திரும்பவும் சத்தமாகக் கூறுவான். சாட்சியாக விசாரிக்கப்படும் கீழ்ச்சாதிக்காரன் தன் பதிலைக் கூற, இடைவெளியில் நிற்பவன் மீண்டும் அப்பதிலை நீதிபதி கேட்குமாறு சத்தமாகக் கூறுவான். இதனால் வழக்கு விசாரணைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஏனெனில் சில சமயங்களில் கேள்விகளும் பதில்களும் தெளிவாகக் கேட்பதில்லை[3].

கீழ்ச்சாதியினர் உயர்சாதியினரைப் போன்று ஆடைகள் அணிய அனுமதிக்கப்படவில்லை. ஆண்களும் பெண்களும் இடுப்பிற்கு மேலும், கால் முட்டுக்குக் கீழும் உடல் மறையும் படியாக ஆடைகள் அணியக் கூடாது. உயர் சாதியினர் முன்னால் இடுப்பின் மேற்பாகத்தின் மீது ஆடை அணிந்து சென்றால் அது அவர்களை அவமதிப்பதாகக் கருதப்பட்டது. கீழ்ச்சாதியைச் சேர்ந்த பெண்கள் கூட உயர் சாதியினரைக் கண்டால் மேலாடையைக் கழற்றி மரியாதை செலுத்த வேண்டும். இக்கட்டுப்பாட்டை மீறியவர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் அணிந்திருந்த மேலாடைகளும் கிழித்து எறியப்பட்டன. பெண்கள் இடுப்பில் தண்ணீர் குடம் சுமந்து செல்லக்கூடாது. மேலாடை அணியாத இந்தப் பெண்கள் தண்ணீர்க் குடத்தைத் தலையில் வைத்து இரு கைகளையும் உயர்த்தி குடத்தைப் பிடித்துச் செல்ல வேண்டும்.

1825-ஆம் ஆண்டு ஆற்றிங்கல் அரசி தனக்கு முன்பாக மேலாடை அணிந்து வந்த ஒரு பெண்ணின் மார்பகங்களை வெட்டி எறியுமாறு கட்டளையிட்டாள். தாழ்த்தப்பட்ட பெண்கள் தங்கள் கற்பையும், மானத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியாத சூழ-ல் அருட்பணியாளர்கள் மண்ணின் மைந்தர்களுக்குக் கொடுத்த விடுதலை உணர்வும், விடுதலைக்காக உழைத்த மண்ணின் மைந்தர்களின் தியாகமுமே இன்றைக்கு நாம் பெற்றுள்ள விடுதலையும், மேன்மையான வாழ்வும் என்பதை மறுக்கவும், மறக்கவும் முடியாது.

சுட்டெரிக்கும் வெயிலாக இருந்தாலும் சரி, கொட்டும் மழையானாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்கள் குடைபிடிக்கவோ, பாதங்களில் காலணி அணிந்து நடக்கவோ கூடாது. தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்களினால் செய்யப்பட்ட அணிகலன்கள் அணியவும், உலோகத்தினாலான பாத்திரங்கள் உபயோகிக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. பால் கொடுக்கும் பசுக்கள் வளர்ப்பதோ போக்குவரத்திற்கு வாகனங்கள் உபயோகிப்பதோ, ஓடு போட்ட வீடுகளில் வசிப்பதோ அனுமதிக்கப்படவில்லை. மீனவர்கள் வசிக்கும் குடிசைகளின் உயரம் 3 அடிக்கு மேல் இருக்க கூடாது என்ற வரையறை

செய்யப்பட்டிருந்தது. திருமண விழாக்களுக்காகப் போடப்படும் பந்தல்களை அலங்கரிக்கக் கூடாது[4].

இறைவழிபாடு செய்வதிலும் பலக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அரசும் உயர் சாதியினரும் நிர்வகித்து வந்த கோவில்களில் கீழ்ச்சாதியினர் வழிபாடு செய்ய அனுமதி மறுக்கப்பட்டது. கோவில்களில் வெளிப்பிரகாரங்களில் கூட கீழ்ச்சாதியினர் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் வழிபாட்டிற்கெனத் தனியாகக் கோவில்கள் கட்ட வேண்டியதிருந்தது. இந்தக் கோவில்களிலும் உயர் சாதியினர் வழிபட்டு வந்த சிவன், பிரம்மா, விஷ்ணு, ராமர் போன்ற தெய்வங்களை வழிபடக்கூடாது. வீரபத்திரன், மாடன், சுடலை, வீரன், மாடசுவாமி, இருளன், முத்தாரம்மன், பத்திரகாளி, இசக்கி போன்ற சிறு தெய்வங்களைத் தான் வணங்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

நீதி வழங்குவதிலும் பாகுபாடு காட்டப்பட்டது. சட்டங்களை விளக்குவதற்கும், நீதி வழங்குவதற்கும் பிராமணர்களுக்கு மாத்திரமே உரிமை வழங்கப்பட்டிருந்தது. மிக கொடிய குற்றங்கள் செய்தால் கூட பிராமணர்களுக்கு மரண தண்டனையி-ருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் கீழ்ச்சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு களவு செய்தல், பசுவைக் கொல்லுதல் போன்ற சாதாரணக் குற்றங்களுக்குக் கூட மரண தண்டனை வழங்கப்பட்டது. திருட்டுக் குற்றத்திற்காக அடிமைகளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை மிக கொடூரமானது. குற்றவாளியின் தோள்பட்டையில் ஒரு கூர்மையான இரும்பு கம்பியைச் சொருகி அதை ஒரு மரச்சட்டத்தில் பொருத்தி தரையில் செங்குத்தாக நாட்டி வைத்து அவன் தரையி-ருந்து பத்து அங்குல உயரத்தில் வெயி-ல் மல்லாக்காகக் கிடத்தப்படுவான். அவன் அந்த நிலையிலேயே கிடந்து மரணமடைய வேண்டும்[5].

நாஞ்சில் நாட்டு நாயர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட பிடாகைக்காரர்களது தேசிய சபையில் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்து இரண்டு அல்லது மூன்று பேர் வீதம் சுமார் 200 பேர் இச்சபையின் அங்கத்தினர்களாக இருந்தார்கள். இவர்கள்

ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் சுசீந்திரம் கோயி-ல் நடைபெறும் தேர் திருவிழாவின் போது அங்கே கூடி, சாதிச் சட்டங்களைப் பற்றி விவாதித்து முடிவெடுத்தனர். இவர்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, சாதிக் கட்டுப்பாடுகளை மீறுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கி வந்தனர். அரசர்கள் கூட தங்கள் விருப்பங்களைச் செயல்படுத்த முடியாத அளவிற்கு இந்தச் சபை செல்வாக்கு மிகுந்ததாய் இருந்தது.

ஒருவனது சகோதரியின் குழந்தைகளே அவனது வாரிசுகள் என நடைமுறையில் இருந்த வழக்கமே மருமக்கள் தாயம் என அழைக்கப்பட்டது. சம்பந்தம் முறை, பல கணவர் முறை ஆகியவற்றின் விளைவாகவே இப்பழக்கம் நடைமுறைக்கு வந்தது. ஒரு குழந்தையின் தாய் யார் என உறுதியாகத் தெரிந்த நிலையில் தந்தை யார் என நிச்சயமாகக் கூற முடியாத நிலை ஏற்பட்டதால் மருமக்கள் தாயம் நடைமுறைக்கு வந்தது. மருமக்கள் தாயத்தைப் பின்பற்றும் குடும்பம் *'தறவாடு'* என்று அழைக்கப்பட்டது. பல முக்கியமான சாதிகள் இம்முறையைக் கடைபிடித்தனர். பொதுவாகச் சத்திரியர்களிடையேயும் நாயர்களிடையேயும் இப்பழக்கம் காணப்பட்டது. ஈழவர்களில் ஒரு சாராரும் இம்முறையைக் கடைபிடித்தனர். திருவிதாங்கூர் மன்னர்களும் மருமக்கள் தாயம் முறையிலேயே ஆட்சி பீடத்தில் அமர்ந்தனர். இதனால் நாட்டில் ஒழுக்க கேடுகள் பெருகின[6].

இந்துக் கோவில்களில் தெய்வங்களுக்குப் பணிவிடை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பெண் பணியாளர்களைத் 'தேவதாசிகள்' என அழைத்தனர். திருமணமாகாத பெண் குழந்தைகளை அதாவது 6 முதல் 8 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை இதற்கு அர்ப்பணித்தனர். இதற்கென ஒரு பெரிய விழாவும் எடுக்கப்பட்டது. நடனம், பாட்டு, நாடகம் இவற்றில் பயிற்சி பெற்ற இவர்கள் கோவில்களில் தீபாராதனை நடத்துவது, நடனமாடுவது, பாட்டு பாடுவது போன்ற வேலைகளை செய்தனர். சமுதாயத்தில் ஒரு மதிப்பிற்குரிய இடத்தை பெற்றிருந்த இவர்கள் இசையிலும், நடனத்திலும், சிறந்த தேர்ச்சி பெற்று விளங்கினர்.

அப்படி தேர்ச்சி பெற்ற தேவதாசிகளுக்கு அரசர்கள் சிறப்பு பட்டங்கள் கொடுத்து கௌரவித்தனர். 1901 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி மொத்தம் உள்ள 416 தேவதாசிகளில் 243 பேர் அகஸ்தீஸ்வரத்தைச் சேர்ந்தவர்கள். கோவில்களில் பணிவிடை செய்து வந்த இவர்களை நாளடைவில் விபசாரத்திற்குப் பயன்படுத்தினர். எனவே உயர்ந்த நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இம்முறை சமுதாயத்தில் களங்கத்திற்குரிய ஒன்றாக மாற்றப்பட்டது[7].

திருவிதாங்கூரின் பொருளாதாரம் நிலமானிய முறையின் அடிப்படையில் அமைந்திருந்தது. இதனடிப்படையில் எழுந்ததே ஜென்மி முறை. நிலமானிய முறையில் திருவிதாங்கூர் முழுவதும் பல நாடுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நாடும் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியும் *'நாடு வழி'* என்ற தலைவனின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. இவர்களே ஜென்மிக்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் பிராமணர் மற்றும் நாயர் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இவர்கள் தங்களது நிலங்களை அடிமைகள் மூலமாகப் பயிர் செய்து வந்தனர். பயிர் செய்ய இயலாத ஜென்மிக்கள் தங்கள் நிலங்களை குடியான்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்தனர். அரசியல், சமூக, பொருளாதார அதிகாரங்கள் அனைத்தும் ஜென்மிக்களின் கையில் குவிக்கப்பட்டிருந்தன. இந்த ஜென்மி முறையில் உயர் பதவியில் இருந்தவர்கள் அனைத்து சலுகைகளையும் அனுபவித்தனர். ஆனால் சமுதாயத்தின் அடி மட்டத்தி-ருந்தவர்கள் சுரண்டப்பட்டனர். வரிவிதிப்பி-ருந்து அளிக்கப்பட்ட நிலையில் வரிச்சுமைகள் அனைத்தும், சமுதாயத்தின் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்ட கீழ்ச்சாதியினர் மேல் ஏற்றப்பட்டன. இதனால் கீழ்ச்சாதியினருடைய பொருளாதார முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. தங்கள் உழைப்பில் பெரும் பகுதியை வரி, அபராதம், நன்கொடை என்ற பெயர்களில் அரசுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், உயர் சாதியினருக்கும் கொடுத்து விட்டு பசியிலும், பட்டினியிலும் வாழ் நாட்களைக் கழிக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்[8].

கீழ்ச்சாதியினர் மீது சுமத்தப்பட்ட அபராதங்களுள் மிகவும் கடுமையான அபராதம் *'பிராயச்சித்தம்'* என்று அழைக்கப்பட்டது. குற்றவாளிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய அபராதமே பிராயச்சித்தமாகும். ஆனால் பல வேளைகளில் குற்றவாளிகள் அல்லாதவர்களிடமிருந்தும், இந்த அபராதத் தொகை வலுக்கட்டாயமாக வசூ-க்கப்பட்டது. பிராயசித்தம் என்ற பெயரில் தங்களுக்கு விருப்பமான தொகையை அரசு அதிகாரிகள் வசூ-த்தனர். அவர்கள் வசூ-த்த தொகையில் இருபது சதவிகிதத்தைத் தவிர மீதியை அவர்கள் கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஆனால் அவற்றை வசூ-த்த காரியக்காரர்கள் வசூ-ல் ஒரு சிறு பகுதியை மட்டும் கருவூலத்தில் செலுத்தி விட்டு மீதியைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். வரிகள் என்ற பெயரில் கீழ்ச்சாதியினர் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை அரசுக்குக் கொடுத்து வந்தனர். கீழ்ச்சாதி மக்களிடமிருந்து நூற்றுக்கு மேற்பட்ட வரிகள் வசூ-க்கப்பட்டன. இங்ஙனம் வசூ-க்கப்பட்ட முக்கியமான வரிகளில் ஒன்று 'புருசாந்தரம்' என்பதாகும். இது பரம்பரைச் சொத்துக்கு உரிமையுடைய வாரிசுகளிடமிருந்து வசூ-க்கப்படுகிற வரியாகும். இதன்படி சொத்தின் மதிப்பில் 40 சதவிகிதத்திற்கும் கூடுதலான தொகையை அரசுக்கு வரியாகச் செலுத்த வேண்டும். பிராயச்சித்தத்தைப் போன்று இந்த வரியிலும் ஒரு பகுதியை அதை வசூ-த்த காரியக்காரர்களே தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர்.

கீழ்ச்சாதியினரை அதிகப் பாதிப்புக்குள்ளாக்கிய வரி தலைவரி ஆகும். பதினாறு வயது முதல் அறுபது வயது வரையுள்ள எல்லா ஆண்களிடமிருந்தும் இவ்வரி வசூ-க்கப்பட்டது. பல வேளைகளில் இறந்தவர்களுக்கும் கூட இந்த வரியை அவர்களது உறவினர்கள் கொடுக்க வேண்டியதிருந்தது. 1807-08 ஆண்டிற்கான திருவிதாங்கூர் அரசின் வருவாய்க் கணக்கின் படி நாடார்களிடமிருந்தும், ஈழவர்களிடமிருந்தும் தலைவரி மூலம் வசூலான தொகை 88,044 ரூபாய் ஆகும். ஆனால் இதர சாதியினரிடமிருந்து வசூலான தொகை 4624 ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பணம் வீதம் வீட்டுவரி வசூலிக்கப்பட்டது. இதனை 'குப்ப காழ்ச்சா' என்று அழைத்தனர். நாஞ்சில் நாட்டிலுள்ள நாடார், பறையர், பள்ளர் போன்ற இனத்தவர் இந்த வரியால் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். வீடுகளின் கூரை மாற்றும் போது மனை வேய்ப்பான் கொள்ளுமிறை என்று மற்றொரு வரி கொடுக்க வேண்டும். அவர்கள் வளர்க்கின்ற பனை, தென்னை, கமுகு, மா, பலா, புளி, புன்னை, இலுப்பை ஆகிய மரங்களுக்கும், மரங்கள் வளர்கின்ற நிலங்களுக்கும் வரி கொடுக்க வேண்டும். பயிரிடப்படாத நிலங்களுக்கும் வரி செலுத்த வேண்டியதிருந்தது. குறவர், வேடர் போன்ற மலைச்சாதியினர் மலைச்சரிவிலுள்ள நிலங்களைச் சமப்படுத்தி தானியங்களோ, காய்கறிகளோ பயிர் செய்தால் அதற்கு மலைவரி என்று வரி கொடுக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் செய்கின்ற தொழிலுக்கும், தொழில் செய்வதற்கு உபயோகிக்கிற கருவிகளுக்கும் தனித்தனியே வரி செலுத்த வேண்டும். இசைக் கலைஞர்களாக இருந்தாலும், நாட்டியக் கலைஞர்களாக இருந்தாலும் வரி கொடுக்க வேண்டும். புல் அறுக்கிறவனும், சுமை தூக்குகிறவனும் கூட வரி செலுத்த வேண்டும். பனை ஏறுகிறவன் உபயோகிக்கிற ஏணிக்கு ஏணிக்காணம் என்ற வரியும், வேட்டையாடுகிறவன் உபயோகிக்கின்ற வில்லுக்கும், மீன்பிடிக்கிறவன் உபயோகிக்கிற கட்டுமரத்திற்கும், வலைக்கும், எண்ணெய் ஆட்டுகிறவன் உபயோகிக்கிற செக்கிற்கும், துணி நெய்கிறவனின் தறிக்கும் வரி செலுத்த வேண்டும். 'கள்' தயாரிக்கிறவன் ஒரு குடம் 'கள்'-ளிற்கு ஒரு நாழி 'கள்' வீதம் வரியாகக் கொடுக்க வேண்டும். எண்ணெய் வியாபாரிகளிடமிருந்து சிறிதளவு எண்ணெய் வரியாகப் பெறப்பட்டது.

தலையில் தலைப்பாகை அணிவதற்கு, குடை பிடிப்பதற்கு, பல்லக்கில் செல்வதற்கு, மீசை வளர்ப்பதற்கு, திருமணம் நடத்துவதற்கு என ஒவ்வொன்றிற்கும் அரசுக்குப் பணம் செலுத்தி அனுமதி பெற வேண்டும். தலையில் வளரும் உரோமத்திற்கும், பெண்களின் மார்பகங்களுக்கும் கூட வரி செலுத்த வேண்டும்.

பதினாறு முதல் முப்பத்தி ஐந்து வயது வரையுள்ள இளம் பெண்கள் இவ்வரியைக் கட்ட வேண்டும்.

வரி வசூ-க்கும் அதிகாரிகள் எல்லா வரிகளையும் குறிப்பிட்ட தொகைக்கு, பல மடங்கு அதிகமாகப் பணத்தை வாங்கி விட்டு குறைந்த தொகைக்கே ரசீது கொடுத்தனர். குறிக்கப்பட்ட தொகைக்கும் அதிகமாகப் பணம் வாங்காம-ருக்கப் பலர் வரி வசூ-க்கும் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தனர். வரி கொடுக்கத் தவறியவர்களின் முதுகில் பெரிய கல்லை ஏற்றி வைத்து வெயி-ல் பல மணி நேரம் நிற்க வைத்தல், சிறையில் அடைத்து சித்ரவதைச் செய்தல் போன்ற தண்டனைகளைக் கொடுத்தனர். தாமரைகுளத்திலுள்ள பதினெட்டுக் குடும்பங்கள், ஒரு வருடத்திற்கு செலுத்த வேண்டிய வரிப்பணமாகிய 112.5 பணத்தை மொத்தமாகக் கொடுக்குமாறு ஊர்த்தலைவனாகிய குருசாமியிடம் அதிகாரிகள் வற்புறுத்தினர். ஒரு வருடத்திற்குரிய தொகையை மொத்தமாகக் கொடுக்க இயலாமல் ஒரு மாதத்திற்கான வரியைக் கொடுத்து விட்டு மீதியைப் பின்னர் கொடுக்கலாம் எனக் கூறியதால், பழுக்க காய்ச்சிய இரும்பு கம்பியினை அவர் காதில் நுழைத்து, தொங்கவிட்டு துன்புறுத்தினர். அதே ஊரில் உள்ள நாராயணன், மாறப்பெருமாள் என்ற இருவரின் காதுகளிலும் இரண்டு மணி நேரம் இங்ஙனம் தொங்க விடப்பட்டிருந்தது. தென்திருவிதாங்கூரில் பெரும்பாலானவர்களுக்கு இந்தத் தண்டனை கொடுக்கப்பட்டு வந்தது. வரிக்கொடுக்கத் தவறியவனின் வீட்டிலுள்ள பெண்களுடைய தலைமயிரில் உலக்கையைச் சுற்றி கட்டித் தொங்கவிட்டு துன்புறுத்தினர். பெண்களின் முதுகில் பெரிய பாறாங்கல்லை ஏற்றி வைத்து குனிந்த நிலையில் பல மணிநேரம் நிற்க வைத்தனர். இந்தக் கொடுமைகளைப் பற்றி அரசுக்குப் புகார் மனுக்கள் கொடுத்தாலும் அதிகாரிகள் அவைகளைப் பெற்றுக் கொள்வதில்லை. இவ்வாறு கீழ் சாதியினரின் வருவாயில் பெரும்பகுதி அரசாலும் உயர் அதிகாரிகளாலும் உறிஞ்சப்பட்டதுமல்லாமல், உயர் அதிகாரிகளின் கொடுமைகளையும் கீழ்ச்சாதியினர் சகிக்க வேண்டியிருந்தது[9].

அரசின் வரிப் பளுவைச் சுமக்க முடியாமல் அவதிப்பட்ட கீழ் சாதி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அக்காலத்தில் நடைமுறையில் இருந்த சில வழக்கங்கள் முட்டுக்கட்டையாக இருந்தது. ஊழியம், விருத்தி என்பவை அத்தகைய வழக்கங்களுள் முக்கியமானவையாகும். இத்தகைய வழக்கங்கள் அம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்தைத் தடை செய்தது மட்டுமல்லாமல் அவர்களுடைய சுதந்திரமான வாழ்வுக்கும் சுய கௌரவத்திற்கும் பங்கம் விளைவித்தது. கீழ்ச்சாதியினர் அரசுக்கும், உயர்சாதியினருக்கும் வேலை செய்து கொடுத்து அதற்குரிய கூ-யைப் பெறாமல் இருப்பது ஊழியம் எனப்பட்டது. ஒவ்வொரு ஊரிலும் உள்ள பண்ணையார்களுக்கும், ஊர்த்தலைவர்களுக்கும் ஊதியம் இல்லாமல் வேலை செய்வதற்கென்று கீழ்ச்சாதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. கோவில் திருவிழாக்களின் போது வேலை செய்யவும், ஊட்டுப்புரைகளில் அடுப்பு எரிப்பதற்குத் தேவையான விறகுகளைக் காடுகளில் இருந்து சேகரிக்கவும் கீழ்ச்சாதி மக்கள் பயன்படுத்தப்பட்டனர். இவ்வேலைகளுக்காக அவர்களுக்குக் கூ- கொடுப்பதில்லை.

மகாராஜா நாட்டைச் சுற்றிப் பார்க்க செல்லும் சமயங்களிலும் அரண்மனையில் விழாக்கள் நடைபெறும் காலங்களிலும் இவர்கள் ஊதியமின்றி வேலை செய்ய வேண்டும். உப்பு தயாரிக்கும் இடங்களி-ருந்து விற்பனை கூடங்களுக்கு உப்பு சுமந்து செல்லுதல், அரசாங்க பண்டகசாலைகளைப் பாதுகாத்தல் போன்ற வேலைகளுக்கும் அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். காடுகளில் இருந்து கொண்டு வருகிற மரத்தடிகளைப் பாதுகாத்து வைக்கிற இடங்களைப் பாதுகாக்கவும், யானைகளைப் பிடிக்கும் குழிகள் வெட்டிப் போடப்பட்ட காடுகளைக் காவல் காக்கவும் அவர்களைக் கட்டாயப்படுத்தி பிடித்துக் கொண்டு சென்றனர். தொடர்ந்து பல நாட்கள் இங்ஙனம் காவல் புரிய வேண்டியிருந்தது. எனவே அவர்களது சொந்த அலுவல்கள் தடைப்பட்டதோடு செய்த வேலைகளுக்குரிய ஊதியமும் மறுக்கப்பட்டது. இதன் மூலம் இரட்டிப்பான இழப்பை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது[10].

ஊதியம் இல்லாத வேலை செய்வதற்காகக் குறைந்த குத்தகைக்கு நிலத்தை விட்டுக் கொடுக்கும் முறைக்கு விருத்தி என்று பெயர். அவ்வாறு நிலத்தைப் பெற்றவர்கள் விருத்திக்காரர்கள் எனப்பட்டனர். ஒரு தனிப்பட்ட காரியத்திற்காக அல்லது ஒரு குறிப்பிட்ட வேலை செய்வதற்காகக் கொடுக்கப்படும் விருத்தி அந்தப் பெயரிலேயே வழங்கப்பட்டது. எடுத்துக்காட்டாக கோவில்களில் முரசு அடிப்பதற்கும், கொம்பு ஊதுவதற்கும் கொடுக்கப்படும் நிலம் கூத்து விருத்தி, கொம்பு விருத்தி எனப்படும். கோவில்களுக்குப் பால் கொடுப்பதற்காகப் பால் விருத்தியும், திருவிழாக் காலங்களில் வாணவேடிக்கைகள் நடத்த வெடி விருத்தியும் கொடுக்கப்பட்டது. விழாக் காலங்களில் படகுகளை விட்டுக் கொடுப்பதற்காகக் கொடுக்கப்பட்ட விருத்தி வள்ள விருத்தி எனப்பட்டது. நிலங்களுக்கு வே- அமைத்தல் வண்டிகளில் சுமைகளை ஏற்றி இறக்குதல், மகாராஜாவின் குதிரைகளுக்குப் புல் வெட்டிக் கொண்டு கொடுத்தல், அரசுக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல், காவல் காத்தல் போன்ற வேலைகளை விருத்திக்காரர்கள் ஊதியம் பெறாமல் செய்து கொடுக்க வேண்டும். ஊதியம் பெறாமல் வேலை செய்ய வேண்டியிருந்ததனால் பலர் இவ்வேலைகளி-ருந்து தப்பிக்க அரசு ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்தனர். எனவே அரசு விழாக்கள் நடைபெறும் சமயங்களிலும், அரச குடும்பத்தினர் சுற்றுலாச் செல்லும் சமயங்களிலும் வேலை செய்வதற்காக முன் கூட்டியே ஆட்களைப் பிடித்து அடைத்து வைத்திருப்பர்[11].

இலவசமாக வேலை செய்வதுடன், விருத்திக்காரர்களின் கடமை முடிந்து விடுவதில்லை. தங்கள் பொருட்களையும் இலவசமாகக் கொடுக்க வேண்டும். எழுதுவதற்கு எழுத்தோலைக் கொடுத்தல், கோவில்களுக்கு எண்ணெய், பூ மாலை, பால் போன்ற பொருட்கள் கொடுத்தல், ஊட்டுப்புரைகளுக்குத் தேவையான விறகு மற்றும் காய்கறிகள் கொடுத்தல், அரசு யானைகளின் தீவனத்திற்காகத் தென்னை ஓலைகள் கொடுத்தல் ஆகியவையும் விருத்திக்காரர்களின் கடமையாகும். மீனவர்கள் தங்கள் படகுகளையும் இலவசமாக விட்டுக் கொடுத்தனர். அரச குடும்பத்தினர் சுற்றுலாச் செல்லும் போது உபயோகத்திற்காகவும்,

உப்பளங்களி-ருந்து உப்பு ஏற்றிச் செல்வதற்காகவும் அவர்களது படகுகள் வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்டு பல நாட்கள் அரசின் பாதுகாவ-லேயே வைக்கப்பட்டிருக்கும். இதனால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பல வேளைகளில் இவர்களும் அரசு ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்துத் தங்கள் படகுகளைக் கொடுக்காமல் தப்பித்துக் கொள்வதுண்டு. அரசரும், அவரது குடும்பத்தினரும் செல்வதற்காகப் படகுகள் தேவைப்பட்ட போது பூந்துறை என்ற கிராமத்திலுள்ள மீனவர்கள் 35 பணம் லஞ்சமாகக் கொடுத்து தங்கள் படகுகளைக் கொடுக்காமல் தப்பித்துக் கொண்டனர். பண்டிகைக் காலங்களில் அரச குடும்பத்தினருக்கும், உயர் சாதியினருக்கும் கோழிகள், முட்டைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை இனாமாகக் கொடுக்க வேண்டும். இவர்கள் கொடுக்கின்ற பொருட்களுக்கு விலையாக ஒரு சிறிய தொகையைச் சில சமயங்களில் கொடுப்பதுண்டு. பொருட்கள் கொடுப்பதினால் ஏற்படும் இழப்பு மாத்திரமல்லாது திருவனந்தபுரத்திற்கு அவைகளைக் கொண்டு சேர்க்க வேண்டுமானால் மூன்று நாட்கள் தேவைப்பட்டது. அந்த நாட்களில் அவர்கள் வேலை தடைப்பட்டது. இங்ஙனம் விருத்திக்காரர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கப் - பட்டார்கள். தங்கள் கடமைகளைச் செய்ய தவறியவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். தொடர்ச்சியாக மூன்று தடவை தங்கள் கடமைகளைச் செய்யத் தவறியவர்களிடமிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வாறாக, கீழ்ச்சாதியினர் பொருளாதார ரீதியாகப் பல இன்னல்களை அனுபவித்தனர்[12].

கீழ்ச்சாதியினர் என்று ஒதுக்கப்பட்டவர்களில் புலயர், பறையர், குறவர், வேடர் போன்றோர் அரசுக்கும், உயர் சாதியினருக்கும் அடிமைகளாக இருந்தனர். இவர்கள் அடிமைகளாகப் பிறந்து, அடிமைகளாக வாழ்ந்து, அடிமைகளாக இறந்தனர். மொத்த ஜனத்தொகையில் எட்டில் ஒரு பகுதியினர் அடிமைகளாக இருந்தனர். ஜென்மிகள் எனப்பட்ட நிலப்பிரபுக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குச் சொந்தமாக சில அடிமைகளை வைத்திருந்தனர். இவர்களை ஆடு மாடுகள், நில புலன்களைப்

போன்று விற்கவோ, வாங்கவோ, அடமானம் வைக்கவோ செய்யலாம். ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் இவ்வாறு விற்கப்பட்டனர். பஞ்சகாலங்களில் குழந்தைகளைக் கூட அடிமைகளாக விற்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு அடிமையின் விலை ஆறு ரூபாய் முதல் ஒன்பது ரூபாய் வரை இருந்தது. சில இடங்களில் ஓர் அடிமையின் விலை பதினெட்டு ரூபாய் வரை இருந்தது. பெண்களின் விலை ஆண்களின் விலையை விடக் குறைவாகவே இருந்தது.

அடிமைகளுக்கு அவர்களது எஜமானர்கள் போதுமான உணவு கொடுப்பதில்லை. அநேகர் இளவயதிலேயே நோய்களால் பீடிக்கப்பட்டு மடிந்து விடுவர். ஒரு சிலர் முதுமையை எட்டினாலும் அவர்களது நிலை பரிதாபத்திற்குரியதாயிருந்தது. அவர்களால் உழைக்க முடியாத நிலையில் எஜமானர்களால் துரத்திவிடப்பட்டு பிச்சை எடுத்தே உயிர்வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பிச்சை எடுக்கவும் இயலாத நிலையில் பட்டினியால் மடிந்தனர். வாழ்வில் எந்தச் சுகத்தையும் அனுபவிக்காத இம்மக்களுக்கு மரணம் ஒன்றே விடுதலையளித்தது[13].

கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம் ஆகிய பல சமயங்கள் காணப்பட்டாலும் பிராமணர்களின் சமயமே முக்கியமான சமயமாகும். திருவிதாங்கூர் அரசு தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும், செல்வத்தையும் பிராமணர்களின் சமயத்தைப் போற்றிப் பாதுகாக்கப் பயன்படுத்தி வந்ததால் எல்லா வகைகளிலும் பிரமாணர்கள் மேன்மையானவர்களாக வாழ்ந்தனர். மற்ற எல்லா மக்களும் பிராமணர்களின் சேவைக்கென்றே இறைவனால் படைக்கப்பட்டவர்கள் என்ற எண்ணம் மக்களின் மனதில் விதைக்கப்பட்டிருந்தது. உலகிலுள்ள அனைத்து சுகபோகங்களும் அவர்களுக்கே உரிமையானது என்று எண்ணினர். அருட்பணியர் சாமுவேல் மேற்றீர் காலத்தில் திருவிதாங்கூரில் காணப்பட்ட 3817 கோவில்களிலும் பிராமணர்களே அர்ச்சர்களாக இருந்தனர். இந்தக் கோவில்களுக்காகவும், அர்ச்சர்களுக்காகவும் நாட்டின் வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதி செலவிடப்பட்டு வந்தது. இந்தக்

கோவில்கள் அனைத்திலும் சுசீந்திரத்தில் அமைந்துள்ள தாணுமாலயப் பெருமாள் கோவிலே மிகவும் பெரியது. இந்தக் கோவிலைப் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் 32,851 ரூபாய் செலவிடப்பட்டது. பிராமணர்களுக்கு இலவச உணவு அளிப்பதற்காக நாடு முழுவதும் முக்கியமான கோவில்களின் அருகில் 'ஊட்டுப்புரைகள்' ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த ஊட்டுப்புரைகளில் பிராமணர்களுக்கு அரசு செலவில் தினமும் காலையும் மாலையும் இலவச உணவு வழங்கப்பட்டது. நாற்பத்தி இரண்டு ஊட்டுப்புரைகள் திருவிதாங்கூரில் இருந்ததாக சாமுவேல் மேற்றீர் கூறுகிறார். இந்த ஊட்டுப்புரைகளுக்கு மட்டும் ஆண்டு தோறும் மூன்று லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இங்ஙனம் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் பயன்படாத ஒரு கூட்டம் சோம்பேறிகளை அரசு உருவாக்கியது[14].

சமய வழிபாட்டில் பல மூடநம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் புகுத்தப்பட்டன. உருவ வழிபாடு, பல தெய்வ வழிபாடு, ப-யிடும் சடங்கு ஆகியவை அவர்களுடைய சமயத்தில் காணப்பட்டது. கருணையின் உருவமான இறைவனைப் பலவித பயங்கரமான தோற்றங்களைக் கொண்ட உருவங்களாக அமைத்து வழிபட்டு வந்தனர். ஒரே கடவுள் தத்துவத்துக்கு இடமளிக்கப்படவில்லை. சிவன், விஷ்ணு, பிரம்மா, பகவதி, சுப்பிரமணியன், சாஸ்தா, கணபதி, ஹனுமான், சரஸ்வதி, மாரியம்மன், சூர்யா, தன்வந்தரி, கருடன், மாடன் போன்ற பல ஆண், பெண் தெய்வங்களை வழிபட்டனர். அவர்களது வழிபாட்டு முறையில் ப-யிடும் சடங்கு முக்கிய அங்கம் வகித்தது. பறவைகளையும், மிருகங்களையும் ப-யிடுவதுடன் அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. உயிர்ப் ப- என்ற பெயரில் மனித உயிர்களும் அநியாயமாகப் பறிக்கப்பட்டன. இறைவனால் படைக்கப்பட்ட மனித உயிரை இறைவனுக்கு அர்ப்பணித்தால் தான் அவனது அருளைப் பெறமுடியும் என்னும் தவறான நம்பிக்கை காணப்பட்டது[15].

தீய ஆவிகளுக்குப் பயந்து அவற்றை வழிபடுவதைப் பேய் வழிபாடு என அழைத்தனர். இது கீழ்ச்சாதியினரிடையே தான் காணப்பட்டது. தீய ஆவிகளுக்குப் பேய், பிசாசு, பூதம், அலவறை

எனப் பல பெயர்களைச் சூட்டினர். மாடன், மல்லன், குட்டிச்சாத்தான், நீலன், இருளன், காலகுட்டி, காலன், கறுப்பண்ணன், கறுப்பன், முச்சந்தி மூப்பன், பூதத்தான், பூதத்தான் குட்டி, மாபூதத்தான், மாயகண்டன் பூதத்தான், மாய கொண்டான், வீரன், சுடலை, வீரசுடலை போன்ற ஆண் பேய்களையும் காளி, மாகாளி, பத்திரகாளி, உச்சினிமாகாளி, கருங்காளி, காந்தாரி, பேச்சி, கடலைப் பேச்சி, கள்ளைப் பேச்சி, மல்-, நீ-, நீலமை, சூ-, முத்தாரம்மன், இசக்கி, மாயி சக்தி, ஈனாயிசக்கி, வீரி, காரி போன்ற பெண் பேய்களையும் வணங்கினர். மாடன் என்ற பேய்க்கு மிகவும் பயந்தனர். சுள்ளை மாடன், குமிளி மாடன், அக்கினி மாடன், சுடலை மாடன், நீசமாடன், பன்றி மாடன் எனப் பல உ்ருவங்களை அவன் எடுத்ததாக நம்பினர். ஆண் பேய்களை விட பெண் பேய்களே மிகவும் கொடூரமானவைகளாகக் கருதப்பட்டன. அதிலும் குறிப்பாகப் பத்ரகாளியைக் கண்டு மிகவும் அஞ்சினர்.

இறந்து போனவர்களுடைய ஆவிகளே பேய்கள் எனவும், திருமணமாவதற்கு முன் இறந்த இளம் ஆண்கள் மற்றும் பெண்களின் ஆவிகளைக் கன்னிப் பேய்கள் எனவும் வணங்கி வந்தனர். வீடுகளில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறும் போது, கன்னி பேய்களுக்கு புதிய ஆடைகள், மற்றும் உணவுகளை வீட்டின் கன்னிமூலையில் படைப்பது வழக்கம். இப்பேய்கள் இருளடைந்த இடங்களிலும், மரங்களிலும், குடியற்ற வீடுகளிலும், காடுகளிலும் தங்கியிருப்பதாக நம்பினர். தொழில் துறைகளில் நஷ்டங்களும், விவசாயத்தில் இழப்புகளும் பேய்களாலேயே நேரிடுவதாக நம்பினர். மனிதருக்கும், மிருகங்களுக்கும், வியாதி வருகிறது பேய்களாலேயே என்று நம்பினர். வ-ப்பு நோயோ, மனநோயோ ஒருவருக்கு ஏற்பட்டால் அவர்களைப் பேய் பிடித்திருக்கிறதாக எண்ணிப் பயந்தனர். பேய் பிடித்தவர்களைச் செருப்பினாலும், துடைப்பத்தாலும் அடித்து, பல வகைச் சொற்களால் நிந்தித்தால் அந்தப் பேய்கள் விலகுமென்று எண்ணினர். மரத்தி-ருந்து விழுந்து ஒருவன் இறந்து போனால் அந்த மரத்திலாவது அடுத்த மரத்திலாவது ஒருவரும் ஏறத்துணிவதில்லை. கரிநாள் என்று

எண்ணப்படுகிற நாட்களில் யாரேனும் மரணமடைந்தால் அந்த வீட்டில், இன்னும் சிலருக்கு மரணம் நேரிடுமென்று பயந்து வீட்டை விட்டு விலகி, வேறு வீட்டில் வசிப்பார்கள். அப்படி விட்டுப் போகிற வீட்டுத் தலை வாச-ல், கள்ளியை நாட்டி, நாற்பத்தொருநாள் அதை அடைத்துப் போட்ட பின்பு சில சடங்குகள் செய்து விட்டு, திரும்ப அதில் குடியிருப்பார்கள். இரவு நேரத்திலும், நடுப்பகல் வேளையிலும் இந்தப் பேய்கள் குழந்தைகளுக்கும், குறிப்பாகத் திருமணமாகாத பெண்களுக்கும் துன்பங்கள் கொடுக்குமென்று மக்கள் பயந்தனர். எனவே பகல் நேரத்தில் தனிமையாகக் காட்டு வழிகளில் பயணம் செய்யப் பலரும் பயந்தனர். இரவு நேரங்களில் பயணம் செய்கிறவர்கள் வழிகளில் பேய்கள் தங்களை அணுகாதபடி இரும்பு ஆயுதங்களோ, இரும்பு கட்டின தடிகளோ, திரைச்சி மீனின் வால்களோ தங்களுடன் எடுத்துச் செல்வார்கள்[16].

பேய்களின் உபத்திரவங்களி-ருந்து விடுபடுவதற்காக மந்திரவாதிகளை வரவழைத்து பேய் விரட்டுகிறதும், சூனியம் பார்க்கிறதும், அவர்களின் ஆலோசனைப்படி பேய்க்கோவில்கள் கட்டி உருவங்கள் வைத்து ஆடு, கிடா, பன்றி, கோழி முத-யவற்றைப் ப-யிட்டு பொங்காலையிடுகிறதும் வழக்கமாயிருந்தது. மனித உயிரைப் ப-கொடுக்கும் நிகழ்ச்சிகளும் நடந்தன. பேய்க் கோவில்களில் பேயோட்டம் என்பது வழிபாட்டின் ஒரு முக்கியமான அம்சமாகும். பேய்களுக்குக் கொடை கொடுக்கும் போது கொட்டு வாத்தியங்களை முழக்குகிறதும், வில் அடித்துப் பாடுகிறதும் வழக்கம். அப்போது சிலர் ஆவேசம் கொண்டு ஆடுவர். அவர்கள் பேயாடிகள் எனப்பட்டனர். அவர்கள் ஆடும் போது அவர்கள் வாயினின்று புறப்படும் வார்த்தைகளை தெய்வ வாக்கு என்று நம்பினர்.

நாடார்களின் தலைமை இடமாகிய அகஸ்தீஸ்வரத்திலுள்ள முத்தாரம்மன் கோயில் ஒரு முக்கியமான கோவிலாகும். இந்தக் கோவில் பேய்களின் உதவியால் பத்து நாட்களில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. மண்டைக்காட்டிலுள்ள பகவதி அம்மன் கோயிலும் மற்றொரு முக்கியமான கோவிலாகும். இங்கு ஆண்டு தோறும் மார்ச்

மாதம் ஒரு பெரிய திருவிழா நடத்தப்பட்டது. இதில் திருவிதாங்கூரிலும் திருநெல்வே-யிலுமிருந்து ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். பலர் தங்களது நேர்ச்சைக் கடனை நிறைவேற்றுவதற்காக அங்கு வந்தனர். இந்தத் திருவிழாவில் ஒரு விசேஷமான சடங்கு நடத்தப்பட்டது. அது தூக்கம் என அழைக்கப்பட்டது. அந்தச் சடங்கைக் குறித்து மீட் லண்டன் மிஷன் தலைமைச் சங்கத்தாருக்கு எழுதியதை சகரியா பின்வருமாறு கூறியிருக்கிறார். நெய்யூருக்கடுத்த மண்டைக்காட்டில் வருஷந்தோறும் மார்ச் மாதம் ஒரு திருவிழா நடந்து வருகிறது. அந்தத் திருவிழா சம்மந்தமாய் தூக்கம் என்னப்படுகிற ஒரு குரூர சடங்கு, அங்குள்ள மக்களால் அனுசரிக்கப்படுகிறது. இந்த வருடம் எட்டுத் தூக்கமுண்டாயிருந்தது. கிணறுகளில் தண்ணீரிறைக்கிற துலா போல, ஒரு களி ஆணியில் உயரவும் தாழவும் தக்கதாக ஒரு துலாமரத்தை ஓர் கல்வண்டிச் சட்டத்தில் நிற்கிற கட்டளையில் மாட்டியிருக்கிறது. அந்தச் சிறு வண்டியைக் கொட்டு வாத்தியங்களோடும், ஸ்திரீகளோடும், கோவிலைச் சுற்றி வடம் கட்டியிழுத்தார்கள். அரசு அதிகாரிகள் கூடி நின்று அதை நடத்தினர். அந்த எட்டு பேரும் ஒருவனொருவனாய்த் தூங்கின போது, தூங்கினவனுடைய இடுப்பிலும், கழுக்கூட்டிலும் இரண்டு கச்சைகளைக் கட்டி தூக்க மரத்திலுள்ள கொக்கிகளில் மாட்டினார்கள்.

ஏதும் அறியாத மக்கள் வியாதி காலங்களில் மண்டைக்காட்டுத் தேவதைக்குத் தூக்கச் சடங்கு நிறைவேற்றுவோம் என்று நேர்ந்து கொள்வதால், அந்த நேர்ச்சையை நிறைவேற்றத் தூக்கப் பழக்கமுள்ள சில வைராபிகளுக்குக் கூ- பொருந்தி, அவர்களைக் கொண்டு இந்தக் கருமத்தை நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் வெறித்தவர்கள் போல் கண்சாடை காட்டிக் கைகால்களை ஆகாயத்தில் அசைந்தார்கள். தங்கள் இடது கையிலொரு பரிசையும், வலது கையில் வாளும் பிடித்து தங்கள் தலைக்கு மேலாய்த் தூக்க மரத்தில் அலங்கரித்திருக்கிற பூக்களை பறித்து வீசினார்கள். இரண்டு பேர் தங்கள் கைகளில் பிள்ளைகளை ஏந்தியிருந்தார்கள். அதற்கு பிள்ளைத் தூக்கமென்று பேர். அவ்விருவரும், குழந்தைகளைப் போட்டு விடுவார்களென்கிற பயம் பெற்றோருக்கும்

மற்றவர்களுக்கும் மிகுதியாயிருந்தது. ஆகிலும் அந்தப் பிள்ளைகளுக்கு மோசம் நேரிடாமல் தூக்கச் சடங்கு நடந்தது. இந்தச் சடங்கை நிறைவேற்றுபவன் ஒரு வருடம் அல்லது நாற்பத்தொரு நாட்கள் இதற்காக விரதம் மேற்கொண்டு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தத் தூக்கச் சடங்கு மக்களுக்கு உயிர்சேதம் விளைவிக்கக் காரணமாக இருந்ததால் திவான் சர் மாதவராவ் அதை நிறுத்தும்படி செய்தார்.

1. ஜாய் ஞானதாசன், ஒரு மறக்கப்பட்ட வரலாறு, இந்தியக் கல்விக் கழகம் மதுரை, 1998, p.25.
2. P. Shungoonny Menon, *History of Travancore : From the Earliest Times*, Asian Educational Services, New Delhi, 1985, p.1.
3. Samuel Mateer, *The Land of Charity*, Asian Educational Services, New Delhi, 1991, p.1..
4. ஜான். ஏ.ஜேக்கப், *தென்திருவிதாங்கூர் லண்டன் மிஷினெரி சங்க சரித்திரம்* 1806-1956, நாகர்கோவில், 1956, p.1.
5. ஐவி பீட்டர், டி. பீட்டர், *மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும்*, .KIDS, நாகர்கோவில், 2002, p.3.
6. இளந்தோட்டம் கு. சுகுமாறன், *சேரர் வரலாறும் மக்கள் வாழ்வியலும்*, சாந்தினி பதிப்பகம், நாகர்கோவில், 2005, p.
7. *P. Gopala Krishnan, Gazetteers of India, Tamil Nadu State, Kanyakumari District, Madras Printers Industrial Society, Madras, 1995,* pp.829 - 833.
8. சாமுவேல் சகரியா, *தென்திருவிதாங்கோட்டு திருச்சபைச் சரித்திரச் சுருக்கம் பாகம் 1*, நாகர்கோவில், 1991, p.4.
9. M. Jezer Jebaneasn, "District Profile", *Citizens Report on The State of Development and Environment in Kanyakumari District*, South Vision, Chennai, May 2001, pp.1,2.
10. கு.பச்சைமால், *குமரி மாவட்டம் பிறந்த வரலாறு*, தமிழாலயம், சாமிதோப்பு, 2001,p.46.
11. J.W. Gladstone, "19th Century Mass Movement in South Travancore – A Result of Social Liberation", *Indian Church History Review,* Vol.X, No.1, June, 1976, p.54.

12. C. Chandramouli, *Provisional Population totals (Cenus of India 2001)*, Tamil Nadu, Series – 34, p.18.

13. T.K. Velupillai, *The Travancore State Manual*, *Government of Kerala Vol. I*, 1996, p.2.

14. Samuel Mateer, *Native Life in Travancore*, Asian Educational Services, New Delhi, 1991, p.l.

15. நிர்மால்யா, கேரளத்தின் முதல் த-த் போராளி அய்யன் காளி, தமிழினி, சென்னை, 2001, pp.21,22.

16. J.W. Gladstone, *Protestant Christianity and People's Movements in Kerala*, Seminary Publications, Trivandrum, 1984, p.17.

3

திருவிதாங்கூரில் கிறிஸ்தவம்

கிறிஸ்தவம் என்னும் 'சர்வதேச சமயம்' திருவிதாங்கூரில் தடம் பதித்த வரலாறு ஆழமானது. கிறிஸ்தவத்தின் தாக்கத்தால் இப்பகுதியில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் ஒடுக்கப்பட்ட மானுட மக்களின் வரலாற்றில் புதிய தடயங்களாகவும், ஆதிக்கச் சக்திகளின் மானுட வரலாற்றில் வடுக்களாகவும் மாறின. "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்"[1] என்று இயேசு கிறிஸ்து தம் சீடர்களுக்கு அறிவுறுத்தியதின் படி அவர்கள் புறப்பட்டுப் போய் பல தேசங்களிலும் நற்செய்தியை அறிவிக்கலாயினர். "எல்லா மக்களினத்தாரையும் சீடராக்கித் தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுத்து"[2] திருச்சபைகளை நிறுவினர். இந்தியாவில் சீரிய கிறிஸ்தவர்கள், ரோமன் கத்தோ-க்க கிறிஸ்தவர்கள், சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் என முப்பெரும் அலைகளாக, வெவ்வேறு காலக்கட்டங்களில்[3] ஏற்பட்ட கிறிஸ்தவத்தின் வளர்ச்சி திருவிதாங்கூர் வரலாற்றில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

தூய தோமாவின் வருகை

டிசம்பர் 18, 1955-ஆம் ஆண்டு தூய தோமா திருநாள் விழா புது தில்-யில் கொண்டாடப்பட்டது. அன்றைய குடியரசு தலைவர் முனைவர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது "ஐரோப்பாவில் பல நாடுகள் கிறிஸ்தவத்தை அறிந்திராத காலத்தில் தூய தோமா இந்தியாவுக்கு வந்து கிறிஸ்தவத்தைப் பரப்பினார் என்றார்".[4] இந்தியாவின் முதல் பிரதமர், பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் தம் வாழ்க்கை வரலாற்றில் கி.பி. 52 ஆம் ஆண்டு திருத்தூதர் தூய தோமா மலபார் கடற்கரையில் வந்து இறங்கி கிறிஸ்தவத்தைப் பரப்பினார் எனத் தெரிவிக்கிறார். எனவே இந்தியாவில் இஸ்லாமிய சமயம் வருவதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தடம்பதித்தத் தொன்மையான சமயம் கிறிஸ்தவம்[5] என்பது தெளிவாகிறது.

இந்திய மரபின்படி, தூய தோமா கி.பி. 52-ஆம் ஆண்டு கடல் வழியாக கிரங்கனூர் வந்து கிரங்கனூர், பழையாறு, சாயல், நிரணம், கோக்கமங்கலம், கொல்லம், பாளையூர் முத-ய ஏழு இடங்களில் திருச்சபைகளை நிறுவினர்.[6] இதில் பாரூர், கோக்கமங்கலம், கொல்லம், நிரணம், சாயல், ஆகிய ஐந்து இடங்களும் திருவிதாங்கூர் பகுதியிலுள்ளன.[7] தூய தோமா பல இன மக்களைக் கிறிஸ்தவத்திற்குக் கொண்டு வந்தார். இதில் பக்கலோமட்டம், சங்கராபுரி, கள்ளி, களிக்காவு, கொய்க்கம், மாதேய்பூர், முட்டோடல், நெடும்பள்ளி, பனக்காமட்டம், கோட்டகளி முத-ய குடும்பங்கள் முக்கியமானவர்கள். இக்குடும்பங்கள் இன்றும் சீரிய கிறிஸ்தவர்களால் கண்ணியப்படுத்தப்படுகின்றனர்.[8] சங்கரபுரி, பக்கலோமட்டம் குடும்பங்களில் சிலர் தூய தோமாவினால் குருத்துவப் பணிக்குத் திருநிலைப்படுத்தப்பட்டு தனித்தன்மை வாய்ந்த குடும்பங்களாகத் திகழ்ந்தனர்.[9] "தூய தோமா சேரநாட்டின் முதல் கிறிஸ்தவ வழிபாட்டுமனையைச் சேர நாட்டின் தலைநகரான திருவிதாங்கோடு என்னும் நகரில் கட்டினார். தொன்மையான முதல் வழிபாட்டுமனை இன்றும் கல்குளம் தாலுகாவில் திருவிதாங்கோடு என்னும் சிற்றூரில் உள்ளது. இத்தொழுகையிடம் இன்று

தென் திருவிதாங்கூர் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது".[10]

சீரிய கிறிஸ்தவர்கள்

தூய தோமாவின் நற்செய்திப் பணியால் கிறிஸ்தவத்தை ஏற்றவர்கள் சீரிய கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர். சீரிய திருச்சபைதான் இந்தியாவில் மிகத்தொன்மையானது. தூய தோமாவின் மரணத்திற்குப்பின் சீரிய கிறிஸ்தவர்கள் அதிகம் துன்புறுத்தப்பட்டனர். மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மேனஸ் (Manes) கருத்துப்பள்ளியை ஏற்ற தோமா என்பவர் தென்திருவிதாங்கூரில் சமயப்பணியாற்றினார். கிறிஸ்தவர்களைத் தம் புரட்டுப் போதனையினால் சமய மாற்றம் செய்தார். ஆனால் எட்டுக் குடும்பத்தினர் இவரது புரட்டுப் போதனையினால் அசையாது உறுதியாய் நிலைத்திருந்தனர். இவர்கள் தரியாயாக்கள் (Thariyayikal) என அழைக்கப்பட்டனர். இந்த வழிமரபினர் இன்றும் தென் திருவிதாங்கூர் பகுதியிலுள்ள திருவிதாங்கோட்டில் வாழ்கின்றனர்.[11] என வரலாற்று ஆசிரியரான T.K. வேலுபிள்ளை குறிப்பிடுகிறார்.

ஆரிய பிராமணர்கள் கேரளாவில் வந்து தங்களைச் சாதிய அமைப்பில் உயர்ந்தவர்களாக அடையாளப்படுத்திக் கொள்வதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே, சீரிய கிறிஸ்தவர்கள் செல்வச் செழிப்புடன், சமூகத்தில் உயர்ந்தவர்களாகத் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். சாதிய அமைப்பில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட ஆரிய பிராமணர்களுக்குச் சமமான நிலையில் சீரிய கிறிஸ்தவர்கள் மதிக்கப்பட்டனர்.[12] இவர்களின் சமய சடங்குகளுக்கு, ஆயர்களும், பேராயர்களும் அணிந்த கவர்ச்சிகரமான ஆடைகளும், இவர்களைச் சிறப்பான சமுதாயத்தினராக மாற்றியது. உயர்சாதியினராகக் கருதப்பட்டப் பிராமணர்கள் நாயர்களைப் போல சீரியக் கிறிஸ்தவர்களும் கீழ்ச்சாதி மக்களோடு சகோதர மனப்பாங்குடன் உறவாடாமல், தனிப் பிரிவினராகவே வாழ்ந்து வந்தனர். நற்செய்தி பரப்பும் ஆர்வத்தை விட பாரம்பரியங்களைத்

தக்க வைக்க வேண்டும் என்பதே இவர்களின் தலையாயப் பணியாகக் கொண்டனர்.[13] தூய தோமாவைத் தங்கள் ஆதீன குருவாக ஏற்றுக் கொண்ட இவர்கள் தங்கள் பேராயர்களுக்கு 'மார் தோமா' (Mar Thoma) என்னும் மரியாதையான பட்டத்தைப் பல தலைமுறைகளாகத் தக்கவைத்துள்ளனர்.[14]

ரோமன் கத்தோ-க்க கிறிஸ்தவர்கள்

சீரிய கிறிஸ்தவப் பிரிவு திருச்சபையினரைத் தொடர்ந்து கத்தோ-க்க திருச்சபை பிரிவும் திருவிதாங்கூரில் உதயமானது. குறிப்பாக வாணிபத்திற்காக வந்த போர்த்து கீசியர் வழியாக ரோமன் கத்தோ-க்க திருச்சபை நிலையாக வேரூன்றியது.

போர்த்துகீசியர்

புதிய நிலப்பகுதிகளைக் கண்டு பிடிக்கும் ஆர்வமும், குடியேற்றம் அமைத்து வாணிபம் மேற்கொள்ளும் உந்துதலும், 15-ஆம் நூற்றாண்டில் உலக நாடுகளுக்கிடையே தரப்பட்ட அறைகூவல் எனச் சொல்லலாம். 1498-ஆம் ஆண்டு மே திங்கள் 17-ஆம் நாள் கள்ளிக்கோட்டைக்கு அருகே வாஸ்கோடகாமா என்ற போர்த்துகீசியர் கரையிறங்கினார். அதைத் தொடர்ந்து இநதியாவின் மேற்குக் கடலோரப் பகுதியில் வாணிப மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாளடைவில் போர்த்துகீசிய ஆளுகையின் தலைமை இடமாகவும், நிர்வாக மையமாகவும் கோவா மாறியது.[15] இவர்கள் வாணிப நோக்கில் இங்கு வந்தாலும், ரோமன் கத்தோ-க்கக் கிறிஸ்தவத்தைத் தம் ஆட்சியின் கீழ் உள்ள மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்பதும் நோக்கமாயிருந்தது. போர்த்துகீசியர் இப்பகுதியில் வாழ்ந்த சீரிய கிறிஸ்தவர்களோடு நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வுறவு பிற சமயத்தவருக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தையே மறக்கச் செய்தது. ஆனால் 1517-ஆம் ஆண்டு சீரிய கிறிஸ்தவர்களுக்கும், போர்த்துகீசியருக்கும் இடையே ஏற்பட்ட விரிசல், பிற சமயத்தவரிடையே நற்செய்திப் பணியாற்றத் தூண்டியது.[16] கொச்சிக் கடலோரத்தில் இந்துக்களாக வாழ்ந்த மீன்பிடிக்கும் தொழி-ல் ஈடுபட்ட முக்குவர் என்னும் பழங்குடி மக்கள் மிகச் சிறிய அளவில் கிறிஸ்தவத்தைத் தழுவ ஆரம்பித்தனர். கி.பி.

1535-1537-ஆம் ஆண்டிற்குள் தென்னிந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரை கிராமங்களில் வாழ்ந்த 20,000 பரவர்கள் கிறிஸ்தவராயினர். இவற்றுள் சில கிராமங்கள் இன்றைய குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவை.[17]

வெளிநாட்டி-ருந்து வந்த இஸ்லாமியர்கள் மீன் வாணிபத்தில் ஈடுபட தொடங்கியதால் சுரண்டல்கள் பெருகின, மோதல்கள் எழும்பின. மீனவர்கள் போர்த்துகீசிரியரின் உதவியை நாடினர். போர்த்துகீசியர் மீனவர்களுக்குக் கொடுத்த பாதுகாப்பில் கடற்கரையோர மீனவர்கள் அனைவரும் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.[18] எனினும் "கிறிஸ்தவ நெறிகளோ, கிறிஸ்தவச் சமய நம்பிக்கையோ, சமயச் சடங்குகளோ, நல்லொழுக்க விதிகளோ, கற்றுக்கொடுக்கப்படாத, பெயர் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர்"[19] என 1543-ஆம் ஆண்டு பிரான்சிஸ் சேவியர் எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். போர்த்துகீசியர்களின் வாழ்க்கை கிறிஸ்தவச் சமயத்தின் உயர்ந்த கோட்பாடுகளையோ, இயேசு கிறிஸ்து விரும்பிய சமத்துவத்தையோ, புதிய கிறிஸ்தவர்களிடம் வெளிப்படுத்தவில்லை.

தூய பிரான்சிஸ் சேவியர்

1542-ஆம் ஆண்டு மே திங்கள் பிரான்சிஸ் சேவியர் என்ற போர்த்துகீசிய இயேசு சபைத் துறவி கோவா வந்து சேர்ந்தார். ஏற்கனவே போர்த்துகீசியரின் வாழ்வினால் தொய்ந்திருந்த கிறிஸ்தவம் இவருடைய இனிய, எளிய, உயரிய வாழ்க்கை மூலம் புத்துயிர் பெற்றது. இவர் மக்களிடம் காட்டிய பேரன்பும், எளிய அணுகுமுறையும்[20] கிறிஸ்தவத்தின் உண்மை நிலையை மக்களுக்கு வெளிப்படுத்தியது. நாகர்கோவில் நகரிலுள்ள கோட்டாறு என்ற வாணிப மையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பணியாற்றிய இவருடைய இறைபணியின் வழியாகத் திருவிதாங்கூரிலுள்ள 14 கடற்கரை கிராம[21] மீனவர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றனர். சமயப் பணிக்குப் போர்த்துகீசிய ஆளுநர்கள் அளித்த பொருளுதவி ரோமன் கத்தோ-க்க சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. சிலை

வழிபாடு, ஆடம்பர விழாக்கள், சிலை சுமந்து பவனிகள் நடத்துதல், வெவ்வேறு சாதி மக்களுக்குத் தனித்தனி வழிபாட்டுமனைகள் அமைத்தல், சமூக அமைப்பில் புரையோடிப்போன அநீதிகளைக் கண்டுகொள்ளா நிலை, தனி மனித ஆன்மீக வளர்ச்சி போன்ற 'ஒத்துப்போகும்' நிலை இருந்ததால் கிறிஸ்தவம் தடையின்றி வளர்ந்தது.[22]

இதுவரையிலும் கடற்கரை மீனவக் கிராமங்களில் பரவிய ரோமன் கத்தோ-க்கக் கிறிஸ்தவம் 18-ஆம் நூற்றாண்டில் தென் திருவிதாங்கூரின் உட்பகுதியில் உள்ள மீனவர்களின் கிராமங்களை மையமாக வைத்து வளரத்தொடங்கியது.[23] '1765-ஆம் ஆண்டு கொச்சி மறைமாவட்டத்தின் புள்ளி விபரங்களின் படி, தென்திருவிதாங்கூர் பகுதியில் 27 உள்நாட்டு மீனவக் கிராம மக்கள்[24] ரோமன் கத்தோ-க்க சமயத்தைத் தழுவியுள்ளனர்'.[25] 1680-ஆம் ஆண்டு தென்திருவிதாங்கூர் பகுதியான வடக்கன்குளத்தில் நாடார்களின் முதல் கிறிஸ்தவ சபையோரின் கூட்டம் தொடங்கப்பட்டது. 1685-ஆம் ஆண்டு புனிதர் ஜாண். டி. பிரிட்டோவினால் இங்கு ஆலயம் கட்டப்பட்டது.[26] 1716-ஆம் ஆண்டு நான்காயிரத்திற்கும் அதிகமான நாடார் இன ரோமன் கத்தோ-க்க கிறிஸ்தவர்கள் இங்கு காணப்பட்டனர்[27] என வரலாற்றாசிரியர் Hambye குறிப்பிடுகிறார்.

தேவசகாயம் பிள்ளை

அன்றைய வட பிரான்ஸ் நாடாகவும், பின்னர் பெல்ஜியமாகவும் திகழ்ந்த நிலப்பரப்பில் பிறந்த கத்தோ-க்கரான பெனடிக்ட் டே லனோய் (Benedict de Lannoy) குளச்சல் போரில் பிடிக்கப்பட்ட கைதியானாலும், தென்திருவிதாங்கூருக்கு, கிறிஸ்தவத்திற்கு இறைவன் தந்த அருட்கொடை எனலாம். சாதி, சமயம் கடந்து இவர் ஆற்றிய பணிகள் வழியாய், கிறிஸ்தவத்தின் நெறிகளை வெளிப்படுத்தினார்.[28] நாயர் இனத்தைச் சேர்ந்த தென்திருவிதாங்கூர் மண்ணின் மைந்தராம் நீலகண்டன் என்ற நீலப்பிள்ளை இத்தளவாயின் வழி இயேசு கிறிஸ்துவைக் கண்டார். கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடக்குமுறையைத் திருவிதாங்கூர்

அரசர் தீவிரப்படுத்திய போது தேவசகாயம் கைது செய்யப்பட்டு 3 ஆண்டுகள் சித்ரவதைக்குப் பின் ஆரல்வாய்மொழி அருகிலுள்ள காற்றாடி மலையில் 1752-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டார்[29].

சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள்

அறிவுக் கண்களை அறியாமை அடைத்திருந்த காலகட்டம் மாறி, சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து செயல்படத் தூண்டிய காலம் தோன்றியது. இதுவே திருச்சபையில் மறுமலர்ச்சி ஏற்பட்டக் காலம். அறியாமையிலும், மூட நம்பிக்கையிலும் மூழ்கி இருந்த கிறிஸ்தவ மக்கள் விழித்தெழுந்து மானுட சமுதாயத்தைத் தட்டி எழுப்பினர். மானுடரின் சிந்தனை ஆற்றல் தூண்டப்பட்டது. பகுத்தறிவு சார்ந்து சிந்திக்க ஆரம்பித்தனர். ஆராய்ந்து உண்மையை உணரும் மனநிலையைப் பெற்றனர். இது கிறிஸ்தவ வரலாற்றில் புதிய திருப்பங்களை உருவாக்கியது.

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியரும், பதினேழாம் நூற்றாண்டில் டச்சுக்காரர், டென்மார்க் நாட்டினர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரும் இந்தியா வந்து குடியேற்றங்களையும், வாணிப மையங்களையும் நிறுவி வாணிபத்தில் ஈடுபட்டனர். இவர்களில் டச்சுக்காரர், டென்மார்க் நாட்டினர், ஆங்கிலேயர் ஆகியோர் சீர்திருத்தக் கிறிஸ்தவச் சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்களின் வருகைக்குப் பின் இந்தியாவில் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புது யுகம் ஆரம்பாயிற்று. ஆயினும் வாணிபமே இவர்களின் முக்கிய நோக்கமாக இருந்ததால் தங்கள் சமய நம்பிக்கையைப் பரப்புவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை[30]. அதிக லாபம் ஈட்டுவதே தங்களின் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டதால், மக்கள் நலனில் சிறிதேனும் அக்கரைக் கொள்ளாது, சுரண்டுவதும் கொள்ளையடிப்பதுமே தங்கள் குறிக்கோளாகவும், கொள்கையாகவும் கொண்டு செயல்பட்டனர். அருள்பணியர் இத்தீமைகளை எதிர்த்து வெளிக்கொணர்ந்துவிடுவர் என்ற அச்சத்தில் அருள்பணியை அனுமதிக்கவில்லை[31].

சீர்திருத்தக் கிறிஸ்தவத்தின் வருகையும், காலனித்துவ ஆதிக்கமும். ஒரே சமயத்தில் வேரூன்றின என்பது மறக்கப்பட முடியாத உண்மை. மேல்நாட்டு வர்த்தக சக்திகளின் ஆதரவு இல்லாமல் கிறிஸ்தவம் இங்கே வளர்ந்திருக்க முடியாது. சி.பி.பெர்த் (C.B. Firth) என்ற திருச்சபை வரலாற்றாசிரியர், "தரங்கம்பாடியில் டென்மார்க்கிய கொடியின் கீழ் மிஷன் ஊழியம் நடந்தது. 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய கொடியின் கீழ் ஆங்கிலேய மிஷன்கள் செயலாற்றினர். 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆளுகையின் கீழ் மிஷனெரி சங்கங்களின் பணி மிகவும் பெருகியது" என்கிறார்.[32]

நற்செய்திப் பணியில் அருள்பணி இயக்கங்கள்

16 ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் ஏற்பட்ட சமயப் புரட்சி, தொடர்ந்து ஏற்பட்ட போர், அமைதிக்குப்பின் ஏற்பட்ட நற்செய்தி பரப்பும் தாகம் ஆகியவை பல அருள்பணி இயக்கங்களை ஐரோப்பாவில் தோன்றச் செய்தது. 1698 ஆம் ஆண்டு ஆங்கிலேயத் திருச்சபை மக்கள் சிலரால் கிறிஸ்தவ அறிவு அபிவிருத்திச் சங்கம் (S.P.C.K) நிறுவப்பட்டது. 1701 ஆம் ஆண்டு நற்செய்தியை அன்னிய நாடுகளில் பரப்பும் சங்கம் (S.P.G) நிறுவப்பட்டது[33]. 1792 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பாப்திஸ்து மிஷனெரிச் சங்கம் (B.M.S), 1795 ஆம் ஆண்டு இலண்டன் மிஷனரிச் சங்கம் (L.M.S), 1799 ஆம் ஆண்டு ஆங்கிலச் சபை மிஷனெரிச் சங்கம் (C.M.S), 1819 ஆம் ஆண்டு வெஸ்-யன் மெதடிஸ்ட் மிஷனெரிச் சங்கம் ஆகியவை தோன்றின. அருள்பணி குறித்த பொறுப்புணர்ச்சி சீர்திருத்த திருச்சபையின் பல பிரிவினருக்குள்ளும் பரவியது. ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் வலுப்படுத்தப்பட்ட அதே காலகட்டத்தில், புதிதாக நிறுவப்பட்ட அருள்பணி இயக்கங்களும் தங்கள் பணியை ஆர்வத்துடன் செய்ய ஆரம்பித்தன[34].

1. திருத்தூதர் பணிகள் 1:8.
2. மத்தேயு 28:19.
3. சே.ரோ. நற்சீசன், குமரிக் கிறிஸ்தவர்களின் பயணப்பாதை, நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில், 2000, p.11.
4. துரை. ஆர்தர் ஜெயக்குமார், op.cit., p.1.
5. Frank Moraes, *Jawaharlal Nehru*, Jaico Publishing House, Bombay, 1959, p.467.
6. A.M. Mundadan, *History of Christianity India Vol.1*, CHAI, Bangalore, 2001, pp.29-31.
7. T.K. Velupillai, op.cit., p. 664.
8. A.M. Mundadan, *o.p. cit.*, p.33.
9. T.K. Velupillai, *op.cit.*, p.664.
10. டி.எச்.ஜார்ஜ், "புனித தோமா அப்போஸ்தலன் நிறுவிய நிலக்கல் தேவாலயம்", *தேசோபகாரி*, தொகுதி 51, பகுதி 6, செப்டம்பர் 1984, p.18.
11. T.K. Velupillai, *op.cit.*, p644.
12. Simon John, "Christian Dalits in Kerala", *Religion And Society*, Vol. XXXIV, No.3, Christian Institute for the study of Religion and Society, Publication Trust, September 1987, p.27.
13. S.S. ஹெக்டர், *தென்னிந்தியத் திருச்சபை-குமரி பேராயம், ஈத்தவிளை சேகர திருச்சபை வரலாறு: 1819-2001*, இவான்ஸ் பதிப்பகம், மார்த்தாண்டம், 2001, p.2.
14. Paul. S.K. Kadambavanam, *Origins of The Diocese of Tirunelveli*, Madras, 1967, p. XXVII.
15. துரை. ஆர்தர் ஜெயக்குமார், *op.cit.*, p.14.
16. சே.ரோ. நற்சீசன், *op.cit.*, p.29.
17. *Ibid.*, p.30.
18. *Ibid.*, p.36.
19. M.K. Kuriakose, *History of Christianity in India Source Materials*, ISPCK, Delhi, 1999, p.27.
20. ஜாய் ஞானதாசன், *op.cit.*, p.52.
21. "விளிஞ்ஞம் (Vilinjam), பூவார் (Puvar), கொல்லங்கோடு (Kollankode), தூத்தூர் (Tutur), புதுத்துறை (Puduturai),

தேங்காபட்டணம் (Taingapatanam), இனயம், மிடாலம் (Midalam), வாணியகுடி (Vaniyakudi), குளச்சல் (Kulachal), கடியப்பட்டணம் (Kadiapattanam), ராஜாக்கமங்கலம் (Rajakkamangalam), பள்ளம் (Pallam), மணக்குடி (Manakkudi), Georg Schurhammer, *Francis Xavier, His Life, His Times, India, 154-1541-1545 Vol.11*, Translated by M. Joseph Costelloe, The Jesuit Historical Institute, Rome, 1977, pp.463-469."

22. S.S. ஹெக்டர், *op.cit.*, p.3.
23. சே. ரோ. நற்சீசன், *op.cit.*, p.63.
24. மின்சிறை புதுக்கரை (Mungerreipuducarei), வருத்தட்டு (Valutarrei), குழித்துறை (Culiturrei), இரவிப்புதூர்க்கரை (Iraripuducarei), பளையகரை (Pillagarei), முதுக்குறிச்சி (Muducurrichi), புதுமட்டன் குறிச்சி (Padumatancurruchi), திக்கணங்கோடு (Ticanancoru), மேக்காமண்டகோ (Mircamandagao), பத்மநாபபுரம் (Paspanaduburao), உதயகிரி (Odiagri), இரணியல் (Iraniel), தலக்குளம் (Talacuri), பு-க்குறி (Pulecuri) திருவிதாங்கோடு (Travancore), கோட்டாறு (Cutate) Achiles Meersman, "Some Eighteenth Century Statistic of the Archdiocese of Goa and of the Diocese of Cochin" *Indian* Church History Review Vol. 11, No.2, December 1968, pp.110, 111.
25. சே.ரோ. நற்சீசன், *op.cit.*, p.63.
26. இராபர்ட் எல். ஹார்டுகிரேவ், *நாடார் வரலாறு, அமெரிக்கா*, தமிழாக்கம்: எஸ்.டி. ஜெயபாண்டியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2001, p.74.
27. E.R.Hambye, *History of Christianity in India* Vol. III, CHAI, Bangalore, p.166.
28. சே. ரோ. நற்சீசன், *மறைசாட்சி தேவசகாயம் : ஆவணங்கள் அடிப்படையில் ஒரு வரலாறு*, இறை ஊழியர் தேவசகாயம் திருப்பணிக்குழு, நாகர்கோவில், 2002, p.8.
29. ஆ.சிவ சுப்பிரமணியன், *கிறிஸ்தவமும் சாதியும் : வடக்கன்குளம் பிரிவினைச் சுவரிடிப்புப் போராட்டம்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2001, p.44.

30. ஜவி பீட்டர், டி. பீட்டர், சமயத் தொண்டர்களும் சமுதாய *மறுமலர்ச்சியும்*, KIDS, Nagercoil, 1999, p.3.

31. Malay Dewanji, *William Carey and the Indian Renaissance*, ISPCK, Delhi, 1996, p.15.

32. சிரில் புரூஸ் பெர்த், *இந்திய திருச்சபை*, T.T.B.C. மதுரை, 1995, p.192.

33. சிரில் புரூஸ் பெர்த், *op.cit.*, p.171.

34. *Ibid.*, p.192.

4

திருவிதாங்கூரில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

போர்த்துகீசியர், டச்சுக்காரர் இவர்களைப்போலவே ஆங்கிலேயர்களும் வாணிப நோக்கத்தோடு திருவிதாங்கூர் பகுதிக்கு வந்தனர். இரால்ஃப் பிட்ச் (Ralph Fitch) என்பவர் மலபார் கடற்கரையில் தம் காலடிகளைப் பதித்த முதல் ஆங்கிலேயர் ஆவார். இவர் வணிகர்களோடு இந்தியாவுக்கு 1583-ஆம் ஆண்டு மார்ச் 22-ஆம் நாள் கொச்சின் வந்து இறங்கினார். 1591-ஆம் ஆண்டு நவம்பர் 22-ஆம் நாள் வரை இங்கு தங்கினார். இவர்தான் இந்தியாவிற்கு வந்த முதல் ஆங்கிலேயர். எனவே இவர் ஆங்கிலேய முன்னோடி (Pioneer English Man) என அழைக்கப்படுகிறார்[1].

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி

இந்திய மண்ணில் முதன் முத-ல் காலடி எடுத்து வைத்த சீர்திருத்த வாணிப நிறுவனம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாகும். இக்கம்பெனி, 1600-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் இலண்டன் மாநகரில் தொடங்கப்பட்ட ஒரு தனியார் வாணிபக் குழு ஆகும். 1607-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி படைத்தளபதி ஹாக்கின்ஸ் (Captain Hawkins) தலைமையில் சூரத் (Surat) வந்தடைந்தது. 1612-ஆம் ஆண்டு இங்கு ஆங்கிலேய வாணிப மையம் நிறுவப்பட்டது. தொடக்க காலத்தில் இந்தியாவின் சில பகுதிகளில் தான் வாணிப மையங்களை வைத்திருந்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல வாணிப

ஆங்கிலேயர் பெற்றனர். 1644-ஆம் ஆண்டு விழிஞ்ஞம் (Vizhinjam) என்ற இடத்தில் வாணிபத்தளம் அமைக்க வேணாடு (Venad) அரசரிடம் அனுமதி பெற்றனர். 1646-ஆம் ஆண்டு கோழிக்கோட்டில் (Calicut) வாணிபத்தளம் அமைக்க செமோரின் அரசர் ஆங்கிலக் கம்பெனிக்கு அனுமதி கொடுத்தார்[3].

அஞ்சங்கோ (Anjego) ஆங்கில ஆதிக்கத்தின் வளர்ச்சி

1684-ஆம் ஆண்டு வாணிபத்தளம் அமைக்க ஆற்றிங்கல் இளவரசியிடம் (Rani of Attingal) அஞ்சங்கோ என்ற இடத்தைப் பெற்றனர். 1690-ஆம் ஆண்டு இதை நிறைவு செய்தனர். போர் ஆயுதங்களைச் சேகரித்து வைக்கும் கிட்டங்கி ஒன்றை அங்கு ஏற்படுத்திப் போர் ஆயுதங்களைச் சேகரித்து வைத்தனர். இது மும்பைக்கு அடுத்தபடியாக உள்ள மிகப்பெரிய ஆயுதக் கிட்டங்கியாகும். பின்னாள்களில் மத்தியக் கேரளத்திலும், கேரளத்தின் தெற்குப் பகுதியிலும் ஆங்கிலக் கம்பெனியினர் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த அஞ்சங்கோ அடித்தளமாய் அமைந்தது[4].

ஆங்கிலேயரின் வாணிபச் சுரண்டல்கள், நெறியற்ற வாழ்வின் மூலம் புதிய சந்ததியை உருவாக்குதல், ஆற்றிங்கல் இளவரசியோடு கம்பெனியார் வைத்திருந்த போ-த்தனமான நெருங்கிய உறவு, ஆங்கிலேயரின் பலாத்காரமான செயல்பாடுகள், கம்பெனி வணிகர்கள் மீதும், அதன் தலைவர் ஜிஃபோர்ட் (Gyfford) மீதும் மண்ணின் மைந்தர்களுக்குப் பகையை ஏற்படுத்தியது. இந்தப் பகை வன்முறையாக வெடித்தது. 1721-ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ஆம் நாள் 140 ஆங்கிலேயர்களை ஆற்றிங்கல் அருகே பட்டப்பகல் வெட்டிப் படுகொலை செய்தனர்[5]. அஞ்சங்கோ கோட்டைச் சூறையாடப்பட்டது. இந்தக் கிளர்ச்சி, ஆங்கிலேய அதிகாரத்திற்கு எதிராக நிகழ்ந்த அமைப்பிற்குட்பட்ட முதல் கிளர்ச்சியாகும். இதைத் தொடர்ந்து ஆங்கிலக் கம்பெனிக்கும், ஆற்றிங்கல் இளவரசிக்கும் இடையே ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஆங்கிலக் கம்பெனிக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய ஆற்றிங்கல் இளவரசி மிளகு வாணிபத்திற்குரிய தனி முழு உரிமையைக் கம்பெனிக்குக் கொடுத்தார். அதோடு

கம்பெனி விரும்பும் இடங்களில் வாணிபத்தளங்களை அமைக்க அனுமதியும் அளித்தார்[6].

ஆங்கிலேயத் திருவிதாங்கூர் உடன்படிக்கை

1723-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆங்கிலேயருக்கும், திருவிதாங்கூர் அரசருக்கும் இடையே நட்புறவின் அடிப்படையில் முதல் உடன்படிக்கை ஏற்பட்டது. இதில் அரசர் மார்த்தாண்ட வர்மாவும், ஆங்கிலக் கம்பெனி சார்பில் அஞ்சங்கோ ஆணையர் அலெக்ஸாண்டர் ஓர்மன் (Dr. Alexander Ormn) - ம் கையெழுத்திட்டனர். இவ்வுடன்படிக்கையின்படி "Trippappur Swarupam" தலைமையில் ஆங்கிலக் கம்பெனி தம் சொந்த செலவில் குளச்சல் பகுதியில் ஒரு பாதுகாப்பு அரண் (Fort) கட்டி அதில் போர் ஆயுதங்களையும், வெடிப்பொருள்களையும் வைப்பதற்குரிய அனுமதி தரப்பட்டது. இதுவே முதன் முதல் ஆங்கிலக் கம்பெனிக்கும், இந்தியாவுக்கும் ஏற்பட்ட முறையான உடன்படிக்கையாகும். 1723-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அலெக்ஸாண்டர் ஓர்மன் திருவிதாங்கூர் பிள்ளைமார்களின் அதிகாரத்தை அடக்கவும், ஐரோப்பிய எதிரிகளிடமிருந்து திருவிதாங்கூர் பகுதியைப் பாதுகாக்கவும், முழு ஒத்துழைப்புத் தருவதற்கான முறையான அறிவிப்பைத் திருவிதாங்கூர் அரசரிடம் வெளியிட்டார். 1726-ஆம் ஆண்டு ஆற்றிங்கல் இளவரசி Edava என்ற இடத்தில் ஆங்கிலக் கம்பெனி தம் வாணிபத் தளத்தை அமைக்க அனுமதி அளித்தார்[7]. 1795-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி திருவிதாங்கூர் அரசர் ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சியை அங்கீகரித்தார். இதன்படி 1800-ஆம் ஆண்டு ஆங்கிலப் பிரதிநிதியாக கர்னல் மெக்காலே (Col. Macaulay) அமர்த்தப்பட்டார்[8]. 1805-ஆம் ஆண்டு "Perpetual Friendship and Alliance" என அழைக்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி திருவிதாங்கூர் அரசு ஆங்கிலக் கம்பெனியின் முழு அதிகாரத்தின் கீழ் வந்தது[9].

திருவிதாங்கூர் போர் (1808 – 1809)

1800-ஆம் ஆண்டு முதல், தளவாய் வேலுத்தம்பிக்கும் ஆங்கிலப் பிரதிநிதி கர்னல் மெக்காலேக்கும் நல்ல உறவு இருந்தது. ஆனால் 1804-ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சி மற்றும் 1805-ஆம் ஆண்டு நடந்த உடன்படிக்கைக்குப் பிறகு இருவருக்கிடையே உள்ள உறவில் விரிசல் ஏற்பட்டது. ஆங்கிலக் கம்பெனிக்குக் கட்ட வேண்டிய கப்பத்தொகையை உடனடியாகக் கட்ட ஆங்கிலப்பிரதிநிதி கட்டாயப்படுத்தினார். ஆனால் தளவாய் வேலுத்தம்பியால் கட்டமுடியவில்லை. பகை வளர்ந்தது. வேலுத்தம்பியின் கிறிஸ்தவத்திற்கு எதிரான உணர்வுகளும், இப்பகையோடு இணைந்து போர் என்ற வடிவில் வெடித்தது[10]. 1808-ஆம் ஆண்டு டிசம்பர் 28-ஆம் நாள் நடு இரவு வேலுத்தம்பி தளவாயின் தலைமையிலான திருவிதாங்கூர் படை ஆங்கிலப் பிரதிநிதியைத் தாக்கி அழிக்க முற்பட்டபோது ஆங்கிலப் பிரதிநிதி பலருடைய உதவியுடன் காப்பாற்றப்பட்டார்[11]. தொடர்ந்து ஆங்கிலேயப்படை திருவிதாங்கூர் படைகளை முறியடித்துத் திருவிதாங்கூர் பகுதியை முழுமையாய்த் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த இந்த வெற்றியின் தனிச்சிறப்பு என்னவெனில் "திருவிதாங்கூரில் முதல் சீர்திருத்தத் திருச்சபை கட்டுவதற்குரிய அனுமதியும், நிரந்தரமாக இங்கு அருள்பணியர் தங்கி பணிபுரிவதற்குரிய அனுமதியும் தரப்பட்டதுமாகும்"[12].

திருவிதாங்கூரில் ஆட்சி மாற்றங்கள்

1810-ஆம் ஆண்டு கர்னல் மெக்காலே ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கர்னல் மன்றோ (Col. Munro) ஆங்கிலப்பிரதிநிதியாக அமர்த்தப்பட்டார். 1810-ஆம் ஆண்டு நவம்பர் ஏழாம் நாள் திருவிதாங்கூர் அரசர் மரணமடைந்ததைத் தொடர்ந்து இருபது வயதுள்ள லெட்சுமிபாய் (Leshmi Bhye) இளவரசியாக முடிசூட்டப்பட்டார். தற்கொலை செய்து கொண்ட வேலுத்தம்பி தளவாய்க்குப் பதில் உம்மினித்தம்பி (Ummini Thampy) தளவாயாக நியமிக்கப்பட்டார். ஆனால் உம்மினித்தம்பியின் செயல்பாடுகள் இளவரசிக்குத் திருப்தி அளிக்காததால் இவரை பதவி நீக்கம்

செய்துவிட்டு ஆங்கிலப் பிரதிநிதியாக இருந்த கர்னல் மன்றோவைத் திவானாக நியமித்தார்[13]. திருவிதாங்கூர் அரசின் அனைத்துத் துறைகளின் அதிகாரமும் ஆங்கிலப் பிரதிநிதி கர்னல் மன்றோவின் கையில் வந்தது. ஆங்கிலப் பிரதிநிதியாகவும், திருவிதாங்கூர் திவானாகவும் செயல்பட்ட கர்னல் மன்றோ, திருவிதாங்கூரில் சீர்திருத்தக் கிறிஸ்தவ அருள்பணியருக்கு அதிக ஆதரவு அளித்தார். இவர் C.M.S. செயலருக்கு எழுதிய கடிதத்தில், "இந்தியாவில் வளர்ந்து வரும் சீர்திருத்தக் கிறிஸ்தவம் மனித நேயத்தையும், ஆங்கிலக் கம்பெனியின் அதிகாரத்தையும் நிலைநிறுத்த ஆர்வம் காட்டுகிறது. இது தொடர வேண்டும். மேலும், ஆங்கில மொழியைப் பரப்புவதும், ஆங்கில அதிகாரத்தைத் தக்கவைப்பதும் சீர்திருத்தக் கிறிஸ்தவத்தைப் பரப்புவதும் தங்களின் முக்கியமான பணிகள்"[14] எனக் குறிப்பிடுகிறார்.

திருவிதாங்கூரில் ஆங்கிலேயரின் கொள்கை

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன் ஆங்கிலக் கம்பெனியின் கொள்கைகளை நிறைவேற்ற வாணிபம் ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. திருவிதாங்கூரில் வாணிபத்திற்குரிய மூலப்பொருள்களும், நீண்ட கடற்கரையும் இருந்ததால் வாணிபம் எளிதாக வளர்ச்சியடைந்தது. பிந்திய நாள்களில் திருவிதாங்கூரைத் தங்கள் போர்த்திறமையின் வழியாக ஆங்கில ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தனர். இங்குள்ள குறுநில மன்னர்களோடு சண்டையிடாமல் தாங்களாகவே மனமுவந்து ஆங்கிலக் கம்பெனியின் அதிகாரத்திற்குள் வரும் நிலையை ஏற்படுத்தினர். திருவிதாங்கூர் அரசும் மாற்று வழி இல்லாது ஆங்கில ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது. பல வேளைகளில் ஆங்கிலப் பிரதிநிதியைத் திருப்திபடுத்துவதே திருவிதாங்கூர் அரசின் பணியாய் இருந்தது. கிறிஸ்தவ அருள்பணியர் தங்களுக்குத் தேவையான உதவிகளை ஆங்கிலப்பிரதிநிதியிடமிருந்து பெற்றுக் கொண்டனர். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தி-ருந்தே திருவிதாங்கூர் அரசியல் சூழல் சீர்த்திருத்தக் கிறிஸ்தவ அருள்பணியர்களின் பணிகளுக்கு மிகவும் சாதகமாகவே அமைந்தது.[15] இத்தகைய சூழ-ல் திருவிதாங்கூரில்

புதிதாகத் தொடங்கப்பட்டச் சீர்திருத்தக் கிறிஸ்தவம் திருவிதாங்கூர் வரலாற்றில் பெரிய தாக்கத்தையும், சமுதாய வாழ்வில் மாற்றத்தையும் ஏற்படுத்தியது.

1. A. Sreedhara Menon, *A Survey of Kerala History,* Ananda Book Dept, Madras, 1994, p.260.
2. K.P. Padmanabha Menon, *op.cit.,* p.240.
3. A. Sreedhara Menon, *op.cit.,* p.260.
4. *Ibid.,* p.260.
5. K.P. Padmanabha Menon, *op.cit.,* p.337.
6. A. Sreedhara Menon, *op.cit.,* p. 261.
7. *Ibid.,* p.261.
8. P. Shungoonny Menon, op.cit., p.303.
9. J.W. Gladstone, "19th Century Mass Movement in South Travancore – A Result of Social Liberation", *Indian Church History Review,* Vol.X, No.1, June, 1976, p.53.
10. *Ibid.,* p.54.
11. P. Shungoonny Menon, *History of Travancore : From the Earliest Times*, Asian Educational Services, New Delhi, 1985, p.336.
12. J.W. Gladstone, *op.cit.,* p.54.
13. P. Shungoonny Menon, *op.cit.,* p.358 - 364
14. J.W. Gladstone, *op.cit.,* p.55.
15. *Ibid.,* p.56.

5

திருவிதாங்கூரில் சீர்திருத்தக் கிறிஸ்தவம்

16-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமயப் புரட்சியும், நற்செய்தியைப் பரப்பும் தாகமும் அருள்பணி இயக்கங்களை ஐரோப்பிய நாடுகளில் தோன்றச் செய்தது. 1698-ஆம் ஆண்டு கிறிஸ்தவ அறிவு அபிவிருத்திச் சங்கமும் (S.P.C.K), 1701-ஆம் ஆண்டு நற்செய்தியை அன்னிய நாடுகளில் பரப்பும் சங்கமும் (S.P.G), 1792 ஆம் ஆண்டு பாப்திஸ்து மிஷனெரிச் சங்கமும் (B.M.S), 1795 ஆம் ஆண்டு இலண்டன் மிஷனரிச் சங்கமும் (L.M.S), 1799 ஆம் ஆண்டு சபை மிஷனெரிச் சங்கமும் (C.M.S), 1819-ஆம் ஆண்டு வெஸ்-யன் மெதடிஸ்ட் மிஷனெரிச் சங்கமும் தோன்றின. அருள்பணி குறித்த பொறுப்புணர்ச்சி சீர்திருத்தத் திருச்சபையின் பல பிரிவினருக்குள்ளும் பரவியது. ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் வலுப்படுத்தப்பட்ட அதே காலகட்டத்தில், புதிதாக நிறுவப்பட்ட அருள்பணி இயக்கங்களும் தங்கள் பணியை ஆர்வத்துடன் செய்ய ஆரம்பித்தன.

18-ஆம் நூற்றாண்டில் இறுதியில் S.P.C.K. சங்கத்தின் பணிகள் திருநெல்வே- பகுதியி-ருந்து, திருவிதாங்கூர் பகுதிக்கு விரிவுபடுத்தப்பட்டது. "1750 ஆம் ஆண்டு ஜீலை 30-ஆம் நாள் இந்தியா வந்த Christian Frederick Schwarts 1785- ஆம் ஆண்டு

பாளையங்கோட்டை வந்து மூன்று வாரம் தங்கி இரண்டு உபதேசிமாரையும் ஓர் உபாத்தியாரையும் நியமித்தார். அதில் ஒருவர் சத்தியநாதன் என்பவர் 1790-ஆம் ஆண்டு அருள்பொழிவு பெற்ற போதகராய் பாளையங்கோட்டையில் பணியாற்றினார்".[1] போதகர் சத்தியநாதன் பணியாற்றிய காலகட்டத்தில் S.P.C.K-இன் பணி திருவிதாங்கூருக்கு விரிவுபடுத்தப்பட்டது. போதகர் சத்தியநாதன், ஏசுவடியான் என்ற நற்செய்தியாளரை (Evangelist) திருவிதாங்கூருக்கு அனுப்பினார். இங்கு உயர்சாதியினர் பல எதிர்ப்புகளைத் தெரிவித்ததினால் திருச்சபைகளை நிறுவிடவும், ஆலயங்களை கட்டவும் முடியவில்லை.[2] எனினும் S.P.C.K சங்கத்தைச் சேர்ந்த சீர்திருத்த திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பது உறுதியாகிறது.

மகராசன் வேதமாணிக்கம்

தென்திருவிதாங்கூரிலுள்ள மைலாடி என்ற கிராமத்தைச் சேர்ந்த மகராசன் தீவிர சமயப்பற்றாளர். இலங்காமணியன் என்ற தெய்வத்தின் பற்றாளராய் மெய்மையைத் தேடி 1799 ஆம் ஆண்டு தமையன் மகனான சிவகுருநாதன் என்னும் வா-பனுடன் சிதம்பரம் புறப்பட்டார். உண்மையைத் தேடிய இடத்தில் பொய்மையைப் பதிலாய் பெற்றார். இறை தூதனின் வழிகாட்டுத-ன் பேரில் மாற்றுவழி செல்ல தூண்டப்பட்டனர். அந்த மாற்று வழியில் மகராசன் கண்ட காட்சி புதிய சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டது.[3] தூய ஓய்வுநாள் காலை வேளை, அருள்பணியர் கோல்ஹாப் அவர்களின் செய்தியும், ஆலயத்தொழுகை முறையும் புதிய உந்துதலைத் தந்தது. உண்மையின் சாரம் இதன் வழி கிட்டும் என்ற தூண்டுத-ன் அடிப்படையில் சில நாள்கள் அங்குத் தங்கி உண்மை வழியை அறிந்து அதன்வழி நெறிப்படுத்தப்பட்டனர். வேதமாணிக்கம் (Vedamanickam)[4] என்ற பெயர் மாற்றத்தைத் திருமுழுக்கின் வழி பெற்று மைலாடி திரும்பினார்.

வேதமாணிக்கம் உபதேசியார்

உண்மையைத் தேடி சென்ற மகராசன், உண்மையை வெளிப்படுத்தும் வேதமாணிக்கமாய் மைலாடி வந்தார். தம் இல்ல வளாகத்தை இறை சந்திப்பின் தளமாக்கினார். நற்செய்தி நூல்களின் சாரத்தை மக்களுக்குக் கூறி அறிவித்தார். இதுவே இம்மண்ணில் தொடங்கிய முதல் நற்செய்திப் பணியாகும். இப்பணியின் மூலம் வேதமாணிக்கம் தம் வீட்டு வளாகத்தில் சீர்திருத்த கிறிஸ்தவத் திருச்சபைக்கான விதையை ஊன்றினார்.[5] தம் குடும்பத்தினருக்கு திருமறையின் வெளிச்சத்தில் புதிய பெயர்களைச் சூட்டி திருமுழுக்கின் வழி உறுதிப்படுத்தினார். 30 அங்கத்தினரைக் கொண்ட வடிவமைக்கப்படாத திருவிதாங்கூர் சீர்திருத்தத் திருச்சபையின் முதல் உபதேசியாராக வேதமாணிக்கம் செயல்பட்டார். இதுவே இன்று கன்னியாகுமரி முதல் கேரளத்துக் கல்லடை ஆறுவரை பரந்து கிடக்கும் பகுதியில் இரண்டு பேராயங்களாய்[6] வளர்ந்து நிற்கும் தென்னிந்தியத் திருச்சபையின் தாய்ச்சபையாகும்.[7]

இலண்டன் மிஷனெரிச் சங்கம்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட ஆன்மீக எழுப்புதலின் விளைவாகத் தோன்றிய சங்கமே இலண்டன் மிஷனெரிச் சங்கம். பல ஆயத்த கூடுகைகளுக்குப் பின் அதிகாரப்பூர்வமாக, 1795-ஆம் ஆண்டு செப்டம்பர் 21-ஆம் நாள் உருவாக்கப்பட்டது. 30 இயக்குநர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவில் 20 பேர் திருப்பணியாளர்களாகும்.[8] எந்தச் சபை பிரிவுகளின் கொள்கைகளையும் பின்பற்றாது, போற்றுதற்குரிய நற்செய்தியைச் கிறிஸ்தவச் சமய நம்பிக்கையற்றவர்களுக்கும், சமூகத்தில் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் அறிவிக்க வேண்டும் என்பதை நோக்கமாகக்[9] கொண்டு 1796-ஆம் ஆண்டு தென் சமுத்திரத் தீவுகளுக்குச்[10] சென்று நற்செய்தியை அறிவிக்க 29 போதகர்களை இலண்டன் மிஷனெரிச் சங்கம் அனுப்பியது. 16 ஆண்டு பணிக்குப் பின் அப்பகுதியிலுள்ள 8 தீவுகளில்[11] உள்ள மக்கள் அனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்றனர்.

இந்தியாவில் L.M.S இன் முதல் அருட்பணியாளர்

1798 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்த L.M.S. முதல் அருட்பணியாளர் நத்தானியேல் போர்சைத் (Nathanael Forsyth) ஆவார். வங்க தேசத்தில் பணியாற்ற வந்த இவரை வங்கதேச அரசு பணியாற்ற அனுமதியளிக்காததால் இவர் கொல்கத்தாவி-ருந்து 20 மைல் (30 கிலோ மீட்டர்) தொலைவிலுள்ள டச்சுக்காரர் குடியிருப்புப் பகுதியான சின்சிராவுக்குச் (Chinsurah) சென்றார்.[12]

தென்னிந்தியாவில் அருள்பணியாற்ற அருள்பணியரை அனுப்பவேண்டும் என்று முதன் முதல் இலண்டன் சங்கத்துக்கு அழைப்பு விடுத்தவர்கள் தரங்கம்பாடியில் பணிபுரிந்த டேனிஷ் அருள்பணியாளராவர். 1799-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜாண் ராட்லர் (John Rottler), கேமரர் (Caemmerer) என்ற இரண்டு அருள்பணியரும் இலண்டன் மிஷனெரி இயக்குநர் குழுவுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் "அருள்பணியரை இந்தியாவில் பணிபுரிய அனுப்புங்கள் என்றும், அவர்கள் எங்களுக்கு அருகில் வந்து பணிபுரிவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும் என்றும், அவர்களோடு கருத்து வேறுபாடு அற்ற ஒருமித்த நிலையில் இணைந்து கிறிஸ்துவுக்குள் செயல்படுவோம்"[13] என்றும் எழுதினர். சென்னையில் உள்ள பக்தி வைராக்கியமுள்ள கிறிஸ்தவர்கள் திருவிதாங்கூர் மக்களின் நல்வாழ்வுக்காகவும், ஆன்மீக வளர்ச்சிக்காகவும் அருள்பணியர் தேவை குறித்து பல முயற்சிகளை மேற்கொண்டனர். 1804-ஆம் ஆண்டு டிசம்பர் 5-ஆம் நாள் Ringeltaube, Des Granges, Cran ஆகிய மூன்று L.M.S அருள்பணியர்களும் தரங்கம்பாடி வந்தனர்.[14]

றிங்கல்தௌபே

1804 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் நாள் தரங்கம்பாடி வந்த றிங்கல்தௌபே[15] தமிழ் மொழியைக் கற்றதோடு அருள்பணியாற்றுவதற்குரிய நல்ல பணித்தளத்தை தேடினார்.[16] திருவிதாங்கூர் பகுதியில் உள்ள மைலாடியில் சீர்த்திருத்தக் கிறிஸ்தவத்தை அறிவித்து வரும் வேதமாணிக்கம், இங்கு அருள்பணியாற்றுவதற்குரிய நிரந்தரத்தளம் இருப்பதை

அருள்பணியர் கோல்ஹாப் அவர்களிடம் தெரிவித்திருந்தார். இதை றிங்கல்தௌபே, போதகர் கோல்ஹாப் மூலம் அறிந்து, திருவிதாங்கூர் வரத் தீர்மானித்தார். 1806-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள் திருவிதாங்கூரின் முதல் சீர்திருத்த அருள்பணியாளராகத் தம் காலடிகளை இங்கு பதித்தார்.[17]

மைலாடி மிஷன்

1806-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் வந்த றிங்கல்தௌபே, இங்கு தங்கி அருள்பணியாற்றத் , திருவிதாங்கூர் அரசு அனுமதியளிக்கவில்லை. எனவே பாளையங்கோட்டையில் தங்கி இங்கு அருள்பணியைத் தொடர்ந்தார். 1809-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருவிதாங்கூர் பகுதி ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அதன்பிறகு றிங்கல்தௌபே இங்கு நிரந்தரமாகத் தங்கி பணிபுரிந்தார்.[18] 1809-ஆம் ஆண்டு மார்ச் மாதம் கர்னல் மெக்காலேயை றிங்கல்தௌபே சந்தித்த நிகழ்வு புதிய வழிபாட்டுமனை கட்டுவதற்குரிய அனுமதியைப் பெற்றுத்தந்தது. அதன்படி வேதமாணிக்கம் கொடுத்த அவரது விளைநிலத்தில் 1809 ஆம் ஆண்டு மே மாதம் சீர்திருத்தக் கிறிஸ்தவ வழிபாட்டுமனை கட்டுவதற்குரிய அடித்தளம் போடப்பட்டது. நான்கு மாத விரைவான பணியினால் வழிபாட்டுமனைப் பணி நிறைவுபெற்று 1809- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் றிங்கல்தௌபே அவர்களால் மங்கலப்படைப்புச் செய்யப்பட்டது.[19]

றிங்கல்தௌபே திருவிதாங்கூரில் தங்கி பணிசெய்ததின் விளைவாகக் கிறிஸ்தவப் பற்றுறுதியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1810-ஆம் ஆண்டு றிங்கல்தௌபே, அரசு அனுமதியோடு தாமரைக்குளம், புத்தளம், ஆத்திக்காடு, கோயில்விளை, ஈத்தாமொழி, பிச்சைகுடியிருப்பு ஆகிய இடங்ளில் வழிபாட்டுமனைகளைக் கட்டினார். அதோடு கல்விக் கூடங்களை நிறுவி அதில் ஆசிரியர்களை நியமித்தார்.[20] 1810-ஆம் ஆண்டு இறுதிக்குள் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் நானூறு பேர் திருவிதாங்கூரில் காணப்பட்டனர்.[21] 1812-ஆம் ஆண்டு 677 திடப்படுத்துதல் பெற்ற (Communicants) உறுப்பினர்கள் திருவிதாங்கூரில் காணப்பட்டனர்.[22] 1812-ஆம் ஆண்டு கணக்கின்படி

திருவிதாங்கூரில் றிங்கல்தௌபே உருவாக்கின சபையி-ருந்த மொத்தக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 1019. பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 188 ஆகும்[23].

அர்ப்பணிப்போடும், தியாகத்தோடும் பணி செய்து திருச்சபைகளை நிறுவிய றிங்கல்தௌபே, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை நெறிகளை வாழ்வில் வெளிப்படுத்தியவர். அடித்தளத்தில் அவதியுறும் மக்கள் ஆற்றல் பெற பொருளாதார உதவிகளை அளித்தார். இவரது கடின உழைப்பு உடல் தளர்வை ஏற்படுத்தியது. பெலன் குன்றிய நிலையில் 1816-ஆம் ஆண்டு இங்கிருந்து கப்பலேறி சென்னைக்கும், இலங்கைக்கும் பயணமானார். இவரது இறுதி கால நிகழ்வுகள் ஆதாரப்பூர்வமாய் அறியப்படவில்லை[24].

புதிய அருள்பணியரின் வருகை

றிங்கல்தௌபே விட்டுச்சென்ற அருள்பணியைத் தொடர 1816 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் நாள் ரிச்சர்டு நில்(Richard Knill), மற்றும் சார்லஸ் மீட்(Charles Mead) ஆகிய L.M.S அருள்பணியர் சென்னை வந்து சேர்ந்தனர். 1818-ஆம் ஆண்டு திருவிதாங்கூரில் தொடங்கிய பணியால் கன்னியாகுமரி முதல் கொல்லம் வரையிலும் அருள்பணித்தளங்களை விரிவடையச் செய்து[25]. திருவிதாங்கூர் சீர்திருத்தக் கிறிஸ்தவ வரலாற்றில் பல தடயங்களைப் பதித்தனர்.

நாகர்கோவில் மிஷன்

சார்லஸ் மீட் காலத்தில் அருள்பணி அதிகமாய் விரிவடைந்தது. அருள் பணியாற்றுவதற்கு வசதியாக மைலாடியி-ருந்த மிஷன் தலைமை இடத்தை, நாகர்கோவிலுக்கு மாற்றினார். இளவரசி கௌரி பார்வதிபாய் (Gouri Parvati Bai) தந்த மாளிகையில்[26] தங்கி சார்லஸ் மீட் பணியாற்றினார். வழிபாட்டுமனை, ஆதரவற்றோர் இல்லங்கள், விடுதியுடன் கூடிய பள்ளிகள், அச்சகம் இவைகள் கட்டவும், கிறிஸ்தவக் குடும்பங்களைத் தங்க வைக்கவும் நாகர்கோவில் பகுதியில் உள்ள எட்டுத் துண்டு நிலங்களை

திருவிதாங்கூர் அரசரிடமிருந்து வாங்கினார். 1818 ஆம் ஆண்டு இறையியல் கல்லூரியும் தொடங்கினார்[27].

அருள்பணியின் வளர்ச்சி

1819-ஆம் ஆண்டு சார்லஸ் மால்ட் (Charles Mault) என்பவர் தனது துணைவியரோடு திருவிதாங்கூர் வந்தார். 1821-ஆம் ஆண்டு பணித்தளத்தை இருபெரும் பிரிவாகப் பிரித்தனர். நெய்யூர் மிஷன், சார்லஸ் மீட் தலைமையில் மேற்குப்பகுதியாகவும், நாகர்கோவில் மிஷன் சார்லஸ் மால்ட் தலைமையில் கிழக்குப்பகுதியாகவும் செயல்பட்டது. 1830-ஆம் ஆண்டு L.M.S, 92 கல்வி சாலைகளை நடத்தியது. 3100 கல்வியறிவு பெற்றவர்களும் 4000 கிறிஸ்தவர்களும் காணப்பட்டனர். கிறிஸ்தவ அறநெறிப்பயிற்சி வா-பர்களுக்கு அதிக அளவில் கொடுக்கப்பட்டது[28]. அருள்பணியரின் துணைவியர் தலைமையில் பெண்கள் விடுதியும், கல்விச்சாலையும், நாகர்கோவில் பகுதியில் இயங்கியது. பெண்கள் தொழில்பயிற்சிப் பெற்றனர். சிறப்பாகத் தையல் (குச்சித்தையல்) கற்றுக்கொடுக்கப்பட்டது. மக்களின் வருவாய் பெருகியது[29].

சமூகத்தின் அடித்தளத்தில் ந-ந்து காணப்பட்ட மக்கள் கிறிஸ்தவ அருள்பணியரின் அரிய முயற்சியினால் சிந்திக்கவும் செயல்படவும் ஆரம்பித்தனர். சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட தொடங்கியதால் போராட்டங்கள் எழுந்தது. சமூக விழிப்புணர்வு ஏற்பட்டதால் வன்முறைகள் வெடித்தன. எழும்பிய சூறாவளிக் காற்றினால் விடுதலையின் தீ அணைக்கப்படவில்லை; பற்றி எரிய ஆரம்பித்தது. புதிய புதிய மாற்றங்கள் உருவாகி புதிய வழித்தடங்கள் தோன்றின. 1806-ஆம் ஆண்டு முதல் 1859 ஆம் ஆண்டுக்குள்ளாய் 24 L.M.S அருள்பணியர்[30] தென்திருவிதாங்கூர் பகுதியில் அருள்பணியாற்ற வந்தனர். நற்செய்தியை விரைவில் மக்களிடம் கொண்டு செல்லக்கூடிய தகவல் சாதனமான அச்சுக்கூடம், நாகர்கோவில், நெய்யூர் பகுதிகளில் நிறுவப்பட்டன. அருள்பணியர், மனித நேயம் பற்றிப்பேசியதும், கரிசனையோடு மக்களை நடத்தியதும், சமூக விடுதலைக்காய் பாடுபட்டதும், மக்கள் நலனில் அக்கரை கொண்டதும், ஆங்கில அரசின் உதவியைப் பெற்றதும்[31]

திருவிதாங்கூர் பகுதியில் சீர்திருத்தக் கிறிஸ்தவம் ஆழமாய் வேரூன்ற உதவியது. 1840-ஆம் ஆண்டு இரண்டு அருள் பணித்தளங்களிலும் 50,000 சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் இருந்தனர். 1740 பிள்ளைகள் கிறிஸ்தவக் கல்விச் சாலையில் கல்வி கற்றனர். இதில் 1000 பேர் பெண்கள் ஆகும்[32].

அருள்பணியின் வளர்ச்சியில் ஆங்கில அரசின் செயல்பாடு

திருவிதாங்கூர் பகுதியில் சீர்திருத்த அருள்பணியரின் பணி 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் கம்பெனி ஆதிக்கத்தின் நிழலில் நடைபெற்றது. 1833-ஆம் ஆண்டு அருள்பணியரை உள்நாட்டு இந்து சமயத்தவர் தாக்க முற்பட்டபோது, ஆங்கில இராணுவம் அருள்பணியரைப் பாதுகாக்க இராணுவ அணிவகுப்பை நடத்தியது[33]. 1814-ஆம் ஆண்டு கர்னல் மன்றோ இரண்டு அருள்பணித்தளங்களை நிறுவ றிங்கல்தௌபேக்கு அனுமதி கொடுத்த போது திருவிதாங்கூரில் சீர்திருத்தத் திருச்சபையின் செயல்பாட்டு வளர்ச்சி, ஆங்கிலக் கொடி இங்கு பறக்கும் வரைக்கும் நிலைத்திருக்கும் என[34] றிங்கல்தௌபே எழுதுகிறார். ஆங்கிலக்கொடியின் நிழலில் சீர்திருத்தக் கிறிஸ்தவம் அதிக வளர்ச்சியைக் குறுகிய காலக்கட்டத்தில் எட்டினாலும் அதன் விளைவுகள் பல துன்புறுத்தல்களுக்குள்ளாகக் கிறிஸ்தவத்தை நடத்தியது.

1. W.T. Satthianadhan, *A Sketch of Church History From the First to the Present Century,* Madras, 1900, p.425.
2. J.W. Gladstone, "19th Century Mass Movement in South Travancore – A Result of Social Liberation", *Indian Church History Review,* Vol.X, No.1, June, 1976, p.58.
3. C.M. Agur, *Church History of Travancore,* Asian Educational Services, New Delhi, 1990, p.430.
4. வேதமாணிக்கம் என்றால் *"The Gem of the Bible", Ibid.,* p.443.
5. சாமுவேல் தாசன், *ஒரு விடுதலையின் வரலாறு,* கனல் மணக்கும் பூக்கள், கொட்டாரம், 1997, p.43.
6. தென் கேரள பேராயம், கன்னியாகுமரி பேராயம்.

7. சாமுவேல் தாசன், *op.cit.*, p.44.

8. Dick Kooiman, "Social And Economic Backgrounds of Ninettenth Century London Missionaries In Southern Travancore". *Indian Church History Review,* Vol.XIX, No. 2, December 1985, p. 101.

9. R.N. Yesudas, *London Missionary Society in Travancore 1806-1908,* Kerala Historical Society.

10. ஆசியா கண்டத்துக்கும், அமெரிக்கா கண்டத்துக்கும் மத்தியில் உள்ள பசிபிக் பெருங்கடல் உள்ள தீவுகள்.

11. "சாந்துவிச்சு தீவுகள், ரயோற்றியா தீவு, சோசைற்றி தீவுகள், தானஹயா தீவு, ஜியார்ஜியன் தீவுகள், சாமோவா தீவு, ஹார்வை தீவுகள், தாஹித்தி தீவு". W.T. Satthianadhan, *op.cit.*, p.434.

12. Dick Kooiman, *op.cit.*, p.102.

13. C.M. Agur, *op.cit.*, p. 464.

14. *Ibid.*, p.26.

15. 1770 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் நாள் ஜெர்மன் தேசத்தில் புருஷியா மாகாணத்திலுள்ள சிலீசியா நாட்டில் ஷீடல் உயிட்ஸ் என்ற கிறிஸ்தவக் குருவான கோற்றிலேப் றிங்கல்தௌபே என்பவரின் மூத்த மகன். இவர் 1789-ஆம் ஆண்டு ஹல்லே (Halle) பல்கலைகழகத்தில் பயின்று 1795-ஆம் ஆண்டு ஜீலை 24-ஆம் நாள் தம் 26 ஆம் வயதில் அருள்பொழிவு பெற்றார். William Robinson, *Ringeltaube, The Rish: Letters And Journals,* L.M.S. Salem, 1902, p.11.

16. Samuel Mater, op.cit., p. 258.

17. William Robinson, *op.cit.,* p.78.

18. J.W. Gladstone, "Christian Missionary Work And Socio Religious Movements in Kerala. 1850-1910", *Church History Association of India, 6th Triennial conference,* Bangalore, 1985, p.153.

19. William Robinson, *op.cit.,* p. 101

20. R.N. Yesudas, *op.cit.,* p.41.

21. William Robinson, *op.cit.,* p.40.

22. M.A. Sherring, *The History of Protestant Missions in India,* Trubner & Co, London, 1875, p. 325.

23. ஜான். ஏ. ஜேக்கப், *op.cit.,* p.35.

24. *Ibid.*, p.35.

25. சாமுவேல் சகரியா, *op.cit.*, p. 39.

26. A. Sreedhara Menon, *op.cit.*, p. 278.

27. C.M. Agur, *op.cit.*, 748.

28. M.A. Sherring, *op.cit.*, p.366.

29. R.N. Yesudas, *A History of Women's Education in Kerala,* South Indian Social Centre, Trivandrum, 1988.

30. William Tobias Ringeltaube (1806-1816), Charles Mead (1817-1851), Richard Knill (1818-1819), Charles Mault (1819-1855), John Smith (1820-1824), William Crow (1823-1825), William Bawn Addis (1827-1830) William Miller (1827-1838), James Charles Thompson (1827-1850), J. Roberts (1830-1834), William Harris 1831-1832), charles Mille (1834-1841), John Abbs (1838-1859), John Cox (1838-1861), James Pattison (1838-1844), Dr. Archibald Ramsay (1838-1842), James Russel (1838-1860), John Owen Whitehouse (1842-1857(, Ebenezer Lewis (1846-1862), Charles Calder Leitch 91852-1854), Frederick Beylis 91854-1877), John Joll Dennis (1856-1864), James Duthie (1859-1908), Samuel Mateer (1859-1891). Dick Kooiman, *op.cit.,* pp.119-127.

31. M.A. Sherring, *op.cit.,* p.119.

32. *Ibid.,* p.328.

33. J.W. Gladstone, "Christian Missionary Work And Socio Religious Movements in Kerala, 1850-1910", *op.cit.,* p.153.

34. J.W. Gladstone, "19th Century Mass Movement in South Travancore – A Result of Social Liberation", *Indian Church History Review,* Vol.X, No.1, June, 1976, *op.cit.,* p.69.

6

கிறிஸ்தவர்களின் துன்பத்திற்கான காரணங்கள்

"துன்புறுத்தல்" என்பது மனித நேயமற்ற முறையில் ஒருவரை வெளிப்படையாகக் காயப்படுத்துவதும், ஆள்த்தன்மையில் பாதிப்பை ஏற்படுத்துவதும், தொடர்ச்சியாகத் துயரத்தைக் கொடுப்பதுமாகும்.[1] விடுதலைப் பணியில் ஈடுபடும் ஒரு மானிடருக்கோ ஒரு சமூகத்திற்கோ இளைக்கப்படும் தீமைகளைத் துன்புறுத்தல் எனக் கூறலாம்.[2] A Dictionary of Christian Ethics என்ற நூ-ல் Searle Bates எழுதும் போது, "காலம் காலமாய் கடைபிடித்து வந்த பாரம்பரிய பழக்கவழக்கங்கள், சமயச் சடங்குகள், சமூகக் கட்டுப்பாடுகள், பண்பாடுகள் இவைகளின் மீது குற்றச்சாட்டுகளைக் கூறி, ஒரு புதிய மாற்றத்திற்கு நேராய் அடியெடுத்து வைக்கும் சமூக மக்களுக்கு இழைக்கப்படும் துயரங்களைத் துன்புறுத்தல்"[3] எனக் குறிப்பிடுகிறார். பொதுவாக, துன்புறுத்தல் அன்றாடம் சந்திக்கிற இடர்பாடுகளைக் களைந்துவிட்டு முன்னோக்கிச் செல்லுவதற்கு உந்துதல் தருகின்றது.[4]

வரலாற்றுப் பின்னணியத்தில், துன்புறுத்தல் என்ற சொல்லுக்குச் சமயம் சார்ந்தப் பற்றுறுதியில் உறுதியாக நிலைத்திருப்பதினால் ஏற்படுகின்ற உடல், உள்ளம் சார்ந்த காயங்களின் தொடர்ச்சியான துயரங்கள் எனக் கூறலாம். "சமயம், இனம், தேசம், பண்பாடு இவைகளின் மீது கொள்ளுகின்ற

எல்லையற்ற பற்றும், இதற்கு எதிர்மறையாகச் சமயம், இனம், தேசம், பண்பாடு இவைகளின் மீது காட்டுகின்ற வெறுப்புணர்ச்சியினால் ஏற்படுகின்ற கிளர்ச்சி மற்றும் அரசாங்கத்தினுடைய செயல்பாடுகள் துன்புறுத்த-ன் ஆரம்பம்"[5] என M.J. Costelloe குறிப்பிடுகிறார். சமய நம்பிக்கையில் வைத்துள்ள கட்டுப்பாடற்ற உணர்ச்சிகளின் வெளிப்பாடு துன்புறுத்தலுக்குக் காரணமாகிறது[6] என Searle Bates குறிப்பிடுகிறார். இந்த உணர்வு பிற சமய மக்களைச் சிலை வணக்கக்காரர்கள் என்றும், சமய சார்பற்ற மானுடரை "நாத்திகர்கள்" என்றும் குறை கூறத் தூண்டுகிறது. மேலும் தங்களின் சமயத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படை வாத உணர்வையும் வெளிப்படுத்துகிறது.

துன்புறுத்தல் தனிப்பட்ட மானுடர் மீதோ, ஓர் குழு அல்லது சமூகம் மீதோ திணிக்கப்பட்டதையும், இத்துன்பம் விடுதலை வாழ்வுக்கு அடித்தளமாய் அமைந்ததையும் திருமறையில் காணலாம். "ஆண்டவர் மீதான அன்பு, ஆண்டவரின் வார்த்தையின் மீதான பற்றுறுதி, இறை நம்பிக்கையில் சான்று பகர்தல், விடுதலைப் பணியில் ஈடுபாடு" இவற்றின் காரணமாக அரசர்கள் மற்றும் இறைவாக்கினர் துன்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் திருச்சபையின் ஆரம்ப நாள்களி-ருந்தே தொடர்ந்தது. "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும், அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்"[8] என்ற இயேசு கிறிஸ்துவின் சொல் கிறிஸ்தவப் பற்றுறுதியாளர்களுக்கு உரமூட்டியது. அருள்தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருந்த திருச்சபையைத் துன்பம் என்னும் சூறாவளி சிதறடித்த வேளையில். சிதறிய தீப்பொறிகள் உலகமெங்கும் திருச்சபைகளாய்ப் பற்றி எரிய ஆரம்பித்தன. எனவே தான் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த *"இலத்தீன் சபையின் தந்தை"* எனப் போற்றப்பட்ட தெரித்துல்-யன், *"இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து"* என்ற உயிரூட்டமுள்ள சொல்-ன் மூலம் துன்பத்தி-ருக்கும் பற்றுறுதியாளர்களைப் பற்றுறுதியில் உறுதிப்படுத்தினார். இச்சொற்கள் இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்கும் உந்துதலாக அமைகின்றது.

கிறிஸ்தவர்களின் துன்பத்திற்கான காரணங்கள்

அருள்பணியாளர்களின் அயராத பணியினால் தென்திருவிதாங்கூரில் கிறிஸ்தவம் குறுகிய காலகட்டத்திற்குள் அதிக வளர்ச்சியடைந்தது. உயர்சாதியினர் என்று தங்களை அழைத்துக் கொண்ட நாயர் சமூகத்தினரால் நசுக்கப்பட்ட நாடார் இனத்தவர் குழு குழுவாகக் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர். இத்தகைய சமய மாற்றமே பின்னர் சமூக மாற்றத்திற்கு அடித்தளமாய் அமைந்தது. பாரம்பரிய ஆட்சியமைப்பில் மாற்றங்கள் வேண்டும் என்பதை அருள்பணியரின் வழியாக மக்கள் சிந்திக்க தூண்டப்பட்டனர். ஆங்கில அதிகாரத்தினால் வளர்ந்து வரும் கிறிஸ்தவத்தையும் அருள் பணியரையும் ஆதிக்க சக்திகள் அழிக்க முடியாததினால் புதிய மாற்றங்கள் வேண்டும் என அருள்பண்ணியர் மூலம் அறைகூவல் விடுத்த கிறிஸ்தவர்களை அழிக்க முனைந்து துன்புறுத்தினர்.

தென்திருவிதாங்கூர் கிறிஸ்தவர்களின் துன்புறுத்தலுக்குரிய காரணங்களை ஏழு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

1. சமயம் சார்ந்த காரணங்கள். (Religious Reasons)
2. சமுதாயம் சார்ந்த காரணங்கள். (Social Reasons)
3. இனம் சார்ந்த காரணங்கள். (Racial Reasons)
4. அரசியல் சார்ந்த காரணங்கள். (Political Reasons)
5. தேசியம் சார்ந்த காரணங்கள். (National Reasons)
6. பொருளாதாரம் சார்ந்த காரணங்கள் (Economical Reasons)
7. பண்பாடு சார்ந்த காணங்கள். (Cultural Reasons)

சமயம் சார்ந்த காரணங்கள்

தொன்மை கால முதலே இந்தியச் சமயங்களும், தத்துவக் கொள்கைகளும், உலகச் சமயங்களும் சந்திக்கின்ற ஓர் இடமாகத் திருவிதாங்கூர் விளங்கியது. இந்திய நாட்டின் சமயமான சைன சமயம், புத்தசமயம், இந்துசமயம் மற்றும் அயல்நாட்டு சமயமான கிறிஸ்தவச் சமயம், யூதசமயம், இஸ்லாமியச் சமயம் ஆகியவை இங்கே ஒரே உணர்வு கொண்ட சமயங்களாக இணைந்திருந்தன.

ஆங்கில அதிகாரத்தினால் குறுகிய காலத்தில் அதிக வளர்ச்சியடைந்த சீர்திருத்த கிறிஸ்தவம் திருவிதாங்கூர் வரலாற்றில் புதிய தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தின. இத்தாக்கத்தின் பின்னணியில் பல வேதனையின் குரல்களும், வடுக்களும், காயங்களும், சேதங்களும் நிரம்பியிருந்தன. சீர்திருத்தக் கிறிஸ்தவத்தை ஏற்ற கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட அடிப்படையாக அமைந்த காரணங்கள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தக் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட மகராசன் வேதமாணிக்கம், கிறிஸ்தவச் சமயப் போதனைகளைத் தம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவித்தார். கிறிஸ்தவச் சமயத்தின் மீது கொண்ட ஈடுபாட்டினால் இந்து சமய நண்பர்களோடு சமயக் கலந்துரையாட-ல் ஈடுபட்டார். இந்து சமய மக்கள் சிலை வழிபாட்டாளர்கள் என்றும், இவர்களின் சமயம் பொருளற்ற, பயனற்ற சமயம் என்றும் குறை கூறினார். தாம் பின்பற்றிய சமயமே உண்மை சமயம் எனக் கூறி கட்டாய சமய மாற்றத்திற்கு மக்களைத் தூண்டினார்.[9] தம்மிடமுள்ள சிலை வழிபாட்டு புத்தகங்களையும், தம் குடும்ப ஜாதகங்களையும் அழித்தார்.[10] கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட மகராசன் வேதமாணிக்கத்தின் இந்தச் செயல்களைப் பார்த்த இந்து சமய மக்கள் அவரைத் துன்புறுத்தினர்.

1822-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மந்திரம், நாடான்குட்டி என்பவர்கள் தலைமையில் குளத்துவிளை பழங்கேரி (Palankery) முத-ய கிராமத்திலுள்ள சிலை வணக்கம் செய்பவர்கள், குளச்சல், கடியப்பட்டினம் கிராமங்களுக்கு அருகிலுள்ள கொத்தனாவிளை (Kothanavilley) என்ற இடத்திலுள்ள திருச்சபை மக்களிடம் "எங்கள் கிராமத்தின் தெய்வத்திற்கு விழா எடுக்க, பண உதவித்தாருங்கள்" எனக் கேட்டனர். அங்குள்ள கிறிஸ்தவத் தலைவர்களான நீதியுடையான், ஏசுவடியான் போன்றோர் இதற்கு மறுப்புத் தெரிவித்தனர். உடனே இவர்களை வரிவசூ-க்கும் பணியாளரிடம் அழைத்துச் சென்று அதிக அளவு வரி சுமத்தி வரி செலுத்தாத காரணத்திற்காகத் துன்புறுத்துகிறோம் என வழக்குத் தொடுத்தனர்.[11]

1809-ஆம் ஆண்டு ரிங்கல் தௌபே கர்னல் மெக்காலே மூலமாக அரசு அனுமதி பெற்று மைலாடியில் நிரந்தரமாய் அருள்பணியை ஆரம்பித்தார். 40 நபர்கள் திருமுழுக்கின் மூலம் சீர்திருத்தக் கிறிஸ்தவத்தின் அங்கத்தினராயினர். குறுகிய காலத்தில் இத்தகைய வளர்ச்சி சிலை வணக்கம் செய்பவர்களைப் பயத்தில் ஆழ்த்தியது. இனி இத்தகைய நிகழ்வுகள் தம் சமூகத்தில் ஏற்படக்கூடாது என்பதற்காகத் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் சிலை வணக்கம் செய்பவர்கள் துன்புறுத்தினர்.[12] மட்டுமல்லாது கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் கிராமத்தில் நடைபெறும் நிகழ்வுகளிலும், குடும்பத்திலுள்ள சிறப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள அனுமதிக்காமல் வெறுத்து ஒதுக்கப்பட்டனர்.

1829-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் நாள் சார்லஸ் மால்ட் என்பவர் கர்னல் மோரிசனுக்கு (Col. Morrison) எழுதிய மடல், "திட்டுவிளை என்ற பகுதியில் 13 கிறிஸ்தவர்களும், ஒரு பள்ளி ஆசிரியரும் தங்களுக்கு விதிக்கப்பட்ட வரியைச் செலுத்தவில்லை என்ற காரணத்தைக் கூறி பூதப்பாண்டி பகுதியில் உள்ள பிள்ளைமார், இவர்களைத் துன்புறுத்தினர். ஆனால் உண்மை காரணம் அதுவல்ல. அப்பகுதியில் இவர்கள் மட்டுமே கிறிஸ்தவத்தை ஏற்றவர்கள். இவர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதாலேயே வரி செலுத்தவில்லை எனப் புகார் கூறி துன்புறுத்தினர். ஆனால் நாங்கள் கிறிஸ்தவர்களல்ல என யார் கூறினாலும் அவர்களை உடனடியாக வரி செலுத்துவதி-ருந்து விடுவித்தனர்"[13] எனக் குறிப்பிடுகின்றார். இந்த நிகழ்வு கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கு உயர் சாதி இந்துக்கள் கொடுத்த வேதனையை வெளிப்படுத்துகிறது.

அருள்பணியர் சார்லஸ் மீட், சார்லஸ் மால்ட் ஆகியோர் கிறிஸ்தவத் துன்புறுத்தல் குறித்து திருவிதாங்கூர் ஆங்கிலப் பிரதிநிதி கர்னல் W. மோரிசனுக்கு (Col.W. Morison) மடல் எழுதினர். அதில் "திருவிதாங்கூர் நாட்டின் கிறிஸ்தவர்கள் தங்கள் சமயம் சார்ந்த சடங்குகளை நிறைவேற்றும் போது ஏற்படும் துன்பங்களை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மட்டுமே நீக்க முடியும் என்றும், இங்குள்ள

கிறிஸ்தவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்புக் கொடுப்பதோடு, கிறிஸ்தவர்களுக்கு எதிராகச் செயல்படும் அதிகாரிகள் அனைவரையும் கம்பெனியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, சிறை பிடிக்க வேண்டும் என்றும் அருள்பணி இயக்கம் ஆங்கில அதிகாரத்தின் கீழ் இருப்பதாலும், அருள்பணிக்குரிய உதவிகள் அனைத்தும் ஆங்கில மக்களிடமிருந்து பெறுவதாலும், திருவிதாங்கூர் அரசு அருள்பணியரைக் குறித்துக் குறைகூறவும், சீர்படுத்தவும் அதிகாரம் இல்லை"[14] என எழுதினர். இம்மட-ன் விளக்கம் திருவிதாங்கூர் அரசின் அதிகாரிகளுக்குக் கிறிஸ்தவத்தின் மீதும் கிறிஸ்தவர்கள் மீதும் வெறுப்பை ஏற்படுத்தியது. குறிப்பாக நாயர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த அடிப்படை காரணமாகவும் அமைந்தது.

திருவிதாங்கூரில் கிறிஸ்தவம் பரவிய தொடக்க காலத்தில் ஆங்கிலப் பிரதிநிதிகள் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு அதிக ஆதரவு அளித்தனர். ஆனால் ஜெனரல் கல்லன் ஆங்கிலப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவுடன் இந்நிலை முற்றிலுமாய் மாறியது. ஜெனரல் கல்லன் திவானோடு இணைந்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார் என அருள்பணியர் குற்றம் சாட்டினர். இதற்கு மறுமொழியாக, கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை வேலைச் செய்வதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும், கிறிஸ்தவச் சமய ஒழுக்க நெறிகளைக் கடைபிடிக்க அனுமதியளிக்க வேண்டும் என்றும், அருள்பணியர் முறையிடுவது அரசை எதிர்ப்பதாகும் என கல்லன் அருள்பணியர் ஜான் காக்ஸ் (John Cox) மீது குற்றம் சுமத்தினார். கிறிஸ்தவர்களுக்குச் சிறப்பு சலுகை கொடுத்தால் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அரண்மனைப் பணிகள் ஸ்தம்பித்துவிடும் என்றும் கூறி, ஞாயிற்றுக் கிழமை அரண்மனைப் பணிக்குச் செல்ல கல்லன் கிறிஸ்தவர்களைக் கட்டாயப்படுத்தினார்[15] பணிக்கு வராதவர்கள் துன்புறுத்தப்பட்டனர்.

அருள்பணியர் தங்களுக்குள் உள்ள புகார்களை ஆங்கிலப் பிரதிநிதி வழியாகவே சென்னை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

எனவே அருள்பணியர் இங்குள்ள அதிகாரிகளின் தவறையும், இங்கு நடக்கும் கொடுமைகளையும் சென்னை அரசுக்கு எழுதி ஆங்கிலப் பிரதிநிதியிடம் கொடுத்தனர். ஆங்கிலப் பிரதிநிதி திவானுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் உடந்தையாக இருந்ததால், புகார் மனுக்களைச் சென்னைக்கு அனுப்பவில்லை. எனவே ஆங்கிலப் பிரதிநிதிக்கும், அருள்பணியருக்கும் இடையே பனிப்போர் மூண்டது. அருள்பணியர் நேடியாகவே சென்னை அரசுக்குப் புகார் செய்தனர். இதனால் அருள்பணியரையும், கிறிஸ்தவர்களையும் துன்புறுத்தினர்.[16]

சமுதாயம் சார்ந்த காரணங்கள்

ஓர் எல்லைப் பகுதிக்குள் வாழும் மக்களுக்குள் இருக்கின்ற பரம்பரை பழக்கவழக்கங்கள் தோழமை உணர்வுடன் கொள்ளுகின்ற உறவுகள், கருத்துப் பரிமாற்றங்கள் சமூக அமைப்பை உருவாக்குகின்றன. இச்சமூக அமைப்பு அந்தச் சமூகத்தில் வாழும் ஆற்றல் பெற்றவர்கள் எடுக்கும் தீர்மானங்களால் செயல்வடிவம் பெறுகிறது. பல நிலைகளில் இத்தீர்மானங்கள் ஆற்றலற்றவர்களை அடக்கியாளும் வகையிலேயே அமைகின்றது. திருவிதாங்கூர் அரசிலும் உயர் சாதி இந்துக்கள் அடக்கியாளும் முறையைப் பின்பற்றினர். ஆற்றலற்ற தாழ்ந்த சாதியினர் மானுடத் தன்மையை இழந்து வாழும் நிலை ஏற்பட்டது. அருள்பணியர் இத்தகைய அடக்கியாளும் பண்புகளை உடைத்து சமத்துவச் சமுதாயம் படைக்கப் பணியாற்றினர். இது சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது. இம்மாற்றங்கள் மக்கள் அனுபவித்த துன்பங்களின் வழியே முழுமையடைந்தன.

கர்னல் மன்றோவின் செல்வாக்கு : ஆங்கிலப் பிரதிநிதியான கர்னல் மன்றோ, திவான் பொறுப்பை ஏற்றவுடன் அருள்பணியர் இவரை நற்செய்திப் பணிக்கு அதிகமாகப் பயன்படுத்தினர். ஆங்கிலேயருக்குத் தர வேண்டிய கடன் தொகையைக் குறுகிய காலத்திற்குள் சேகரித்ததினால் சிறந்த நிர்வாகி என்ற பெயர் பெற்றார். கிறிஸ்தவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், உரிமைகளையும் அரசிடமிருந்து பெறுவதற்கு அருள்பணியர் கர்னல் மன்றோவைப் பயன்படுத்தினர். குறுகிய

காலத்திற்குள்ளாக கிறிஸ்தவர்கள் பல சலுகைகளைப் பெற்றனர். இதனை வைதீக இந்துக்களாலும் (Orthodox Hindus) பாரம்பரிய இந்துக்களாலும் (Traditional Hindus) ஏற்றுக் கொண்டு அமைதியாக இருக்க முடியவில்லை. இவர்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தங்களுடைய எல்லைக்குள் இருந்த கிறிஸ்தவர்களைக் கொடூரமான முறையில் சித்தரவதைச் செய்தனர்.[17]

1811-ஆம் ஆண்டு கர்னல் மன்றோ திவானாகப் பொறுப்பேற்றவுடன் நிர்வாகத்தில் பல அதிரடி மாற்றங்களை ஏற்படுத்தினார். நாட்டின் நிர்வாகம், இராணுவம், நீதித்துறை ஆகிய அனைத்துத் துறைகளின் அதிகாரங்களும் காரியக்காரர்களிடம் குவிக்கப்பட்டிருந்தன. இதுவே நாட்டின் சீர்கேடுகளுக்குக் காரணம் என உணர்ந்த மன்றோ வ-யசர்வாதிகாரியக்காரர், சர்வாதிகாரியக்காரர்[18] என்ற பதவிகளை ஒழித்தார்.[19] காரியக்காரர்களிடமிருந்து நீதி வழங்கும் அதிகாரத்தைப் பறித்து விட்டு வரியை வசூ-க்கும் அதிகாரத்தை மட்டும் கொடுத்தார்.[20] நீதி வழங்குவதற்காய் ஐந்து ஜில்லா நீதிமன்றங்களை ஏற்படுத்தி நீதித்துறையைச் சீரமைத்தார். அரசு அதிகாரிகளை விசாரணை செய்வதற்காக Huzur நீதிமன்றத்தை 'ஏற்படுத்தினார்[21]. இத்தகைய நிர்வாக மாற்றங்களினால் பாரம்பரியமாய் இப்பணிகளை ஏற்று நடத்தி வந்த உயர் சாதி இந்துக்கள் கர்னல் மன்றோவின் செயல்பாடுகளை எதிர்த்தனர். இது கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பங்களுக்குக் காரணமாயிற்று.

பிடாகைகாரர்களின் ஆலோசனைக் குழுவை ஒழித்தல் : நாஞ்சில் நாட்டு சூத்திரர்கள் தங்களுக்குள்ளாக ஒவ்வொரு கிராமத்தில் இருந்து இரண்டு அல்லது மூன்று நபர்கள் வீதம் ஏறத்தாழ 200 நபர்கள் கொண்ட அமைப்பினை வைத்திருந்தனர். இவ்வமைப்புக்கு "பிடாகைக்காரர்களின் ஆலோசனைக்குழு" என்று பெயர். இக்குழு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதத்தில் சுசீந்திரம் கோயில் தேர்த்திருவிழாவின் போது ஒன்று கூடி தங்கள் சாதியமைப்புக் குறித்து விவாதித்து, கீழ்ச்சாதியினரை ஒடுக்குவதற்குரிய சட்டங்கள் இயற்றி நடவடிக்கைகள் மூலம்

தண்டனை வழங்குவர். அரசர்களும் இந்த அவைக்குக் கட்டுப்பட்டே இருப்பர். கர்னல் மன்றோ இப்படிப்பட்ட கீழ்த்தரமான செயல்பாடுகளை நீக்க, இவர்களின் அதிகாரத்தை அடக்கி இந்த ஆலோசனைக் குழுவுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இவரின் இவ்வகை செயல்பாட்டால் நாஞ்சில் நாட்டு சூத்திரர்கள் பெரிய கிளர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமல்லாது, கிறிஸ்தவர்களை கண்டதும் அவர்களைத் துன்புறுத்தி அவர்களின் உடமைகளை அழித்தனர்.[22]

அடிப்படை உரிமைக்காகப் போராடுதல் : சீரிய கிறிஸ்தவர்கள் திருவிதாங்கூர் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றவர்களாய் இருந்தனர். பொது சாலைகளில் பயணம் செய்யவும், நீதிமன்றங்களில் சென்று தங்கள் வாதத்தை நீதிபதியிடம் தெரிவிப்பதற்கும், வழிபாட்டுமனை கட்டுவதற்கும் உரிய அனைத்து அடிப்படை உரிமைகளையும் பெற்றுச் சமுகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மக்களாய் வாழ்ந்தனர். இதைப் போன்று அனைத்து அடிப்படை உரிமைகளும் C.M.S. பணியின் மூலம் கிறிஸ்தவத்தை ஏற்ற மக்களுக்கும் கிடைத்தது. ஆனால் L.M.S. கிறிஸ்தவர்களுக்கு இந்த உரிமைகள் மறுக்கப்பட்டன.[23] 1851 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் அரசு C.M.S. கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்த அடிப்படை உரிமைகளை ரத்து செய்தது. C.M.S. செயலர் N.J. மூடி (N.J. Moody) சென்னை அரசுக்கு எழுதி கடிதத்தில் "சீரிய கிறிஸ்தவத்தை யார் ஏற்றுக் கொண்டாலும் அவர்கள் சிறப்புத் தகுதி பெற ஏற்புடையவராகின்றனர். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற ஏற்றத்தாழ்வு இல்லை. இதே நிலைமை இசுலாமியச் சமயத்திலும் பின்பற்றப்படுகின்றது. ஆனால் C.M.S. கிறிஸ்தவர்களுக்கு இவ்வுரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே எல்லா உரிமைகளையும் மீண்டும் பெற அனுமதியளிக்க வேண்டும்"[24] எனக் குறிப்பிட்டார். சென்னை அரசு C.M.S. கிறிஸ்தவர்களுக்கு அனுமதியளித்தது. சீரிய கிறிஸ்தவர்கள் அனுபவித்து வந்த அடிப்படை உரிமைகளை C.M.S. கிறிஸ்தவர்களும் சென்னை அரசு வழியாகப் பெற்றுக் கொண்டதை L.M.S. அருள்பணியர் மேற்கோள் காட்டி L.M.S. கிறிஸ்தவர்களுக்கும் இந்த அடிப்படை உரிமைகள் வேண்டும் என வாதிட்டனர். இதை உயர்சாதி இந்துக்கள் கடுமையாக எதிர்த்தனர்.[25]

ஆற்றூர் அதிகாரத்தின் கீழ் உள்ள கண்ணனூர் திருச்சபையின் கிறிஸ்தவரான வேதமாணிக்கம் என்பவர் அரண்மனைப் பணிக்கு மரங்களை வெட்டி சென்றதற்குரிய ஊதியத்தைக் கேட்ட போது, இவர் கிறிஸ்தவர் என்ற ஒரே காரணத்திற்காக அவருக்கு ஊதியம் கொடுக்காது துன்புறுத்தினர். குன்னங்காடு, அழகன்பாறை, மண்டவிளை போன்ற இடங்களில் உள்ள கிறிஸ்தவர்கள் ஊதியமின்றி அரண்மனைப் பணிக்கென்று மரங்களை வெட்டிக் கொண்டு வரக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஐந்து நாள் பட்டினியோடு பணி செய்த அவர்கள் தாங்கள் வேலை செய்ததற்குரிய ஊதியத்தைப் கேட்ட போது கிறிஸ்தவர்கள் என்ற காரணத்திற்காக ஊதியம் கொடுக்காது மேலும் பணி செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.[26]

கிறிஸ்தவ நற்பண்புகள் : புதிதாய் கிறிஸ்தவத்தை ஏற்றவர்களுக்கு அருள்பணியர் கிறிஸ்தவ அறநெறிகளைக் கற்றுக் கொடுத்தனர். அரசு அதிகாரிகளுக்கு கையூட்டுக் கொடுப்பது தவறான செயல் என்பதைக் கூறியதால் கிறிஸ்தவர்கள் அரசு அதிகாரிகளுக்கு கையூட்டுக் கொடுக்க மறுத்தனர். இதன் காரணமாக அரண்மனையில் ஊழியம் செய்யும் போது அதை மேற்பார்வையிடும் அதிகாரிகள் கிறிஸ்தவர்களை அதிகமாகத் துன்புறுத்தினர். மக்கள் வரி செலுத்தும் போது அதிகாரிகளுக்கு கையூட்டுக் கொடுத்தால் வரியைப் பாதியாகக் குறைத்து விடுவர். இச்செயல்களையும் கிறிஸ்தவர்கள் எதிர்த்தனர்.[27] எனவே அதிகவரி சுமத்தப்பட்டு அதனைச் செலுத்த இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். வரி செலுத்த முடியாத கிறிஸ்தவ மக்களை மனித நேயமற்ற முறைகளில் கொடுமைப்படுத்தினர்.

கிறிஸ்தவர்களின் விடுதலை உணர்வு : அருள்பணியாற்ற வந்த மேல் நாட்டு அருள்பணியர் திருவிதாங்கூர் பகுதியிலுள்ள அடிமைத்தனங்களை மாற்ற சமூகப் பணியில் ஈடுபட்டனர். றிங்கல்தௌபே தம் கடிதத்தில் என்னுடைய வருகை வரைக்கும் இசுலாமியரும், தாழ்ந்த இன சிலைவணக்ககாரரும், ரோமன் கத்தோ-க்கக் கிறிஸ்தவர்களும் அனுபவித்து வந்த துயரங்களும்,

ஒடுக்குதல்களும் அதிகம். நாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்ற விழிப்புணர்வும் அவர்களுக்கு இல்லை. இது எங்களின் தலை எழுத்து என்றே இருந்தனர்"[28] என எழுதுகிறார். ஆனால் அருள்பணியர் கிறிஸ்தவத்தை ஏற்ற மக்களுக்கு விடுதலை உணர்வையூட்டி, தங்களுக்கு விடுதலை வேண்டும் என்று அரசிடம் கேட்பதற்கு போராட்டங்களை நடத்தி, மக்களை ஈடுபடுத்தி தாங்களே முன்னின்று நடத்தினர்[29]. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி எந்த ஒரு ஆங்கிலேயரையும் கைது செய்ய கூடாது என்ற எட்டாம் பிரிவின் படி[30] அருள்பணியர் பாதுகாக்கப்பட்டனர். அருள்பணியர் மீதுள்ள வெறுப்புணர்வைக் கிறிஸ்தவர்கள் மீது வெளிப்படுத்தி கிறிஸ்தவர்களை அதிகமாகத் துன்புறுத்தினார்கள்.

அருள்பணியரின் சமூக ஈடுபாடு : நற்செய்தியை அறிவிப்பதும், கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டவர்களைப் பாதுகாப்பதும் தங்கள் பணியின் அடிப்படை நோக்கமாக அருள்பணியர் கொண்டனர். ஆனால் திருவிதாங்கூரிலுள்ள மானுடத் தன்மையற்ற செயல்களை அறிந்த அருள்பணியர் தம் அடிப்படை நோக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலை பணியைச் செய்வதோடு மட்டுமல்ல, கிறிஸ்தவர்களுக்கு எதிராகச் செயல்படும் ஆதிக்க சக்திகளின் ஆற்றலை முறியடிக்க வேண்டும் என்றக் கொள்கையையும் பின்பற்றினர்.[31] சாதியப் பகுப்பினால் அடிமைப்பட்டிருந்த மக்கள், விடுதலை பெற அருள்பணியரை அணுகிய போது, ஆங்கில அரசின் உதவியோடு விடுதலைப் பெற்றுத் தந்தனர். சமூகத்தில் வாழ்வு ஆதாரங்கள் இல்லாது வாழ்ந்த நாடார் இனத்தவர் அருள்பணியரின் உதவியோடு சமூக அங்கீகாரம் பெற்றனர். வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்க அருள்பணியர் உதவி செய்ததால் இவர்களின் வருவாய் பெருகியது. இதன் மூலம் அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களும் கிறிஸ்தவத்தைப் பின்பற்றி விடுவர் என்ற அச்ச உணர்வு உயர்சாதி இந்துக்களுக்கு ஏற்பட்டது.[32] சமுதாய அமைப்பிலுள்ள கட்டுப்பாடுகள் தளர்வதையும், அதன் வழியில் தங்கள் இருப்பு நிலையில் மாற்றம் ஏற்படுவதையும் உணர்ந்த இவர்கள் மேலும் மக்கள் கிறிஸ்தவர்களாய் மாறுவதைத் தடுத்து நிறுத்துவதற்காகக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.

அருள்பணியரின் கல்விப்பணி : அருள்பணியர் சமயப்பணி செய்த இடங்களில், சமயப்பணி மட்டும் செய்யாது கல்விப் பணியையும் செய்தனர். வழிபாட்டு மனைகள் கட்டிய இடங்களிலெல்லாம் பாடசாலைகளையும் நிறுவினர். அந்தப் பாடசாலைகளில் பணிபுரிய தென்திருவிதாங்கூர் அரசு ஆசிரியர்களை நியமித்தது. இதனால் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைப் பெருகியது.[33] இது உயர்சாதி இந்துக்களுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. பிற்படுத்தப்பட்டோர் கல்வியறிவு பெற்றுவிட்டால் தங்களுக்கு அடிமைகளாகப் பணியாற்ற விரும்பமாட்டார்கள். தனிப்பட்ட உரிமைகள் கோரி தங்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வார்கள் என்று எண்ணி கிறிஸ்தவமும், கல்வியும் பரவக்கூடாது என்பதில் அதிக அக்கரைச் செலுத்தினர். கிறிஸ்தவர்களாக மாறியோர் கல்வியிலும், வாழ்க்கைத் தரத்திலும் உயர்வு பெற்றனர். எனவே தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கும், அடக்கு முறைகளுக்கும், எதிராகக் குரல் கொடுத்தனர். இதை விரும்பாத உயர்சாதி இந்துக்கள் அருள்பணியையும் கல்விப்பணியையும் தடுக்க முயன்று தோல்வியைத் தழுவினர்.[34]

கொத்தடிமை விடுதலை ஆணை : சொந்த மண்ணிலேயே அடிமைகளாகவும், சுதந்திரமில்லாமலும் வாழும் நிலை திருவிதாங்கூரில் காணப்பட்டது. அருள்பணியரின் சீரிய முயற்சியினால் சென்னை அரசு திருவிதாங்கூரிலுள்ள அனைத்துக் குழந்தைத் தொழிலாளர்களையும், கொத்தடிமைகளையும் விடுதலை செய்ய 1855 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது.[35] இதன் வழியாக 1,36,000 அடிமைகள் விடுதலைப் பெற்றனர். [36] உயர் சாதி இந்துக்களாகிய நிலச்சுவான்கள் இத்தகைய மாற்றத்திற்குக் காரணம் அருள்பணியரே என்றும், தங்களால் கிறிஸ்தவத்தை ஏற்ற மக்களுக்கு நிலங்களைக் கொடுத்து மேலும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவே இத்தகைய பணியில் ஈடுபட்டனர். [37] என்றும் அருள்பணியர் மீது குற்றம்சாட்டினர். மேலும் இந்த விடுதலை ஆணையினால் தங்கள் நிலங்களில் பணிபுரியும் அடிமைகள் எவரும் தங்களை மதிப்பதில்லை என்றும், தங்களை எவரும் கட்டுப்படுத்த முடியாது என்றும் கூறுவதாக ஆங்கிலப்பிரதிநிதி கல்லனிடம்,

நிலச்சுவான்கள் புகார் செய்தனர்.[38] இதனைத் தொடர்ந்து மீண்டும் அடிமைகளாய்ப் பணியாற்றக் கிறிஸ்தவர்கள் கட்டாயப்படுத்தப் - பட்டனர். ஊதியமில்லாமல் பணி செய்வதற்குரிய அனுமதி பத்திரத்தில் கையொப்பமிடவும் கட்டாயப்படுத்தினர்.[39] ஆனால் அருள்பணியரின் ஆலோசனையும், ஆதரவும், மீண்டும் இவர்கள் அடிமைகளாய் மாறுவதி-ருந்து தப்புவித்தது.

திருவிதாங்கூரிலுள்ள தாழ்ந்த இன மக்களின் சமூக நிலையை அருள்பணியர், சென்னை அரசுக்குப் புகார் மடல் மூலம் தெரிவித்தனர். "சூத்திரன் ஆளும் வர்க்கத்தின் சகோதரனாய் மதிக்கப்படுகிறான். குற்றவாளியான சூத்திரன் நீதிபதியை நேரில் சந்தித்து புகார் கொடுக்கலாம். ஆனால் நாடார் இனத்தவர் தங்களின் புகாரை நேரடியாகச் சொல்ல அனுமதியில்லை. நீதிமன்றத்திற்கு வெளியே இழிவானவனைப் போல தலைகுனிந்து கரங்களைக் கட்டி நின்று புகார் செய்ய வேண்டும். அடிமை ஒழிப்பு அரசு ஆணை இங்கு முழுமையாய் நடைமுறைப்படுத்தாத காரணத்தால் அடிமைநிலை தொடர்கிறது. எனவே இங்குப் பணியாற்றும் தகுதியற்ற ஊழல் செய்யும் அதிகாரிகளைக் கண்காணிக்க திறமையான ஐரோப்பியர்களை முழு அதிகாரத்தோடு பொது அலுவலகங்களிலும், நீதித்துறையிலும் நியமிக்க வேண்டும்"[40] என எழுதினர். ஆனால் திருவிதாங்கூர் மக்களை அருள்பணியர் தவறான போதனைகளினால் திசைத்திருப்பி, பேராட்டங்களில் ஈடுபடுத்துவதால் சமூகத்தில் அமைதியின்மை ஏற்படுகிறது எனக் கிறிஸ்தவர்களையும் அருள்பணியரையும் குறித்து திவான் குற்றம் சாட்டினார்.

இனம் சார்ந்த காரணங்கள்

திருவிதாங்கூர் பேரரசில் சாதிய கட்டுப்பாடுகள் மானுடர் மனதில் ஆழமாய் வேரூன்றிய சமூக அமைப்பாகும். ஆதிக்க வர்க்கத்தினர் ஏழை மக்களை நசுக்கி ஒடுக்குவதற்குச் சாதியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். சாதியம் இந்து சமயத்தின் அடிப்படை கொள்கை என்பதினால் சாதியத்தை எதிர்ப்பவர்கள் தங்கள் சமயத்தின் எதிர்ப்பாளர்கள் எனக் கருதப்பட்டனர். இந்தச் சாதிய அமைப்பை வேரோடு அழிக்க அருள்பணியர் கடுமையாகப்

போராடினர். இதனால் சாதியத்தின் ஆதரவாளர்கள் அருள்பணியரைத் தங்கள் எதிரிகளாகவே பார்த்தனர். இதன் காரணமாகக் கிறிஸ்தவர்கள் பல துன்பங்களை அனுபவித்தனர்.

அருள்பணியரின் அரிய முயற்சியினால் நாடார் இனத்தவர் சமூக, பொருளாதார, வாழ்க்கைத்தரத்தில் வளர்ச்சி பெற்றதால் உயர் சாதி இந்துக்கள் பொறாமை கொண்டனர். வருணாசிரம தர்மத்தின் அடிப்படையில் பிராமணியமே தலைசிறந்த சாதியம் என்ற கருத்தியலை வ-யுறுத்திக் கிறிஸ்தவ நாடார் இன மக்களின் வளர்ச்சியை அழிக்க முயன்றனர். "கிறிஸ்தவர்களுக்கு நல்வாழ்வு" என்ற அருள்பணியின் நோக்கினை நிறைவேற்ற ஊறிப்போன சாதிய அமைப்பை உடைப்பதற்குரிய அத்தனைச் செயல்பாடுகளிலும் அருள்பணியர் ஈடுபட்டனர். [41] இது உயர்சாதி இந்துக்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த காரணமாயிற்று.

பிராமணர்களின் இன வெறி : 1818-ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் நாள் சார்லஸ் மீட் எழுதிய மட-ல், "பிராமணர்களும் சூத்திரர்களும் எங்கள் அருள்பணியைப் புகழ்கின்றனர். எங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் தான் தந்தை, பாதுகாப்பாளர் என்று சொல்- அவர்கள் பிள்ளைகளை எங்கள் பாதப்படியில் வைத்து, இவர்களை ஆசீர்வதியுங்கள் என்று கூறுகின்றனர்"[42] என எழுதுகின்றார். ஆனால் அருள்பணி தங்களை விட தாழ்ந்த இனத்தவரிடையே நடைபெறுகிறது என்றும், தாழ்ந்த இனத்தவரே கிறிஸ்தவத்தை ஏற்கின்றனர் என்றும் அறிந்தவுடன் கிறிஸ்தவத்தைப் பிராமணர்கள் எதிர்த்தனர். Dr. புக்கன்னன் எழுதிய மட-ல் "பிராமணர்களும், அரசரின் ஆலோசகர்களும், 25 வயதுடைய அரசர் பாலராமவர்மா கிறிஸ்தவர்களுக்கு எதிராகச் செயல்பட வேண்டும் எனத் தூண்டினர்"[43] என எழுதினார். இந்த நிகழ்வுகள் சமத்துவத்தை விரும்பாமல் அடிமைத்தனத்தைப் பாதுகாக்க விரும்பும் உயர் சாதி இந்துக்களின் இனவெறியை வெளிப்படுத்துகிறது.

உயர்சாதி இந்து மக்களின் சமய மாற்றம் : அருள்பணியரின் சிறப்பு மிக்கப் பணியினால் உயர்சாதி

இந்துக்களும் கிறிஸ்தவத்தை ஏற்றனர். றிங்கல்தௌபேயின் அருள்பணியினால் 1811-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் நாள் நாயர் ஒருவர் திருமுழுக்குப் பெற்றார். அதைத் தொடர்ந்து நாயர்கள் பலர் கிறிஸ்தவத்தை ஏற்றனர். குறிப்பாக, தளவாய் உம்மினித்தம்பியின் சகோதரர் கிறிஸ்தவராகி சாமுவேல் தம்பி எனப் பெயர் மாற்றம் பெற்றார். இதனால் நாயர்கள் கிறிஸ்தவர்களை எதிரியாக நடத்தினர்.[44] மேலும் உயர்சாதியினர் கிறிஸ்தவத்தை ஏற்கக் கூடாது என்ற சிந்தனைக் கொண்டு தங்கள் சாதியி-ருந்து கிறிஸ்தவத்தை ஏற்றவர்களை நாயர்கள் கடுமையாகத் துன்புறுத்தினர். இச்செயலைச் சாதி இந்துக்களும், சூத்திரரும் முன்னின்று செயல்படுத்த பிராமணர்கள் பின்னணியில் நின்று ஊக்கப்படுத்தினர்.[45] திருவிதாங்கூரின் மேற்குப் பகுதி திருப்பணிகளைச் செய்து வந்த சார்லஸ் மீட் நெய்யூரில் அருள்பணித் தளம் அமைப்பதற்குரிய இடம் வாங்குவதில், அப்பகுதியில் நிலப்பிரபுவாக இருந்த நாயர் இனத்தைச் சேர்ந்த இராமன் தம்பி உதவினார்.[46] இந்த நிகழ்வு 1828-ஆம் ஆண்டு நடைபெற்றது. இராமன் தம்பியும் அவரது குடும்பத்தினரும் அருள்பணியருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மிகவும் உதவியாக இருந்தார்கள். இது உயர்சாதியினரைக் கோபமூட்டியது. இராமன் தம்பியின் மீது பொய் வழக்கு புனைந்து, ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் சிறையில் அடைத்தனர்.[47]

சாதியத் தகவுகளைத் தக்க வைத்தல் : உயர்சாதியினர் சமுதாயத்தின் மேல் நிலையில் இருப்பதற்காகச் சாதியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். தங்களின் பாரம்பரியம், சமூக அந்தஸ்து, ஆதரவாளர்கள், வசதியான வாழ்க்கை, தீண்டாமை, போன்றவற்றைத் தக்க வைத்துக் கொள்ள சாதியம் பயன்படுத்தப்பட்டது. அருள்பணித்தளங்களின் பெருக்கமும், அருள்தொண்டர்களின் சீரிய செயல்களும், புதிய திருச்சபைகளின் தோற்றமும், சாதியவாதிகளின் எதிர்ப்பை மேலும் வலுப்படுத்தியது. கிறிஸ்தவத்தின் வளர்ச்சி, சாதி இந்துக்களுக்குப் பொறாமையையும், வெறுப்பையும் ஏற்படுத்தின. தாங்கள் இதுவரைக்கும் கட்டிக்காத்த சாதியத் தகவுகள் தம்மை விட்டு பறிக்கப்பட்டு விடும் என்ற பயத்தில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக வன்முறையையும், கொடுஞ்செயலையும் பின்பற்றினர்.[48]

சூத்திரர்களின் அடக்கு முறை : நாடார் இனத்தவரின் வயல் நிலங்களையோ, தோட்டங்களையோ, சூத்திர இனத்தவர் தமக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று விரும்பினால், அரசு அதிகாரிகளின் துணையோடு சொந்தமாக்கிக் கொள்வர். நாடார் இனத்தவர் எவ்வித எதிர்ப்புணர்வுகளையும் வெளிப்படுத்த முடியாத நிலையில் இவர்கள் மீது பொய் குற்றச்சாட்டுகளைக் கூறி காவல் நிலைய அதிகாரிகளின் துணையோடு தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வர். ஆனால் அருள்பணியின் மூலமாய் மாற்றம் பெற்ற நாடார் கிறிஸ்தவர்கள் புத்திசா-களாகவும், எதிர்த்து நின்று செயல்படும் ஆற்றல் பெற்றவர்களாகவும் மாறினர். கிறிஸ்தவர்களாய் மாறிய நாடார் இனத்தவரின் உடமைகளைச் சூத்திர இனத்தவர் அபகரித்து எடுக்க நாடார் கிறிஸ்தவர்கள் அனுமதிப்பதில்லை. சூத்திரர்களை மதிப்பதுமில்லை. [49] இப்போக்கு சூத்திரர்கள் கிறிஸ்தவர்களை துன்புறுத்த ஏதுவாயிற்று.

அரசியல் சார்ந்த காரணங்கள்

மன்னராட்சியின் கீழே இயங்கி வந்த திருவிதாங்கூர் அரசு 1809 ஆம் ஆண்டு ஆங்கில ஆதிக்கத்தின் முழு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது எனினும் மன்னராட்சி கலைக்கப்படாது நிர்வாகத்திலும், வாணிபத்திலும் ஆங்கில அரசு அதிக ஈடுபாட்டைச் செலுத்தியது. இந்நிலையில் திருவிதாங்கூர் அரசுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், ஆங்கில அரசுக்கும் இடையே பல அதிகார இழுவை நிலை ஏற்பட்டது. தங்களின் அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இரு அரசுகளும் எடுத்த முயற்சியில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர்.

அரசரின் அதிகார இழப்பு : 1795 ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் திருவிதாங்கூர் அரசுக்கும் இடையே நடைபெற்ற நட்புறவு உடன்படிக்கையைத் தொடர்ந்து இரு அரசுகளுக்கும் இடையே உள்ள உறவு சம நிலையில் வலுவடைந்தது. ஆனால் 1800 ஆம் ஆண்டு ஆங்கிலப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கர்னல் மெக்காலே திருவிதாங்கூர் பகுதியைத் தம்

முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்குரிய உடன்படிக்கைகளைச் செய்ய அரசரைக் கட்டாயப்படுத்தின போது அரசர் பாலராமவர்மா முழுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்.[50] எனினும் மிகவும் கட்டாயப்படுத்தியதால் 1805-ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள் உடன்படிக்கையில் அரசர் கையெழுத்திட்டார். அரசர் கையெழுத்திட்டவுடன் அரசரின் அதிகாரச் சமநிலையில் இழப்பு ஏற்பட்டது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, அரசரின் அதிகாரம் முழுமையையும் கைப்பற்றியது. 1809-ஆம் ஆண்டு ஜனவரி 2-ஆம் நாள் அரசர் Governor General –க்கு எழுதிய மட-ல் "ஆங்கிலப் பிரதிநிதியால், அதிகம் துன்புறுத்தப்படுகிறேன். தவறான நோக்கத்தோடு தரும் தொல்லை எனக்கு ச-ப்பை ஏற்படுத்துகிறது. என் சாப்பாடும், என் தூக்கமும் கசப்பாகிவிட்டன."[51] என்று எழுதுகிறார். 1809 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் நாள் Lord Muntro அரசுக்கு எழுதிய கடிதத்தில் "ஆங்கில அரசுக்குக் கட்ட வேண்டிய கப்பத் தொகையைப் பிரித்து கட்டுவதுதான் அரசரின் பணி, அதற்காகவே அரசராய் அமர்த்தபட்டிருக்கிறீர்"[52] என கண்ணிய மிக்க அரசரின் இருப்பு நிலையைக் கொச்சைப்படுத்தி எழுதினார். திருவிதாங்கூர் அரசர் அதிகாரமற்ற, ஆனால் பேச்சளவில் மட்டுமே அரசர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்[53] என முத்துக்குட்டி சுவாமிகள்[54] தம் அகிலத்திரட்டு என்னும் நூ-ல் குறிப்பிடுகின்றார். அதிகாரம் பறிக்கப்பட்ட இழிநிலையில் ஆங்கில அரசு மீது வெறுப்புக் கொண்ட அரசரும், அரசரைச் சார்ந்த அரசவை அதிகாரிகளும், ஆங்கில அரசின் ஆதரவு பெற்று வளரும் L.M.S. கிறிஸ்தவத்தையும், L.M.S. கிறிஸ்தவர்களையும் முழுமையாக எதிர்த்தனர், அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்தனர்.

வேலுதம்பி தளவாயின் அரசியல் தந்திரம் : 1802-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் தளவாயாக நியமிக்கப்பட்ட வேலுதம்பி, கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியாய் தப்பியோடி கொச்சி நாட்டில் தங்கியிருந்த கர்னல் மெக்காலேயிடம் தஞ்சம் புகுந்தார்.[55] மெக்காலேயின் உதவியோடு மீண்டும் தளவாய் பகுதியைத் தொடர்ந்தார். இதற்கு நன்றிக் கடனாக ஆங்கில ஆதிக்கம் திருவிதாங்கூரில் நிலை நிறுத்தப்படுவதற்கான உடன்படிக்கை ஏற்பட

வேலுதம்பி அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.[56] ஆங்கில அரசுக்குச் செலுத்த வேண்டிய கப்பத் தொகையை வேலுதம்பி தளவாய் செலுத்தாதினால் கர்னல் மெக்காலே, வேலு தம்பி இவர்களுக்கிடையே ஏற்பட்ட அதிகார இழுவை நிலை பெரும் பகையாய் மாறியது. மெக்காலே என்ற பெயரைச் சொல்பவர்களையும் வேலுதம்பி வெறுத்தார். இச்சூழ-ல் றிங்கல்தெளபே மைலாடியில் ஆலயம் கட்ட வேலுதம்பியிடம் அனுமதி கேட்ட பொழுது "நீர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்"? என வேலுதம்பி வினவினார். அதற்கு றிங்கல்தெளபே, "நான் கர்னல் மெக்காலேயின் சமயத்தைச் சார்ந்தவன்" எனக் கூறினார். அதற்கு வேலுதம்பி "அப்படி ஒரு சமயம் உண்டு என்பது எனக்குத் தெரியாது"[57] எனக் கூறி கர்னல் மெக்காலே மீதுள்ள பகையினால் அனுமதியளிக்கவில்லை. வேலுதம்பி திருவிதாங்கூர் அரசின் தளவாயாகப் பொறுப்பி-ருந்தது வரையிலும், மைலாடியில் ஆலயம் கட்டவும், றிங்கல்தெளபே திருவிதாங்கூர் எல்லைக்குள் தங்கி பணிபுரியவும் அனுமதியளிக்கவில்லை.

நிர்வாகத் துறையின் அதிகார இழப்பு : 1805-ஆம் ஆண்டு உடன்படிக்கையில், பிரிவு ஐந்து மற்றும் ஆறின் படி ஆங்கில அரசு தேவைப்படும் போது திருவிதாங்கூர் அரசின் நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் ஏற்றெடுத்து நடத்தும் அதிகாரத்தைப் பெற்றது.[58] அரசரும் அரசவை அதிகாரிகளும் அதிகாரமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதை முத்துக்குட்டி என்ற வைகுண்டசுவாமிகள்,

> "வாளால்ப் பெரிய மன்னர் கடன்னாள் முதலாய்
> நமக்காயிருந்து காண் நம்முடைய நாளையிலே
> துடுக்கான வெள்ளை நசுறாணி அவள் தனக்காய்
> ஆச்சுதே நாடு அவனுக்கே ஆகிடினும்
> பேச்சு நாமல்லாால்ப் பின்னொருவர் காணாதே"

எனக் குறிப்பிடுகிறார். அதாவது, ஆங்கிலேயர் திருவிதாங்கூர் அரசைக் கொஞ்சம் கொஞ்சமாகத தன் வயப்படுத்திக் கொண்டிருந்தனர். நாட்டின் நிர்வாகம் ஆங்கிலேயரிடம் மாறிவிட்டதே என அரசர் பரிதவிப்புக் கொண்டார். அதிகா;ரம் இன்றி வெறும்

பேச்சளவில் மட்டுமே அரசர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதே இப்பாட-ல் பொருளாகும். இத்தகைய நிலை மண்ணின் மைந்தர்களை வெறுப்படையச் செய்தது. இதனுடைய பிரதிப-ப்பினால் கிறிஸ்தவர்கள் பாதிப்படைந்தனர்.

அருள்பணியரின் அரசியல் ஈடுபாடு : 1829 ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் இளவரசி பார்வதிபாய் வெளியிட்ட அரசு ஆணை என்னவென்றால், "கிறிஸ்தவத்தை அறிவிக்கக்கூடாது"[59] என்ற மறைமுகத்தடையுத்தரவாகும். இதனால் தளர்ந்து போன அருள்பணியர் ஆங்கில அரசின் உதவியை நாடினர். சார்லஸ் மீட் எழுதிய மட-ல், "திருவிதாங்கூர் ஒரு சுதந்திரமான நாடாக அறிவிக்கப்பட்டாலும் 1805-ஆம் ஆண்டு உடன்படிக்கையின் படி திருவிதாங்கூர் அரசு நிர்வாகத்தில் எந்த நேரமும் தலையிட ஆங்கிலக் கம்பெனிக்கு முழு உரிமை உண்டு என்ற பிரிவு ஐந்தின் படி ஆங்கிலக் கம்பெனி உடனடியாக அரசு நிர்வாகத்தில் தலையிட்டு நீதி நியாயத்தை நிலை நிறுத்த வேண்டும். அப்படி நீதியை நிலைநிறுத்தவில்லையெனில் இங்கு நடக்கும் அனைத்துக் கொடுமைகளுக்கும் ஆங்கிலக் கம்பெனி தார்மீகப் பொறுப்பு ஏற்க வேண்டும்"[60] என எழுதினார். இம்மடல் அரசு ஆணை வெளியிட்ட இளவரசியை அதிகம் பாதித்தது. அருள்பணியர் கிறிஸ்தவர்களின் நலனுக்காகத் திருவிதாங்கூர் நிர்வாகத்தில் தலையிடுவதாக இளவரசி நினைத்துத் தம் எதிர்ப்பைக் கிறிஸ்தவர்களின் மத்தியில் வெளிபடுத்தினார்.

திறமையற்ற ஆங்கிலப் பிரதிநிதி : கி.பி.1840-க்கும் 1860-க்கும் இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்தவர்மேல், துன்புறுத்தல் உச்ச நிலையை அடைந்தது[61]. இக்காலகட்டத்தில் ஆங்கிலப் பிரதிநிதியாகயிருந்த ஜெனரல் கல்லனுடைய செயல்பாடு கிறிஸ்தவ அருள்பணியரின் எண்ணங்களுக்கு முரணாகவே அமைந்தது. ஜெனரல் கல்லன் திருவிதாங்கூர் வரும்போது, தெலுங்கு பிராமணர் கிருஷ்ணராவ் (Krishna Rao) என்பவரை மசூ-பட்டணத்தி-ருந்து தம்மோடு அழைத்து வந்தார். Huzoor Deputy Peiskar ஆக நியமிக்கப்பட்ட இவர் நிர்வாகத் திறமையால் திருவிதாங்கூரில்

தம்முடைய செலவாக்கை நிலை நிறுத்தினார்[62]. திருவிதாங்கூர் அரசர் ஆங்கிலப் பிரதிநிதி மீது கொண்ட வெறுப்பினால் கொல்கத்தாவில் உள்ள உயர் அதிகாரியிடம், கல்லனை மாற்ற வேண்டுகோள் விடுத்தார். ஆனால் கிருஷ்ணராவ் தம் அரசியல் தந்திரத்தினால் கல்லனின் ஆங்கிலப் பிரதிநிதிப் பதவியைத் திருவிதாங்கூரில் தக்கவைத்தார். எனவே அரசர் கிருஷ்ணராவைப் பதவியி-ருந்து நீக்கினார்[63]. அரசரின் மரணத்திற்குப் பின் ஜெனரல் கல்லன் மீண்டும் கிருஷ்ணராவை Devan Peishkarஆக நியமித்தார். அரசர் மார்த்தாண்ட வர்மாவின் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு கிருஷ்ண்ராவைத் திவானாக நியமித்தது[64]. இந்நிகழ்வு ஆங்கிலப்பிரதிநிதியாகிய கல்லன் சுதந்திரமாய் பணிச் செய்ய முடியாதபடி, பிராமணராகிய திவான் கிருஷ்ணராவின் அதிகாரத்தின் கீழ் ஓர்அரசியல் அடிமையாகவே பணியாற்ற வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது. ஏற்கனவே பிராமணர்களால் வெறுக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் மேலும் அதிக துன்பங்களை அனுபவித்தனர்.

ஆங்கில அதிகாரத்தினால் வளர்ந்த கிறிஸ்தவமும், ஒழிக்கப்பட்ட அடிமைத்தனமும் ஆங்கிலப்பிரதிநிதி கல்லனால் நசுக்கப்பட்டது. திருவிதாங்கூர் அரசில் கிறிஸ்தவர்களின் துன்பம் குறித்து John Cox, Frederick Beylis ஆகியோர் சென்னை அரசுக்கு எழுதிய புகார் மனுவுக்கு கல்லன் பதிலுரையாக, "இங்குள்ள L.M.S கிறிஸ்தவர்கள் அமைதியுடனும், அரசு ஆதரவுடனும் சிறப்பாய் வாழ்கிறார்கள்" என்று மடல் எழுதினார். ஆனால் திருவிதாங்கூர் கிறிஸ்தவர்களும், அருள்பணியரும் சென்னை அரசுக்கு எழுதிய புகார் மனுக்கள் சரியானவை என்றும், கல்லனுடைய பதில் மனு போ-யானது என்றும் சென்னை ஆளுநர் Lord Harris அறிக்கை வெளியிட்டார்[65].இது மீண்டும் கல்லனைக் கோபமூட்டியது. இதனால் திவான் துணையோடு மிக அதிகமாக அருள்பணியரையும், கிறிஸ்தவர்களையும் ஒடுக்கினார்.

சென்னை பத்திரிக்கை செய்தி : திருவிதாங்கூர் அரசு அதிகாரிகளின் ஊழல், சுரண்டல், மனிதநேயமற்ற செயல்கள்,

மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் அனைத்து தவறான செயல்களையும் அருள்பணியர் பத்திரிக்கையின் வழியாக உலகுக்கு வெளிப்படுத்தினர்". 20 செப்டம்பர் 1853 மற்றும் 12 ஜீன் 1855 ஆகிய நாள்களில் வெளியிடப்பட்ட "சென்னை அதிநயம்" (Madras Athenaeum) பத்திரிக்கை"[66] மூலம் ஆங்கிலப் பிரதிநிதி கல்லன், திவான் மற்றும் அரசு அதிகாரிகளின் போ-த்தன்மை உலகுக்குத் தெரிந்து விட்டதால் திவான் கண்களுக்கு முன்பாகவே காவல் துறையினராலும், ஒவ்வொரு பகுதி தலைவர்களாலும் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர்[67] என இப்பத்திரிக்கையின் பதிப்பாசிரியர் Mr. Meade குறிப்பிடுகிறார்.

திருவிதாங்கூர் அரசு குறித்த கிறிஸ்தவர்களின் புகார் : கிறிஸ்தவத்தை ஏற்ற மக்களுக்கு அருள்பணியரும், ஆங்கில அரசும் உதவி செய்கின்றார்கள் என்ற எண்ணத்தில் அரசு அதிகாரிகளுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்படியாது, அரசு அதிகாரிகளைக் குறித்து அருள்பணியரிடம் கிறிஸ்தவர்கள் புகார் கூறினர். [68] இது திருவிதாங்கூர் அரசு அமைப்பையே குறைகூறுவதாக நினைத்து 1829ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையில், அரசு குறித்த எந்தக் குறைகளையும் அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளிடமும், அதிகாரிகளிடமுமே கூற வேண்டும் எனக் கிறிஸ்தவர்களை எச்சரித்தது. கிறிஸ்தவர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்ற எண்ணம்[69] துன்புறுத்தலுக்குக் காரணமாயிற்று.

கிறிஸ்தவர்கள் உயர்சாதி இந்துக்களாலும், அரசு அதிகாரிகளாலும், துன்புறுத்தப்பட்டதை அருள்பணியர் ஆங்கில பிரதிநிதியிடமும், திவானிடமும் ஆதாரத்தோடு தெரிவித்தனர். ஆனால் திவான், அரசு அதிகாரிகளை விசாரணையி-ருந்து தப்புவித்தார். எனவே கிறிஸ்தவர்களுக்கு நீதி கிடைக்க தரமான விசாரணைக்குழு நியமிக்க வேண்டும் எனச் சென்னை அரசுக்கு 1855-ஆம் ஆண்டு ஜீலை 26-ஆம் நாள் அருள்பணியர் கடிதம் எழுதினர்.[70] இந்நிகழ்வு திருவிதாங்கூர் அதிகாரிகள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தக் காரணமாயிற்று.

அரசு அதிகாரிகளின் சீர்கேடுகள் : குற்றவாளிகள் என நீதிமன்றத்தால் தீர்ப்பிடப்பட்ட குற்றவாளிகளையும், அரசின் பொறுப்புள்ள உயர் அதிகாரிகளாகப் பல துறைகளில் நியமித்தனர். குறிப்பாக Accountant General மற்றும் Deputy Peshkar பொறுப்புகளிலும் குற்றவாளிகளே பணியமர்த்தப்பட்டனர். இதற்காகப் புதிய அலுவலகங்கள் திறக்கப்பட்டன.[71] ஒவ்வொரு அதிகாரிகள் நியமனத்திலும் உயர் அதிகாரிகள் கையூட்டுப் பெற்றனர். கையூட்டுக் கொடுத்து பணியிலமர்ந்த அதிகாரிகள் நீதி செய்யாது பெலவீனர்களை ஒடுக்கி குற்றவாளிகளைச் சமூகத்தில் உயர்த்தினர். செல்வந்தர்கள் பெரிய குற்றங்கள் செய்தாலும் கையூட்டுக் கொடுத்து தண்டனையி-ருந்து தப்பினர், திருவிதாங்கூர் நீதிமன்றமும் நீதி செய்யாது அநீதிக்குத் துணை போனது. அரசு அதிகாரிகளுக்கு எதிராகச் சாதாரண மக்கள் நீதிமன்றத்தில் முறையீடு செய்தால் அந்த முறையீடு நீதிபதிகளின் கவனத்திற்கு வராதபடி நீதிமன்ற அலுவலர்கள் தடுத்து நிறுத்தினர். இத்தகைய சமூக அநீதிகளை அருள்பணியர் வெளிகொணர்ந்து சென்னை அரசுக்குத் தெரியப்படுத்தினர்.[72] அருள்பணியரின் மீதுள்ள பகை கிறிஸ்தவர்கள் மீது திணிக்கப்பட்டது.

அருள்பணியரின் பரிந்துரைகள் : பொய் வழக்குகள் தொடர்ந்ததால் குற்றம் செய்யாத கிறிஸ்தவர்கள் பலர் அரசின் ஆலோசனையின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். இதை அருள்பணியர் திருவிதாங்கூர் அரசுக்கு முறையீடு செய்து இவர்களைத் தண்டனையி-ருந்து விடுவிப்பதற்குப் பதிலாக ஆங்கில அரசின் பிரதிநிதிக்குப் பரிந்துரை செய்து ஆங்கில அதிகாரத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் பெறும் தண்டனையி-ருந்து விடுதலை பெற முயன்றனர். இது திருவிதாங்கூர் அரசையும், அரசரையும் அவமதிப்பதாக எண்ணி[73] தொடர்ந்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.

தேசியம் சார்ந்த காரணங்கள்

தேசியம் அல்லது தேசிய உணர்வு என்பது, ஒவ்வொரு மானிட சமுதாயமும் தமது நாட்டின் நாகரீகத் தனித்தன்மையை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தனியான அரசு அமைப்பையும், சட்டமுறைகளையும் அமைத்து, வேற்று அதிகாரத்தைச் சாராது சுதந்திரமாகத் தம் உரிமையை எடுத்துக் காட்டும் உணர்வேயாகும்[74]. திருவிதாங்கூர் அரசு ஆற்றல் மிகுந்த சுதந்திரமான அரசு என உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசாகும். தலைமைத்துவம் தரும் அரசர்களின் பெலவீனத்தால் சுய ஆட்சி உரிமைப் பேற்றினை இழந்து ஆங்கில அதிகாரத்திற்குள்ளாக வந்தது. இத்தகைய அடிமைத்தனத்திற்குரிய காரணம் யாது என மண்ணின் மைந்தர்கள் சிந்தித்தனர். என் தேசம், என் மக்கள், என் ஆட்சி என்ற "தேசிய உணர்வுகள்" அயல் நாட்டு ஆதிக்க சக்தியையும் இச்சக்தியினால் வளர்ந்து வந்த கிறிஸ்தவம் வெளிநாட்டவர் சமயம் என்பதாலும், இந்தியச் சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் வெளிநாட்டு அருள்பணியரைச் சார்ந்து இருந்ததாலும் சீர்திருத்தக் கிறிஸ்தவமும், அதைப் பின்பற்றிய சீர்திருத்தக் கிறிஸ்தவர்களும் வெறுக்கப்பட்டனர்.

பிராமணர்களின் தேசப்பற்று : திருவிதாங்கூர் சமூக அமைப்பில் அனைத்து உரிமைகளையும், அந்தஸ்தையும் பெற்றுப் பிராமணர்கள் வாழ்ந்து வந்தார்கள். அரசரைவிட செல்வாக்குப் பெற்ற இவர்கள் சாதிய அமைப்பில் முதல்-டத்தில் தங்களை நிறுத்தி வாழ்ந்து வந்தனர்.[75] வாணிபம் செய்ய வந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் திருவிதாங்கூர் அரசின் நிர்வாகத்தைத் தமதாக்கிக் கொண்டனர். இது ஆங்கிலேயர் மேல் பிராமணர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. ஆங்கிலேய அதிகாரிகளையும், அருள்பணியரையும் எதிரியாகவே பார்த்தனர். எனவே தான் ரிங்கல்தெளபே 1806-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள் எழுதிய தம் நாள் குறிப்பில், "ஆரல்வாய்மொழி கணவாய் வழியைக் கடந்து திருவிதாங்கூர் பகுதிக்கு வந்த உடனே தீவிர கிறிஸ்தவ எதிர்பாளர்களாகிய பிராமணர்கள், "நாங்கள் ஆங்கில ஆதிக்கத்தின் கீழே இருக்கவில்லை, இன்னும் அப்படி இருக்க மாட்டோம்"[76] எனக் கூறி

தம்மை பிரமாணர்கள் எதிர்த்ததாக எழுதுகிறார். கிறிஸ்தவர்களும் ஆங்கில அரசின் பிரதிநிதிகள் என்ற பார்வையிலே நடத்தப்பட்டனர்.

1809-ஆம் ஆண்டு நடைபெற்ற போர் : 1809-ஆம் ஆண்டு வேலுத்தம்பி தளவாய்க்கும், ஆங்கிலக் கம்பெனிக்கும் நடைபெற்ற போருக்குரிய காரணத்தைப் பற்றி வேலுத்தம்பி திருவிதாங்கூர் அரசருக்கு விளக்கும் போது "L.M.S.கிறிஸ்தவம் திருவிதாங்கூரில் பரவுவதைத் தடுப்பதற்காகவே இப்போர்" எனக் கூறுகிறார். கோழிக்கோடு அரசருக்கு வேலுத்தம்பி எழுதிய மடல் திருவிதாங்கூரில், கிறிஸ்தவ நம்பிக்கை விரிவடைந்து செல்வது பெரிய அச்சத்தை ஏற்படுத்துகிறது. இதைத் தடை செய்யவே ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் செய்கிறேன்"[77] என மடல் எழுதினார். கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட வேதமாணிக்கம் என்பவர் ஆங்கில அருள்பணியர் இங்கு வந்து பணிபுரிய காரணமாய் இருந்தவர்[78] என்றும், ஆங்கில அருள்பணியரால் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட இவர் ஆங்கிலேய ராணுவத்தில் ஒற்றராகப் பணியாற்றுகிறார்.[79] என்றும் குற்றம் சாட்டினர். எனவே கிறிஸ்தவர்களுக்குப் பகையாக இருந்த நாயர்கள் இவருக்கு எதிராக அரசுக்கு அனுப்பிய அறிக்கையின் மூலம் அரசு வேதமாணிக்கத்தையும், அவர் குடும்பத்தையும் அழிக்க ஆணை பிறப்பித்தது.

திவான் பதவி ஆங்கிலேயருக்கு மாற்றம் : திருவிதாங்கூர் அரச அமைப்பில் அரசரே தலைவர் என்றாலும், அரசருக்குத் துணையாக இருந்து மக்களுக்குப் பணியாற்றுவதில் தளவாய் அல்லது திவான் என அழைக்கப்பட்ட தலைமை அமைச்சர்களே முக்கிய பங்கை வகித்தனர். திறமையின் அடிப்படையில் மண்ணின் மைந்தர்கள் இந்தப் பொறுப்பை வகித்தனர். ஆனால் ஆங்கிலப் பிரதிநிதியான கர்னல் மன்றோ, திவான் பொறுப்பையும் இளவரசி கௌரி லெக்ஷிமிபாய் (Gouree Lekshmi Bhye) ஆலோசனையின் படி ஏற்றார்.[80] நிர்வாகத்தில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. பாரம்பரியமாய் பொறுப்புகளில் இருந்து வந்த மண்ணின் மைந்தர்களின் தலைமைத்துவப் பொறுப்புகள் பறிக்கப்பட்டன.

இதுவரைக்கும் இப்பணியி-ருந்த திவான்களும், இப்பணிக்காகக் காத்திருந்த தலைவர்களும் ஏனைய அரசு அதிகாரிகளும் இந்நிலையை வெறுத்தனர். இது கிறிஸ்தவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது.

பொருளாதாரம் சார்ந்த காரணங்கள்

திருவிதாங்கூர், இயற்கை வளங்கள் நிறைந்த செழுமையான பகுதியாகும். வருவாய் ஈட்டுகின்ற பல மூலாதாரங்கள் இங்கு இருந்ததால் உலக நாடுகள் இங்குள்ள இயற்கை வளங்களால் கவரப்பட்டு வாணிபத்தளங்களை அமைத்தனர். அன்னிய செலவாணி பெருகியது. ஆனால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் வேட்கை திருவிதாங்கூர் அரசின் பொருளாதாரத்தைச் சீர்குலைய செய்தது. இதனால் திருவிதாங்கூரின் நிர்வாகத்திலும், அரசிய-லும், மக்களின் சமுதாய வாழ்விலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய பொருளாதார இழப்புக்கள் கிறிஸ்தவத் துன்புறுத்தலுக்குக் காரணமாயிற்று.

நாயர்களின் பணி இழப்பு : அதிகாரத்திலும், ஆட்சியிலும், போர்ப்படையிலும், அதிக செல்வாக்குப் பெற்றிருந்த நாயர் சமூகம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி திருவிதாங்கூரில் காலடி எடுத்து வைத்த நாள் முதல் தம் ஆற்றலை இழந்து[81] 1805-ஆம் ஆண்டு உடன்படிக்கை இரண்டாம் பிரிவின்படி படைகளைப் பராமரிக்கும் பொறுப்பு அரசரிடமிருந்து அரசுக்கு மாற்றப்பட்டது.[82] ஆங்கிலப் போர் வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். இதுவரைக்கும் பாதுகாப்பு, பணியில் ஈடுபட்டு வந்த நாயர் சமூக வீரர்களின் வீரம் கொச்சைப்படுத்தப்பட்டது. இதனால் வேலைவாய்ப்பற்ற நிலை ஏற்பட்டது. பொருளாதாரப் பற்றாகுறை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைக்குக் காரணமான ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மீதும், ஆங்கிலப் பிரதிநிதிகள் மீதும், கிறிஸ்தவர்கள் மீதும் நாயர்கள் தம் வெறுப்பை வெளிப்படுத்தினர்.

பொருளாதாரப் பற்றாக்குறை : 1805-ஆம் ஆண்டு உடன்படிக்கையின், இரண்டாம், நான்காம், பிரிவுகளின் படி

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி விதித்த கப்பத்தொகையைக் கட்டுவதோடு மட்டுமல்லாது, ஆங்கில இராணுவத்துக்குரிய செலவினங்கள் அனைத்தையும் திருவிதாங்கூர் அரசு ஏற்க வேண்டும்.[83] கப்பத்தொகை கட்டமுடியாத நிலையில் உள்ள திருவிதாங்கூர் அரசை மேலும் செலவினங்களைப் பெருக்கி பொருளாதாரத்தை முழுமையாய் சுரண்டிய ஆங்கில அரசை மக்கள் வெறுத்தனர். இந்நிலையில் அரசுக்கு அதிக வருவாய் ஏற்படுத்தும் வரிகளை கர்னல் மன்றோ நீக்கம் செய்தார். குறிப்பாக நாடார், ஈழவர், இனமக்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி, மீனவர் மீது விதிக்கப்பட்ட வலைவரி, கிறிஸ்தவப் பண்டிகைகள் (Taxes on Christian Festivals) மீது விதிக்கப்பட்ட வரிகளாகும்.[84] இவை அரசுக்கு அதிக வருவாய் இழப்பை ஏற்படுத்தின. இந்நிலையைப் புலவர் கு.பச்சைமால் தம் நூ-ல், "பிரிஸ்டிஸ்காரர்கள் நாட்டுச் சீர்திருத்தம் என்று கூறி பல மாற்றங்களைக் கொண்டு வந்தனர். பல வரிகளைத் தள்ளுபடி செய்தனர். இவ்வளவு வரியும் பிரித்தே கப்பம் கட்ட முடியவில்லை. வரியைத் தள்ளுபடி செய்தால் கப்பம் கட்டுவது எப்படி?"[85] என்று குறிப்பிடுகிறார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இத்தகைய பொருளாதாரச் சுரண்டல்களின் மூலம் ஏற்பட்ட பற்றாக்குறை ஆங்கிலேய அரசின் நிழ-ல் வளர்ந்த கிறிஸ்தவர்களைத் துன்பத்திற்குள்ளாக்கியது.

அரசு ஊழியர்களின் ஊதிய பற்றாக்குறை : திருவிதாங்கூர் அரசின் நிர்வாகத்தில் ஏற்பட்டச் சீர்கேடுகளின் மூலம் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் அரசு அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்தினைச் சீராகக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஊதியப் பற்றாக்குறை குறித்து அரசு அதிகாரிகள் ஆங்கிலப் பிரதிநிதியிடமும், திவானிடமும் முறையிட்டனர். இதற்கு எந்தத்தீர்வும் ஏற்படவில்லை. ஆனால் ஆங்கில அதிகாரத்தின் கீழ் நடைபெற்ற கிறிஸ்தவ அருள்பணி பொருளாதாரத் தடையில்லாது சீராய் நடைபெற்றன.[86] ஊதியம் தர இயலாத நிலையில் கூட கிறிஸ்தவ அருள் தொண்டின் வளர்ச்சியில் அதிக அக்கரை கொண்ட ஆங்கிலப் பிரதிநிதியையும், கிறிஸ்தவர்களையும் அரசு அதிகாரிகள் வெறுத்தனர்.

ஆங்கிலேய அதிகாரிகளின் அதிகரிப்பு : ஆங்கிலேயப் பிரதிநிதி ஜெனரல் கல்லன் பணியாற்றிய காலத்தில் நிர்வாகம் அதிகமாகச் சீர்கெட்டது. அரசு, வருவாய் துறையில் அதிக கவனம் செலுத்தாத காரணத்தால் நாட்டில் வறுமை, துன்பம், ஏற்பட்டன. உள்நாட்டில் உற்பத்தியான பொருள்களின் விலை குறைந்தன. குறிப்பாகப் பாக்கு வாணிபம் சரிந்தது. அரசு அதிகாரிகள் ஏழை மக்களைத் துன்புறுத்தி கையூட்டுப் பெற்று வாழ்க்கை நடத்தினர். அரசு அதிகாரிகளே கடத்தல் தொழிலை ஊக்கப்படுத்தினர். இதனால் பொருளாதாரம் சீர்கெட்டது.[87] இந்நிலையில் அருள்பணியரின் ஆலோசனையின்படி அதிகமாக ஐரோப்பியர்களும், கிழக்கிந்தியக் கம்பெனியரும் திருவிதாங்கூர் அரசின் உயர்ந்த பொறுப்புகளில் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.[88] இந்நிலை உள்நாட்டில் வேலை வாய்ப்பு பற்றாக்குறையை ஏற்படுத்தியது. எனவே ஆங்கில அதிகாரிகளின் மீது வேலையை இழந்த இந்து சமய அதிகாரிகளுக்கு வெறுப்புணர்வு ஏற்பட்டது. ஆங்கில அதிகாரிகளைப் பணியமர்த்த காரணமாயிருந்த அருள்பணியர் மீது வெறுப்புற்றனர். அருள்பணியர் மீதும், ஆங்கில அரசின் மீதும், வெறுப்பு கொண்ட இவர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.

வருவாய் பற்றாக்குறை : திருவிதாங்கூர் நாடு இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியாகும். அதிக வருவாய் தரும் மூலப்பொருள்கள் இங்கு உள்ளன. எனினும் ஆங்கில அரசுக்குக் கப்பம் கட்ட வேண்டியிருப்பதாலும், கிறிஸ்தவத்தை ஏற்ற L.M.S. கிறிஸ்தவர்கள் வரிசெலுத்தாமல் இருப்பதாலும் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டது எனத் திருவிதாங்கூர் அரசு சென்னை அரசுக்குத் தெரிவித்தது.[89] ஆனால் கிறிஸ்தவ அருள்பணியர், வருவாய் பற்றாக்குறைக்குக் காரணம் யாது என்பதைச் சென்னை அரசுக்குத் தெளிவாகத் தெரிவித்தனர். "அதிக வருவாய் ஏற்படுத்தும் வருவாய் துறையின் நிர்வாகம் சீர்கெட்டு இருக்கின்றன. பதிவு அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் ஒழுங்காகப் பணிக்குச் செல்லாததால் பணித்தேக்கம் ஏற்பட்டது. நிலங்களும் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. இத்துறையில் பணியாற்றும் அதிகாரிகள் கையூட்டுப் பெற்று அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்துகின்றனர்.

எனவே ஆங்கில அரசு நல்ல அதிகாரிகளை நியமிக்க வேண்டும் அப்படி நியமித்தால் அதிக வருவாய் கிடைக்கும்"[90] என அருள்பணியர் சென்னையிலுள்ள ஆளுநருக்குக் (Governor in Council) கடிதம் எழுதினர். இவ்வாறு அதிகாரிகள் மீது குறை கூறிய அருள்பணியரை அரசு அதிகாரிகள் வெறுத்தனர்.

நாடார் கிறிஸ்தவர்களின் பொருளாதார உயர்வு : மேலை நாட்டுக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிய இந்தியக் கிறிஸ்தவர்களை அதிகமாக விரும்பினர். கிறிஸ்தவர்களாக மாறிய நாடார் இனத்தவர் கண்ணிமிக்கவர்களும், பொறுப்புள்ளவர்களும் என அருள்பணியர் சான்றிதழ் தந்ததால் கிறிஸ்தவ நாடார்கள் இலங்கை நாட்டிலுள்ள தேயிலை தோட்டங்களில் பணியமர்த்தப்பட்டனர். இப்பணியின் மூலம் இவர்கள் செல்வந்தர்களாக மாறினர். இவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதினால் மாதம் ரூபாய் 50 முதல் 70 வரை ஊதியம் பெற்று தேயிலை தோட்டத்தின் கண்காணிப்பாளர்களாக உயர்வு பெற்றனர். அருள்பணியரின் உதவியோடு நாடார் இனக் கிறிஸ்தவர்கள் கருப்புக்கட்டி (Janggeri) புளி (Tamarind) பருத்தி (Cotton) முத-ய வாணிபத்தில் ஈடுபட்டதால்[91] பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்தனர். பொருளாதாரத்தில் உயர்வடைந்த நாடார்கள் தங்களை விட மேன்மையடைந்து விடுவார்களோ என்ற அச்சத்தாலும், தங்களை விட மேன்மையடைந்து விடக்கூடாது பொறாமையினாலும், நாடார் கிறிஸ்தவர்களின் மீது தங்கள் வெறுப்பை வெளிப்படுத்தும் வகையில் கிறிஸ்தவர்களை துன்புறுத்தினர்.

பண்பாடு சார்ந்த காரணங்கள்

பண்பாடு என்பது அறிவு, கலை, நம்பிக்கை, ஒழுக்க நெறிகள், சட்டம், பழக்கவழக்கம் முத-யவைகளையும், சமுதாயத்தில் இருந்து கற்கும் பிற திறமைகளையும் அனுபவங்களையும் உள்ளடக்கிய தொகுதி[92] என மானிடவியல் அறிஞர் தைலர் (Tylor) கூறுகிறார். மானிடர் வாழும் தங்கள் சூழலுக்கேற்ப தங்களுக்கு தாங்களே உருவாக்கிக் கொள்ளும் சில பழக்கவழக்கங்கள் அப்பகுதியில்

வாழும் ஆற்றல் பெற்றவர்களால் பண்பாடாக உறுதிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பண்பாடுகள் பல மானுடநேயம் அற்ற நிலையிலுள்ளன. திருவிதாங்கூர் வரலாற்றிலும் அதிகார வர்க்கத்தினரால் பண்பாடாக உறுதிப்படுத்தப்பட்ட பல பண்புகள் கிறிஸ்தவ அருள்பணியரின் பணியினால் மாற்றம் பெற்றன. இம்மாற்றங்கள் கிறிஸ்தவர்களின் துன்புறுத்தலுக்குக் காரணமாயிற்று.

ஒழுக்க நெறியில் மாற்றம் : திருவிதாங்கூர் நாட்டில் நாடார் இனத்தவர் மிகவும் ஒடுக்கப்பட்ட இனத்தவராகவே வாழ்ந்தனர். ஆண்களும், பெண்களும் இடுப்புக்கு மேல் ஆடை அணியக்கூடாது என்ற எழுதப்படாத சட்டம் இருந்தது. கொத்தடிமைகளாகப் பணியாற்றியதால் இவர்களது பழக்கவழக்கங்களில், ஒழுக்க நெறியில் உறுதியாக நிற்க முடியாது தவித்தனர். குழுகுழுவாகக் கிறிஸ்தவத்தை ஏற்ற மக்கள் அருள்பணியரின் அறநெறிப் போதனையினால் மாற்றம் பெற்றனர்.[93] சிந்திக்கும் ஆற்றல் வளர்சியடைந்ததால், தங்களின் வேதனையான அடிமைத்தன இருப்பு நிலையி-ருந்து விடுதலைப் பெற நீதிக்காய் குரல் கொடுத்தனர். கூ-இல்லாது பணியாற்ற மறுப்புத் தெரிவித்தனர்.[94] இவர்கள் "சாந்தமுள்ளவர்கள், அமைதியானவர்கள், சிறந்த வாழ்க்கை நெறிகளைக் கடைபிடிப்பவர்கள், கடின உழைப்பால் வாழ்வில் வளர எண்ணம் கொண்டவர்கள், இவர்கள் மூலம் நாடு வளம்பெறும்"[95] என நாடார் கிறிஸ்தவர்களைக் குறித்த நல்லெண்ணத்தை Baylis என்னும் அருள்பணியர் ஆங்கிலப் பிரநிதியிடம் தெரிவித்தார். இத்தகைய நிலையினால் உயர்சாதி இந்துக்களும், அதிகாரிகளும் தங்கள் வாழ்வின் தரம் சமூகத்தில் தாழ்ந்து விட்டதற்குக் காரணம் கீழ்ச்சாதியினரின் வளர்ச்சி என்ற குற்ற உணர்வினால் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.

தோள் சீலை அணிதல் : கிறிஸ்தவப் பெண்கள் "குப்பாயம்" என்ற ஆடை அணிவதற்கு அருள்பணியர் மனைவியர் கற்றுக் கொடுத்தனர். குப்பாயத்திற்கு மேல் அணியும் ஆடை "தோள்சீலை"

என்று அழைக்கப்பட்டது. இந்த மேலாடையினை அரசு அனுமதி இல்லாமலேயே கிறிஸ்தவப் பெண்கள் அணிந்தனர். இம்மேலாடை உயர்சாதிப் பெண்கள் அணியும் ஆடையைப் போன்று இருந்ததால் உயர்சாதிப் பெண்கள் தங்கள் உரிமையில் கிறிஸ்தவப் பெண்கள் தலையிடுவதாகவும் மேலாடை அணிவதற்குரிய உரிமை இவர்களுக்கு இல்லை[96] என்றும் கூறி கிறிஸ்தவப் பெண்களைத் துன்புறுத்தினர். இந்நிலையில் 1829-ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் இளவரசி பார்வதிபாய் வெளியிட்ட அரசு ஆணையில் "புதிதாகச் சமயம் மாறிய கிறிஸ்தவர்கள் பாரம்பரியங்களை மீறக்கூடாது. குறிப்பாக, கிறிஸ்தவப் பெண்கள் மார்பில் துணி அணிதல் கூடாது என்றும், உயர்சாதி இந்துக்கள் பின்பற்றும் பழக்கவழக்கங்களைக் கிறிஸ்தவர்கள் பின்பற்றக்கூடாது என்றும் இந்து சமய மக்களின் உணர்வுகளைக் கிறிஸ்தவர்கள் மதிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்." [97] புதிய மாற்றத்திற்கு நேராய் அடியெடுத்து வைக்கப் பயிற்றுவிக்கப்பட்டக் கிறிஸ்தவர்கள் இந்த ஆணையைச் சற்றும் மதிக்காது அருள்பணியரின் ஆலோசனைப்படி புதுமைகளைச் செய்தனர். [98] கிறிஸ்தவத்தை ஏற்ற நாடார் பெண்கள் மேலாடை அணிவதைப் பார்த்த இந்து நாடார் பெண்களும், கிறிஸ்தவ நாடார் பெண்களைப் போன்று மேலாடை அணிந்தனர். மேலாடை அணியும் உரிமையைப் பெற விரும்பிய இந்து நாடார் பெண்களுக்கு, கிறிஸ்தவ நாடார் பெண்கள் ஆதரவு அளிக்கின்றனர்[99] எனக்கு கருதிய நாயர்கள் அதிக வெறியுடன் கிறிஸ்தவர்களைத் தாக்க ஆரம்பித்தனர்.

கிறிஸ்தவர்களின் ஒற்றுமையுணர்வு : வடக்கன்கரை கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்றனர். இங்குள்ள பல பெண்கள் சந்தைக்குச் சென்று பொருள்கள் வாங்கும் வழக்கமுடையவர்கள். இவர்கள் செல்லும் வழியில் பா-யல் பலாத்காரம், மற்றும் தொந்தரவுகள் ஏற்படாமல் தடுக்கவும், மேலாடை அணியவும் கிறிஸ்தவ அருள்பணியரின் உதவியை நாடினர். அருள்பணியர் Baylis உதவியோடு அந்தக் கிராமத்திலுள்ள அனைத்து பெண்களும் மேலாடை அணிந்தனர்[100]. பாரம்பரியம் என்ற தீமையான பழக்கவழக்கங்களுக்கு எதிரான ஒட்டு மொத்த

செய்தது. "கிறிஸ்தவ நாடார் பெண்கள் மேலாடை அணிவது எங்கள் மன அமைதியைக் கெடுக்கிறது"[104] எனச் சூத்திரர் கிளர்ச்சி செய்தனர். ஆனால் கிறிஸ்தவம் தொடர்ந்து மேற்கத்திய கலாச்சாரத்தை இங்கு வெளிப்படுத்தியது. அருள்பணியரால் பயிற்சி பெற்ற திருவிதாங்கூர் பகுதி நற்செய்தியாளர்களும், பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களும், கிறிஸ்தவர்களும் நாகரீகமாக ஆடை அணிந்தனர். அருள்பணியர் மேற்கத்திய கல்வி, மருத்துவம் இவைகளை இங்கு புகுத்தி, திருவிதாங்கூர் பகுதியை நவீனமயமாக்கியதால் தங்களுடைய பாரம்பரியமிக்கத் தகவுகள் தகர்த்தப்பட்டதாக நினைத்தனர்.[105] புரியாத மொழியில் மந்திரம் ஓதி இறைவனை வழிபட்ட இந்து சமய வழிபாட்டிற்கு மாறாக தமிழ்மொழியில் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் கிறிஸ்தவ வழிபாடுகள் நடந்தன. மேற்கத்திய பாடல்கள் இங்குப் பாடப்பட்டன. தொழுகை முறையில் மாற்றங்கள் எழும்பின. ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டது. அடிமைப்படுத்தபட்டிருந்த பெண்கள் கல்வியறிவைப் பெற்றனர். இத்தகைய நாகரீக வளர்ச்சி பாரம்பரிய இந்துக்களைப் பாதித்தது. தாங்கள் தங்கள் மதிப்பையும் மரியாதையையும் இழந்து விட்டதாக நினைத்து இத்தகைய மாற்றங்களில் இணைத்து கொண்ட கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.

1. J.Philip Wogaman, "Persecution and Toleration", *A New Dictionary of Christian Ethics*, S.C.M. Press, London, 1986, p.464.
2. M.J. Costelloe, "Persecutions", *New Catholic Encyclopedia Vol. XI, Mc* Graw – Hill Book Company, New York. 1966, p. 146.
3. M. Searle Bates, "Persecutions and Toleration", *A Dictionary of Christian Ethics*, S.C.M. Press, London, 1967, p. 250.
4. John bowker, *The Oxford Dictionary of World Religions*, Oxford University Press, Oxford, 1997, p. 745.
5. M.J. Costelloe, *op. cit.*, p. 146.
6. M. Searle Bates, *op. cit.*, p. 250.
7. W.H.C. Frend, "Persecution", *The illustrated bible Dictionary part 3*, Inter – Varsity Press, England, 1988 P. 1193.
8. யோவான் 12 : 24.

9 William Robinson, op. cit., p. 93.

10 *Ibid., p. 94.*

11 C.M. Agur, op. cit., p. 776.

12 William Robinson, *op. cit., p.* 98.

13 A Letter to Col. Morrison, Resident, dated January 27th 1829 by Rev. C. Mault, ஜஸி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும், பின் இணைப்பு : 10.

14 Letter of L.M.S. Missionaries – Rev. Charles Mead and Rev. Charles Mault – to the British Resident regarding "Shanar Oppression", dated December 21, 1828, ஜஸி பீட்டர். டி. பீட்டர், சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும், பின் இணைப்பு : 5.

15 R.N. Yesudas, *British Policy in Travancore 1805 – 1859, p.35.*

16 R.N. Yesudas, "A people's Rovolt in Travancore, Kerala Historical Society, *Trivandrum*, 1975, p. 105.

17 R.N. Yesudas, British policy in Travancore 1805-1859, p. 23.

18 கார்த்திகைத் திருநாள் மகாராஜாவின் ஆட்சிகாலத்தில் நிர்வாக வசதிக்காக நாடு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் வ-யசர்வாதிகாரியக்காரர் என்ற ஒரு அதிகாரியின் மேற்பார்வையில் வைக்கப்பட்டது. இப்பிரிவுகள் மீண்டும் மாவட்டங்கள் என்ற நிலையில் பிரிக்கப்பட்டு இதற்கு காரியக்காரர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். D. Daniel, *struggle for Responsible Government in Travancore 1938-1947,* Madurai, 1985, p.5.

19 R.N. Yesudas, *Colonel John Munro in Travancore,* Kerala Historical Society, *Trivandrum, 1977,* p. 22.

20 A. Sreedhara Menon, op.cit., p. 285.

21 R.N. Yesudas, *Colonel John Munro in Travancore* p. 34.

22 Letter from Charles Mead, dated Neyyur, January 1842, *Missionary Magazine and Chronicle vol. vi,* (April 1842), p. 56.

23 R.N. Yesudas, A People's Revolt in Travancore, p. 100.

24 R.N. Yesudas, British Policy in Travancore, 1805-1859, p.2.

25 Ibid. p. 30.

26 Petition from the Chanoo and Cauvathy Christian inhabitants of Eraniel, Kulcoolum, Coolitorah Talooks in Travancore Sircar to

the Resident, (Undated Letter, ஜவி பீட்டர், டி. பீட்டர் சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும், பின் இணைப்பு : 3

27. Ibid., p. 202.

28. William Robinson, op. cit., p. 82.

29. R.N. Yesudas, op.cit., p. 23.

30. P. Shungoonny Menon, op.cit., p. 316.

31. R.N. Yesudas, *British Policy in Travancore 1805 – 1859,* p. 22.

32. J.W. Gladstone, "Christian Missionary Work And Socio Religious Movements in Kerala, 1850-1910", *op.cit., p,* 153.

33. The Report of the Directors to the 25th General meeting of the L.M.S, May 13, 819, London 1819, p. 53.

34. Samuel Mateer, op.cit., p. 276.

35. P. Shungoonny Menon, op cit., p. 477.

36. S.S. ஹெக்டர், திருச்சபை வரலாறு முதல்பகுதி, கன்னியாகுமரி C.S.I. பேராய வெளியீடு, நாகர்கோவில், 1988, p. 40.

37. R.N. Yesudas, British Policy in Travancore, 1805-1859, p.33.

38. Letter from W. Cullen to Thomas Pycroft, Chief Secretary to Government, dated 6th February 1859, ஜவி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும், தமிழர் விடுதலையும், பின் இணைப்பு : 14.

39. R.N. yesudas, *A people's Revolt in Travancore,* p. 100.

40. R.N. Yesudas, *British Policy in Travancore 1805* – 1859, p. 34.

41. R.N. Yesudas, *British Policy in Travancore 1805-1859,* P. 24.

42. Letter from Mr. Charles Mead, Missionary in South Travancore, dated Nagercoil, Oct. 26, 1818, *The Report of the Directors to the 25th General Meeting of the L.M.S.* on may 13, 1819, London, 1819, p. 121.

43. C.M. Agur, *op. cit.,* p. 59.

44. *Ibid., p.* 580.

45. Samuel Mateer, *The Land of Charity,* p., 276.

46. T.K. Velupillai, op.cit., p. 773.

47. சாமுவேல் சகரியா, op.cit., p. 118.

48. R.N. Yesudas, *A people's Revolt in Travancore, p. 85.*

49. Letter of Rev. C. Mead & C. Mault to the Resident regarding the distburances, dated December 21, 1829, ஐவி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும், தமிழர் விடுதலையும், பின் இணைப்பு : 12.
50. R.N. Yesudas, *British Policy in Travancore 1850-1859, p. 18.*
51. *Ibid., p. 19.*
52. *Ibid., p. 21.*
53. முத்துக்குட்டி சுவாமி, அகிலத்திரட்டு அம்மானை, சுவாமி தோப்பு 1989, p. 266.
54. 1808 ஆம் ஆண்டு நாகர்கோவி--ருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ள சாமித்தோப்பு என்ற கிராமத்தில் பிறந்தார். ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த நாடார் இனத்தவரின் விடுதலைக்காய் பாடுபட்ட இந்து சமயத்தலைவர்.
55. P. Shungoonny Menon, op cit., p. 304.
56. *Ibid.,* p. 311.
57. Samuel Meteer, *The Land of Charity,* p. 262.
58. முத்துக்குட்டி சுவாமி, op. cit., p. 266.
59. Proclamation by Her highness the Ranee dated the 3rd February 1829, C.M. Agur, op.cit., Appendix : XVIII (12).
60. Letter from Charles Mead, dated Neyyur, January 1842 *Missionary Magazine and Chronicle vol. IV.* April 1842, p. 56.
61. V. Nagam Aiya, op.cit., p. 386.
62. *Ibid.,* p. 491.
63. *Ibid.,* p. 497.
64. P. Shungoonny Menon, *op.cit., p. 453.*
65. R.N. Yesudas, British Policy in Travancore 1805 – 1859, p. 36.
66. *Ibid., p. 38.*
67. *Ibid.*
68. J.W. Cladstone, "Christian Missionary work and socio regious movements in Kerala 1850 – 1910," op. cit., p. 155.
69. Proclamation by Her Highness the Ranee, dated the 3rd February 1829, C.M. Agur, op.cit, Appendix : XVIII (12).

70. Petition of the Missionaries to the Governor – in – Council, Fort St. George, 26 July, R.N. Yesudas, *British Policy in Travancore 1805-1859*, Appendix : IV.

71. R.N. Yesudas, *British Policy in Travancore* 1805-1859, p. 32.

72. Ibid.

73. Letter of L.M.S. Missionaries – Rev. Charles Mead and Rev. Charles Mault – to the British Resident regarding "Shanar Oppression", dated December 21, 1828, ஜூலி பீட்டர், டி. பீட்டர், சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும், பின் இணைப்பு : 5.

74. பா. சூரிய நாராயணன் "தேசியம்", வாழ்வியற்களஞ்சியம் தொகுதி பத்து, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988, P. 818.

75. Robin Jeffrey, op.cit., p. 11.

76. William Robinson, op.cit., p. 78.

77. R.N. Yesudas, *A people's Revolt in Travancore, p. 95.*

78. சாமுவேல் சகரியா Op. cit., p. 12.

79. William Robinson, op.cit., p. 98.

80. P. Shungoony Menon, op.cit., p. 364.

81. Robin Jeffery, *op. cit.,p.3.*

82. P. Shungoony menon, *op. cit.*, p. 313.

83. Ibid., p. 314.

84. V. Nagam Aiya, *op.cit., p. 463.*

85. கு. பச்சைமால், op. cit., p. 44.

86. R.N. Yesudas, *British Policy in Travancore 1805-1859*, p.25.

87. Ibid., p. 35.

88. T.K. Velupillai, *op cit., p. 499.*

89. Petition of the Missionaries to the Governor- in – Council, Fort St. George, 26 July 1855, R.N. Yesudas, *British Policy in Travancore 1805-1859*, Appendix: IV.

90. Ibid. p. 87.

91. Letter from Rev. F. Baylis to the Resident dated 17th January 1859, R.N. Yesudas, *A people's Revolt in Travancore, Appendix : XVII.*

92. Edward burnett Tylor, *Religion in Primitive Culture vol. I, Harper & Brothers Publishers, New York, 1958, p.1.*

93. *Letter of Rev. C. Mead & C. Mault to the Resident regarding the distburances, dated December 21.1829,* ஜவி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும் பின் இணைப்பு : 12.

94. C. Mead, "Persecution and Intolerance in Travancore", *The Evangelical Magazine and Missionary Chronicle, London, 1842, p. 200.*

95. Letter from Rev. F. Baylis to the Resident, dated 17th January 1859, R.N. Yesudas, *A People's Revolt in Travancore,* Appendix : XVII.

96. Samuel Mateer, *op. cit., p. 278.*

97. Proclamation by Her highness the Ranee dated the 3rd February 1829, C.M. Agur, op.cit., Appendix : XVIII (12).

98. R.N. Yesudas, British Policy in *Travasncore, 1805 – 1859, p. 25.*

99. Letter from Rev. John Cox to the Resident, dated 21st January 1859, R.N. Yesudas, *A people's Revolt in Travancore,* Appendix : XIX.

100. Letter from Rev. F. Baylis to the Resident, dated January 17, 1859, Ibid., Appendix : XVII.

101. Letter of the Travancore Government, dated 1st Karthigay 990 (1815), C.M. Agur, op cit., Appendix : XVIII (10).

102. Letter from W. Cullen to Thomas Pycroft, Chief Secretary to Government, dated 16th February 1859, R.N. Yesudas, *A People's Revolt in Travancore,* Appendix : XXXIII.

103. "Heathen Oppression Neyoor Mission", *The Missionary Magazine and Chronicle vol. XIV,* Oct. 1850, London, p. 187.

104. Letter from Rev. John Cox to the Resident, dated 21 January 1859, R.N. Yesudas, *A People's Revolt in Travancore, Appendi : XIX.*

105. Koji Kawashima, *Missionaries and a Hindu State, Travancore 1858 – 1936,* Oxford University Press, New Delhi, 1998, p. 219.

7

கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பங்கள்

திருவிதாங்கூர் கிறிஸ்தவர்கள் அனுபவித்தத் துன்பங்கள் பல ஆண்டுகளாய் ஒரு தொடர் நிகழ்வாகவே இருந்து வந்தது. தன்னம்பிக்கை இழந்து வெற்றிகளை விடத் தோல்விகளையே மிகுதியாக எதிர்கொண்டு வாழ்ந்த திருவிதாங்கூர் கிறிஸ்தவர்களின் துயரத்தை தேவவரம் தேசிகர்[1] பாடல் வழியாக வெளிப்படுத்துகிறார்.

"தலைவரேகமாய்க் கூட்டங் கூடினார் –
அவர் ஜனங்கள் யாவரும்
சபையை யுலைக்க வகையைத் தேடினார்;
மலைவினால் கிறிஸ்தோர் மறைந்தோடவே –
அவர் ஜனத்தையடித்து
மனையை வளைந்து கொள்ளையாடினார்,

கொலை செய்தோரெனச் சிலரைப் பிடித்து
கொண்டுபோய் மிகு தண்டனைகள் பண்ணி
மெ-வு செய்தனியாயமாய்க் கொன்றிட
மிகவும் பொய்ச்சாட்சிகள் அதிகம் சம்பாதித்தார்

ஏனையா எங்கள் துன்பங்கள் தீருதற்
கிரங்கத் தாமசம்? இரங்கு மிரங்கும்"[2]

என்ற துயரத்தின் அழுகுரல்கள் திருவிதாங்கூர் முழுவதும் எழும்பின.

றிங்கல்தௌபே, கர்னல் மன்றோவிற்கு எழுதிய மட-ல் "ஏழை மக்களை இரக்கமின்றி கொடுமைப்படுத்தும் துயர நிகழ்ச்சிகள் இங்கு நடக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை"[3] எனக் கூறும் அளவுக்கு திருவிதாங்கூர் கிறிஸ்தவர் துன்பத்தை அனுபவித்தனர். "சென்னை அதிநயம்" பத்திரிக்கையில் "ஏழை மக்களை கொடுமைப்படுத்தும் திருவிதாங்கூர் பேரரசைப் போன்று மிக மோசமான சீர்கேடான அரசு உலகில் வேறு எங்குமில்லை"[4] என்று எழுதப்பட்ட செய்தியை ஆர். என். ஏசுதாஸ் குறிப்பிடுகின்றார். அத்தகைய கொடூரமான நிகழ்வுகளை சந்தித்த திருவிதாங்கூர் கிறிஸ்தவர்கள் எழுப்பிய அழுகுரல்கள் ஒவ்வொரு காலக்கட்டத்தில் வெளிவந்தன. இந்தக் கொடுமைகளும் அவைகளின் வேதனைகளும் இங்கு கூறப்பட்டுள்ளது.

சமுதாய உறவி-ருந்து துரத்தப்படுதல் : கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட மகராசன் வேதமாணிக்கம் தம் சொந்த கிராமமாகிய மைலாடியில் அருள்பணியைத் தொடங்கினார். இந்து சமய நம்பிக்கைக்கு எதிராகச் செயல்படும் வேதமாணிக்கத்தை இவரது குடும்பத்தினரும் கிராமத்தினரும் பகைத்தனர். தகாத சொற்களினால் பழித்துரைத்தனர். அரசு அதிகாரிகளும் வேதமாணிக்கத்திற்கு எதிராக எழும்பினர். எப்படியாயினும் வேதமாணிக்கத்தை கொலை செய்துவிட வேண்டும் என அவரை பிடிக்க வந்தபோது மைலாடியி-ருந்து தப்பி மருந்துவாழ் மலைக்கு ஓடிச் சென்று அங்கு ஒளிந்து கொண்டு நற்செய்தி அறிவித்து வந்ததால் சமுதாயத்தி-ருந்து இவரை விலக்கி வைத்தனர். இத்தகைய துன்புறுத்தலால் தங்கள் நிலங்கள் அனைத்தையும் விற்று மைலாடி கிராமத்தை விட்டு குடிபெயர வேண்டும் என்று எண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்[5].

கிறிஸ்தவத்தை ஏற்கும் உயர்சாதி இந்துக்கள் தங்கள் சமயத்திற்கும் சாதிக்கும் களங்கம் ஏற்படுத்துகிறவர்கள் என்றும், "சமயப்புரட்டர்கள்" என்றும் சொல்- உயர்சாதி இந்துக்கள் பழித்துரைத்தனர். எனவே சமய, சாதிய உறவுகளி-ருந்து ஒதுக்கி வைத்தது மட்டுமல்லாது பெற்றோராலும் உறவினராலும்

வெறுக்கப்பட்டு வீட்டை விட்டுத் துரத்தப்பட்டனர். உயர்சாதியி-ருந்து கிறிஸ்தவத்தை ஏற்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக குடும்பப் பாரம்பரியச் சொத்துரிமையை இழந்து வறுமைக்குள் தள்ளப்பட்டனர். குடும்பத்தில் ஏற்படும் இன்ப துன்ப நிகழ்வுகளிலும் கூட கலந்து கொள்ள முடியாதவாறு ஒதுக்கித் தள்ளப்பட்டனர்[6].

பயமுறுத்தல் : கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாட்டுமனைக்கு சென்று வழிபாட்டில் கலந்து கொள்ளாதபடி இந்து சமயத்தவர் கிறிஸ்தவர்களைப் பயமுறுத்தினர். L.M.S. அருள்பணியரால் தொடங்கப்பட்ட பள்ளியில் பிள்ளைகள் சென்று பாடம் கற்பதை விரும்பாத இந்து சமயத்தவர் பிள்ளைகளின் புத்தகங்களைக் கிழித்து எறிந்து விட்டு, பிள்ளைகள் தொடர்ந்து பள்ளியில் பயிலக்கூடாதென்று மிரட்டினர்[7]. மேலும் வழிபாடுகள் நடத்தினால் அருள்பணியரைக் கொலை செய்துவிட்டு வழிபாட்டுமனைகளையும், பள்ளிகளையும், கிறிஸ்தவர்களின் இல்லங்களையும் எரித்து அழித்து விடுவோம் என அச்சுறுத்தினர்[8]. நெய்யூர் அருள்பணித்தளத்தை சேர்ந்த மண-க்கரை கிராமத்தில் 1849-ஆம் ஆண்டு கிறிஸ்தவத்தை ஏற்ற 14 குடும்பத்தினர் வழிபாட்டுமனையில் கூடியபோது எதிர்ப்பாளர்கள் இவர்களை கொலை செய்து விடுவோம் என பயமுறுத்தி வழிபாட்டுமனையி-ருந்து துரத்தியடித்தனர்[9].

1859-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் நாள் ஆரல்வாய்மொழியிலுள்ள, சுப்புப்பிள்ளை, மகராஜப்பிள்ளை, பிச்சாண்டிப்பிள்ளை, ஆண்டிப்பிள்ளை ஆகியோர் தலைமையில் 50 சூத்திரர்கள் கிறிஸ்தவ கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள வழிபாட்டுமனையின் முன் எல்லா கிறிஸ்தவப் பெண்களையும் கூடிவரச் செய்து அவர்கள் அணிந்திருந்த மேலாடையை கழற்றி எறிய கட்டாயப்படுத்தினர். மறுத்தவர்களை அடித்து துன்புறுத்தி அவர்கள் அணிந்திருந்த ஆடைகளைக் கிழித்தெறிந்தனர். வழிபாட்டுமனைத் திருப்பணியர் இந்த அச்சுறுத்தலுக்குப் பயந்து வேறு இடத்திற்குத் தப்பிச் சென்றார்[10].

1859-ஆம் ஆண்டு ஜனவரி 10-ஆம் நாள் அருமநல்லூரை (Aroomanallur) சேர்ந்த, அனந்தப்பிள்ளை, சிவராமக் கிருஷ்ணப்பிள்ளை, சாந்தப்பெருமாள்பிள்ளை ஆகியோர் தலைமையில் 50 சூத்திரர்கள் கொல்லந்துருத்தியிலுள்ள திருப்பணியரிடம் வந்து வழிபாட்டுமனையைத் திறக்கவோ, வழிபாட்டுமனையில் போதிக்கவோ கூடாது எனவும், இதற்குக் கீழ்படிந்தால் ஒவ்வொரு மாதமும் அரைக் கோட்டை நெல் கொடுப்பதாகவும் மிரட்டினர்[11]. 1859-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் தெரிசனங்கோப்பு சிவமடத்திலுள்ள 30 சூத்திரர்கள் கழுவன்திட்டை மற்றும் புளியடி கிராமத்திலுள்ள கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வழிபாட்டுமனையைத் திறக்கக் கூடாது எனவும் அடிமைப் பணி செய்யவேண்டும் எனவும் கட்டாயப்படுத்தினர். கிறிஸ்தவர்கள் சந்தைக்குச் செல்லும் பாதைகள் அடைக்கப்பட்டன[12]. வாழைத்தோட்டம் என்னுமிடத்திலுள்ள நெசவு வேலைச் செய்யும் கிறிஸ்தவர்கள், ஞாயிறு காலை வழிபாட்டில் கலந்து கொண்டபோது வழிபாட்டுமனையிலுள்ள அனைவரையும் வெளியேற்றிப் பெரியவர்களைச் சவுக்குக் கம்பால் அடித்துத் துரத்தி, இனி வழிபாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என அச்சுறுத்தினர்[13].

கண்ணனூரைச் சார்ந்த ஈஸ்வரப்பிள்ளை என்ற வருவாய்த்துறை ஆய்வாளரின் தலைமையில், கண்ணனூரைச் சேர்ந்த பிடாகைக்காரர்கள் கிறிஸ்தவர்களுக்கெதிரான சதித்திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைப்பாகச் செயல்பட்டனர். வழிபாட்டுமனைகளைத் தீக்கிரையாக்கிக் கிறிஸ்தவர்களைப் பிடித்துக் கட்டி அடித்து சிறையிலடைத்தனர். வழிபாட்டுமனைகளில் வழிபடச் செல்வோரை அடித்து விரட்டியடிக்க திட்டமிட்ட பிடாகைக்காரர்கள் அம்பு, வாள், வில், கைக்கோடாரி, கைத்துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் ஊர் ஊராகச் சுற்றியலைந்தனர்[14]. கல்குளம் தாலுகாவிலுள்ள ஆற்றூர் பகுதியில் நாயர் குடியிருப்புகள் அதிகமாக இருக்கின்றன. இவர்களினால் அப்பகுதியிலுள்ள நாடார் கிறிஸ்தவர்கள் அதிக துன்பத்தை அனுபவித்தனர். அப்பகுதியை சேர்ந்த கெய்சப்பிள்ளை, நீலகண்டப்பிள்ளை, மாதவன்பிள்ளை

ஆகியோரின் வன்முறைச் செயல்களால் கிறிஸ்தவ நாடார்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டது. வெள்ளைக்காரருடைய சமயமான கிறிஸ்தவத்தை தழுவிய அனைவரையும் ஒழித்துக்கட்டி விடுவதாக கெய்சப்பிள்ளை என்பவர் சபதம் செய்தார்[15].

இரவு நேரங்களில் தீவெட்டிகளையும், பயங்கர ஆயுதங்களையும் கையில் ஏந்திகொண்டு கிறிஸ்தவர்களுக்கும் அருள்பணியருக்கும் எதிராகக் கோஷம் எழுப்பி சாலைகளைச் சுற்றிவருவது நாயர் வன்முறைக் கும்ப-ன் வழக்கமாக இருந்தது. நாயர்கள் செல்லுமிடங்களிலெல்லாம் வழியில் காணப்பட்ட வழிபாட்டுமனைகள், பள்ளிகள், கிறிஸ்தவர்களின் வீடுகள் முத-யவற்றை நெருப்புக்கிரையாக்கி, தங்கள் கண்களில் கண்ட கிறிஸ்தவர்களையெல்லாம் அடித்து உதைத்து நொறுக்கினர்[16]. விளவங்கோடு பகுதியில் கிறிஸ்தவர்கள் வழிபாட்டிற்குச் செல்வதையும், வழிபாட்டுத்தலங்களில் திருமறையைப் போதிப்பதையும் நாயர்கள் தடைசெய்தனர். காஞ்சிரக்கோடு வழிபாட்டுமனையைச் சார்ந்த பாக்கியநாதன் என்பவரை வழிபாட்டுமனையில் திருமறையை போதிக்கக்கூடாது எனத்தடுத்தனர். மீறி போதித்தால் போதித்தவர்களின் வீடும், வழிபாட்டுமனையும் தீக்கிரையாக்கப்படும் என்று பயமுறுத்தினர்[17]. இப்படிப்பட்ட பயமுறுத்தல்கள் பொதுவாக கிறிஸ்தவர்கள் வாழ்ந்த எல்லாப் பகுதிகளிலும் இருந்தன.

கொலை முயற்சியும் கொலை செய்தலும் : 1809-ஆம் ஆண்டு நடந்த திருவிதாங்கூர் போரில் வேதமாணிக்கம் ஆங்கில அரசின் ஒற்றனாகச் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டியதால் இவரை திருவிதாங்கூர் அரசு கொலை செய்ய ஆணை பிறப்பித்தது. வேதமாணிக்கமும் அவரைச் சார்ந்த கிறிஸ்தவர்களும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள பல நாள்கள் மைலாடியின் அருகில் உள்ள மருந்துவாழ்மலையில் ஒளிந்து வாழ்ந்தனர்[18].

சார்லஸ் மீட் என்னும் அருள்பணியரை கொலை செய்ய நடந்த சதியே நாயர்களின் வன்முறை செயல்களுக்கெல்லாம் உச்சக்கட்டமாக இருந்தது. 1829-ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் நாள்

[illegible]

[illegible]

[illegible]

1859 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் நாள் [illegible] 200 குதிரைகள் [illegible] கிராமத்திற்குச் சென்று, அப்பகுதியிலுள்ள [illegible] பள்ளியையும் தீக்கிரையாக்கி [illegible] திருப்பணியாளரையும், ஆசிரியர்களையும் கொலை செய்ய முயன்றனர். இச்செய்தியைக் கேள்வியுற்று [illegible], ஆசிரியர்களும் எதிரிகளின் கைகளில் சிக்காமல் [illegible] இருந்ததால், பல வாரங்கள் [illegible] கிறிஸ்தவர்கள் அனைவரும் [illegible]

[illegible] கிராமத்திலுள்ள இந்து சமயத்தவர்கள் [illegible] கைது செய்து சிறையில் [illegible]. இன்னல்களின் கொடுமை தாங்க இயலாமல் அவர் [illegible]

கல்குளம் தாலுகாவிலுள்ள வியன்னூர் கிராமத்தில் அமைந்த கண்ணனூர் தச்சன்விளையில், காலபெருமாள் என்ற வேதமாணிக்கத்தின் மனைவி சகுந்தலாதேவி என்ற ஏசுவடியாள் இரண்டாம் மேலாடை கலகத்தை முன்னின்று நடத்திக் கொண்டிருந்தார். இவர் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட திருவிதாங்கூர் அரசினர் இருமுறை கண்ணனூர் வழிபாட்டுமனை முன் துப்பாக்கியால் சுட்டனர். அதில் அப்பெண்மணி மரிக்கவில்லை. பின்னர் அப்பெண்மணியை வலுக்கட்டாயமாகக் கட்டி மருதூர்குறிச்சி என்னுமிடத்திற்கு கொண்டு வந்து நிர்வாணமாக்கி பலாமரத்தின் கிளையில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டனர். அவமானம் தாங்காத அப்பெண்மணி தனது அகோர நிலையினை நினைத்துப் பார்த்து நொடிப்பொழுதில் உயிரை விட்டார்[24].

சார்லஸ் மீட் தம் திருப்பணியின் இறுதிக் காலத்தில் எழுதிய மட-ல், கிறிஸ்தவர்களை "உயர்சாதி இந்துக்கள் உள்ளூர் சட்டங்களைப் பயன்படுத்தி மிருகத்தைப்போல நடத்தி கொலை செய்தார்கள்"[25] என்று குறிப்பிடுகிறார்.

குற்றஞ்சாட்டலும் வழக்குத் தொடுத்தலும் : கிறிஸ்தவர்கள் கிளர்ச்சி செய்கின்றவர் என்றும், கிராம அமைப்புகளுக்கும், சட்டங்களுக்கும் கட்டுப்படாமல் புரட்சி செய்கின்றவர் என்றும், அரசு அதிகாரிகள் குற்றம்சாட்டி கிறிஸ்தவ ஆண்கள் மீது வழக்குப் பதிவு செய்து சிறையிலடைத்தனர். மேக்கோட்டு ராமன்தம்பி நெய்யூரில் அருள்பணித்தளம் அமைப்பதற்குரிய நிலம் கொடுத்த காரணத்திற்காக அவர்மீது வழக்கு பதிவு செய்து அவரை ஏழு ஆண்டுகள் சிறையிலடைத்தனர்[26]. இந்து சமயத்தவர்கள் மூன்று பழைய வீடுகளை விலைக்கு வாங்கி அவர்களே அந்த வீடுகளுக்கு தீயிட்டு கொழுத்தி, அப்பழியினை கிறிஸ்தவர் மேல் சுமத்தினர்[27].

மிடாலம் அதிகாரத்தைச் சேர்ந்த வேதமாடன், ஆறுமுகம் ஆகியோரது வீட்டுப் பெண்கள், மேலாடை அணிந்து சந்தைக்குச் சென்றதைக் கண்ட சங்கரப்பிள்ளை இப்பெண்களை மிரட்டினார். அப்பெண்கள் வீட்டுக்குச் சென்று துடைப்பத்தை எடுத்துக் கொண்டு

அடிக்க வந்ததாகவும், இவர்கள் மட்டுமின்றி அங்குள்ள ஆண்களும் கோடரி, தடி போன்ற ஆயுதங்களால் தாக்க வந்ததாகவும், இதைக் கண்ட சங்கரப்பிள்ளை பயந்து ஓடிவிட்டதாகவும் மிடாலம் அதிகாரத்தை சேர்ந்த நாட்டுத்திருப்பணியர் மீது வழக்குகள் பதிவு செய்து கொடுமைப்படுத்தினர். பூதத்தான் குட்டி என்னும் சான்றோனும், இவரது மனைவி இசக்கியும், உயர்சாதி நிலப்பிரபுவான மாடம்பிள்ளை என்பவரின் நிலங்களில் உழவுத் தொழில் செய்து பிழைத்து வந்தனர். இவர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றதால் உழவுத் தொழிலை விட்டு நாட்டுத்திருப்பணியராய் வழிபாட்டுமனையில் பணியாற்றினார். சில நாள்களுக்குப் பிறகு தாம் முன்பு பணியாற்றிய மாடம்பிள்ளையின் வீட்டிற்கு நாகரீக உடை உடுத்திக் கொண்டு அவர்களோடு சமநிலையில் அமர்ந்து அருள்பணியின் மூலம் தாம் பெற்ற நன்மைகளைப் பகிர்ந்தார். கிறிஸ்தவத்தின் மூலம் தம் நிலைக்கு உயர்ந்த பூதத்தான் குட்டியையும், அவரது மனைவியையும், மாடம்பிள்ளை சித்திரவதை செய்து குற்றம் சுமத்தி வழக்குப்பதிவு செய்து துன்புறுத்தினார்.[30]

அகஸ்தீஸ்வரத்தை அடுத்த முகிலன்குடியி-ருந்த வேதமாணிக்கம் என்ற கிறிஸ்தவரோடு, மேலும் பத்துக் கிறிஸ்தவர்களையும் அரசு அலுவலர்கள் பிடித்துக் கடை வீதியில் இவர்கள் கொள்ளையடித்தார்கள் என்றும், உயர் குலப்பெண்களின் மேலாடைகளை கீறி அவமானப்படுத்தினார்கள் என்றும் குற்றம் சாட்டி, இவர்கள் கலகக்காரர்கள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் வழக்குப் பதிவு செய்தனர்.[31] 1854-ஆம் ஆண்டு கல்குளம் தாசில்தார் ஈத்தவிளை கிராமத்தை சேர்ந்த 30 கிறிஸ்தவர்கள் பக்கத்து வீடுகளில் வாழும் சூத்திரர்களின் வீடுகளில் திருடியதாகவும், கிராமக் காவலுக்கு செல்லவில்லை என்றும்[32] குற்றம் சுமத்திக் கிறிஸ்தவர்களை கைது செய்து சித்திரவதை செய்தார். புதிய ஆங்கிலப் பிரதிநிதிகள் திருவிதாங்கூரில் பணியமர்த்தப்படும் போது, இங்கு பணிபுரிந்த அதிகாரிகளான உயர் சாதி சூத்திரர்கள் நாடார் கிறிஸ்தவர்களைக் குறித்து இழிவாகச் சொல்-க் கொடுத்தனர். அதாவது, " இவர்கள் எதற்கும் அடங்காதக் குணமுடையவர்கள் என்றும், அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்தாதவர்கள் என்றும் பொது

ஊழியத்தை நிறைவேற்றாதப் பிடிவாதக் குணமுடையவர்கள் என்றும்" குற்றம் சாட்டினர். அரசு சார்ந்த பணியைச் செய்வதி-ருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக இவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினர்[33] என்று குறைகூறி ஆங்கிலப்பிரதிநிதிகளும் கிறிஸ்தவர்களை வெறுக்கத் தூண்டினர். காவல்துறை அதிகாரிகள், கிறிஸ்தவர் மீது பழி சுமத்திக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதைத் தங்கள் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர்.

சிறையிலடைத்தல்: 1822-ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொத்தனாவிளை வழிபாட்டுமனையின் தலைவர்களான நிதியுடையான், ஏசுவடியான் ஆகியோரையும், பலங்கேரி (Palankerry) வழிபாட்டுமனையின் தலைவரான யோவான் என்பவரையும் மரத்தில் கட்டி வைத்து அடித்து கள் விற்பவர்கள் மட்டுமே செலுத்த வேண்டிய கள் வரியை அவர்கள் மீது அளவுக்கதிகமாக விதித்து அவர்களைப் பல வாரங்கள் சிறையிலடைத்து துன்புறுத்தினர்.[34]

1855-ஆம் ஆண்டு பெப்ருவரி 19 ஆம் நாள் விசுவாசம் வேதநாயகம் என்ற உபதேசியாரும், அகஸ்தீஸ்வரம் கிராமத்திலுள்ள கிறிஸ்தவர்களும் அங்குள்ள பார்வத்திக்காரர், தாசில்தார் ஆகியோரின் தவறான செயல்பாடுகள் குறித்து ஆங்கிலப்பிரதிநிதியிடம் புகார் செய்ததால், அதிகாரிகள் அவர்களை கொடூரமாக துன்புறுத்திச் சிறையிலடைத்தனர். நீதிமன்றத்தி-ருந்து விடுதலைப்பத்திரம் வெளியிடப்பட்ட பிறகும் அவர்களை விடுதலை செய்யாமலும், உணவு கொடுக்காமலும் சிறையில் வைத்து துன்புறுத்தினர்.[35] 1858-ஆம் ஆண்டு மலையன்விளையை சார்ந்த குணமுடையான் என்பவர் கொடூரமான முறையில் துன்புறுத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.[36]

திட்டுவிளை பகுதியிலுள்ள கிறிஸ்தவர்கள் மீது பூதப்பாண்டியிலுள்ள வெள்ளாளர்களும், மறவர்களும் சேர்ந்து இரவு நேரத்தில் தாக்குதல் நடத்தினர். வீடுகளி-ருந்த பெண்களை வெளியே இழுத்து வந்து அடித்து துன்புறுத்தினர். அங்குள்ள பள்ளி

ஆசிரியரையும், 13 கிறிஸ்தவர்களையும் பிடித்து பூதப்பாண்டியில் உள்ள சத்திரத்தில் அடைத்து வைத்து துன்புறுத்தினர். இவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று நீதிமன்றத்தில் தகுந்த சாட்சியங்கள் கொண்டு வாதாடி நீதி பெற முடியாத அளவில் அவர்களைப் பல இடங்களுக்கு மாற்றம் செய்தனர்.[37] கிறிஸ்தவக் கைதிகளால் சிறைச்சாலைகள் நிரம்பியது.[38] சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டக் கிறிஸ்தவ கைதிகளை திவானுடைய ஆட்கள் சிறைசாலைக்குள்ளேயே அடித்து துன்புறுத்தினர்.[39] கிறிஸ்தவர்களாக மாறிய ஒரே காரணத்திற்காக, தவறு செய்யாத கிறிஸ்தவர்களையும் பிடித்துக் கொண்டு வந்து, காலவரையின்றி சிறையிலடைத்தும், விசாரணையின்றி தண்டனை கொடுத்தும் துன்புறுத்தினர். கிறிஸ்தவர்கள் சிறைவைக்கப்பட்ட இடம் அருள்பணியருக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காகப் பல இடங்களுக்குக் கைதிகளை மாற்றினர்.[40] கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் இயந்திரமாக காவல் துறை அதிகாரிகளை அரசு பயன்படுத்தியது.

1829-ஆம் ஆண்டு கிறிஸ்தவப் பெண்களின் ஆடை மாற்றத்தினால் ஏற்பட்ட கலவரங்கள் குறித்தும், இதனால் ஏற்பட்ட கிறிஸ்தவர்களின் துன்புறுத்தல் குறித்தும் விசாரிக்க திவான் வெங்கடராவ் (Venkatarow) பத்மநாபபுரம் கோட்டைக்குள் அமர்ந்திருந்தார். அங்குச் சென்று தங்களின் பாதிப்புகளைக் கூறச் சென்றக் கிறிஸ்தவ நாடார் பெண்கள் தங்கள் அணிந்திருந்த மேலாடைகளைக் கழற்றி விட்டுச் செல்லச் சூத்திர இராணுவ வீரர்கள் கட்டாயப்படுத்தினர். இவர்கள் தங்கள் மேலாடைகளை கழற்றிய பிறகே உள்ளேச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.[41] சமுதாயத்தில் கிறிஸ்தவர்களை வெட்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இவர்களை தெருக்களில் இழுத்துச் சென்று தீய வார்த்தைகளினால் காயப்படுத்தித் தலைகுனிய வைத்தனர்.[42] பள்ளி ஆசிரியர் தாங்கள் பெறும் ஊதியம் குறித்த தெளிவான கணக்கை ஒப்புவிக்கவும், எத்தகைய பாடத்திட்டங்களை பிள்ளைகளுக்கு பயிற்றுவிக்கிறார்கள் என்பது குறித்த விளக்கமளிக்கவும் கேட்டனர். ஆசிரியர் என்றும் பாராது, பிள்ளைகளின் முன்பாகவே ஆசிரியரை வெட்கப்படுத்தி

இழிவுபடுத்தினர்.[43] கிறிஸ்தவர்களை கைது செய்து சிறைச்சாலைக்கு கொண்டு செல்லும் போது கொலைக்குற்றம் செய்தவர்களை அழைத்துச் செல்வது போல கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றனர்[44].

கல்குளம் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களை அரசு அதிகாரிகள் கலகக்காரர்கள் என்றும், துரோகிகள் என்றும், காட்டிக் கொடுப்பவர்கள் என்றும் கூறி இழிவாய் நடத்தினர். கிறிஸ்தவர்களைப் பற்றி அரசு அதிகாரிகள் இழிவாகக் கூறிய குற்றச்சாட்டுகளால் கிறிஸ்தவர்கள் மீதும், இவர்கள் சார்ந்திருந்த L.M.S. கிறிஸ்தவத்தின் மீதும் தவறான கருத்தே தென்திருவிதாங்கூர் மக்களுக்குள் ஏற்பட்டது[45]. சிறையிலடைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் குடும்பங்கள் சமுதாயத்தில் இழிவான நிலையில் நடத்தப்பட்டனர். இவர்களின் நிலங்களை சூத்திரர்கள் பறித்துக்கொண்டனர். சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியாது, தங்களுக்குள்ளாகவே தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு வேதனையோடு வாழ்ந்தனர்[46]. காளிவிளை என்னுமிடத்தில் ஏசுவடியாள் என்ற கிறிஸ்தவப் பெண்ணை பாலமாடன்செட்டி, பண்டாரம், ஆண்டிப்பிள்ளை ஆகியோர் சந்தைக்கு சென்றபோது பிடித்து, அடித்து ஆடைகளைக் கிழித்து எறிந்தனர். விளவங்கோடு தாலுகாவைச் சார்ந்த விளாத்துறைச் சந்தையில், நீதியுடையாள் என்னும் கிறிஸ்தவப் பெண்ணின் ஆடைகளையும் கிழித்து மானபங்கம் செய்தனர்[47].

காஞ்சிரக்கோடு வழிபாட்டுமனையை சேர்ந்த சவேரியாள், ஞானப்பூ, அன்னா ஆகிய பெண்கள் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தபோது நட்டாலம் அதிகாரத்தின் பார்வத்தியக்காரனும், அவ்வூர்த்தலைவனும் சேர்ந்து மல்லன்பிள்ளை என்பவனை அனுப்பி இப்பெண்களை அடித்து மேலாடையைக் கழற்றினர். இதைக் கேள்வியுற்ற காஞ்சிரக்கோடு வழிபாட்டுமனை உதவியாளர், நடந்த நிகழ்ச்சிகளை பார்வத்தியக்காரரிடம் தெரிவித்த போது, இனிமேல் அந்த பெண்கள் தங்கள் மார்பை மறைத்து ஆடை அணிந்தால் அடித்து உதைப்போம் என்று மிரட்டி அனுப்பினர்[48]. நாயர்களின் இத்தகைய வன்முறைக்கு பயந்து காஞ்சிரக்கோடு

வழிபாட்டுமனையைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் கிராமத்தை கா- செய்து விட்டுச் சென்றனர்.

1859-ஆம் ஆண்டு ஜனவரி 7-ஆம் நாள் இரவியூர் மற்றும் மருங்கூர் பகுதி சூத்திரர்கள் 500 பேர் நல்லமாடன்பிள்ளை, சிதம்பரம்பிள்ளை ஆகியோர் தலைமையில் கம்பு, கட்டை, கத்தி இவைகளோடு குமாரபுரம் தோப்பூர் வந்து, அங்குள்ள நாட்டுத் திருப்பணியாளரின் மனைவியை பயமுறுத்தி வீட்டி-ருந்து வெளியேற்றினர். அக்கிராமத்திலுள்ள பெண்களை வீட்டிற்குள் இருந்து வெளியேற்றி அவர்களின் ஆடைகளைக் களைந்து பா-யல் பலாத்காரம் செய்தனர்[49].

கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காகவே திவான் வேலுத்தம்பி, குஞ்சிகுட்டிப்பிள்ளை என்ற சர்வாதிகாரியக்காரரை நியமித்தார். இவர் தலைமையிலான நாயர் வீரர்கள் கிறிஸ்தவர்களையும், திருச்சபைத் தலைவர்களையும் அடித்துக் காயப்படுத்தினர்[50].

1853-ஆம் ஆண்டு பிப்ரவரி முதலாம் நாள் அருள்திரு. மால்ட்டு மற்றும் அருள்திரு. லூயிஸ் ஆகியோர் அருள்திரு. ஜேம்ஸ் றெசல் என்பவரை நாகர்கோவி-ல் உள்ள அருள்பணித்தளத்தில் சந்தித்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பும் வழியில் சுசீந்திரம் கோயி-ன் சுற்றுப்புறத்தில் சமய ஊர்வலம் நடத்தும் பிராமணர் ஒருவரால் தாக்கப்பட்டார்கள்[51].

கிறிஸ்தவர்கள் அரண்மனையில் பணிசெய்யும்போது அவர்களுக்கு சிறிதும் ஓய்வு தராது தொடர்ந்து பணியாற்ற கட்டாயப்படுத்தினர். உடல் களைப்பினாலும், வியாதியினாலும் பணியாற்ற இயலாதபோது அவர்களை புளிய மரக்கம்பால் அடித்துக் காயப்படுத்தினர்[52].

1859-ஆம் ஆண்டு அருள்திரு. ஜேம்ஸ் ரசல், ஆங்கிலப் பிரதிநிதிக்கு எழுதிய மட-ல் "தாழக்குடி பகுதியிலுள்ள 200 வெள்ளாளர்களும், சூத்திரர்களும், வைத்திய-ங்கம்பிள்ளை, நீலன்பிள்ளை, தென்கரப்பிள்ளை, மாதவன்பிள்ளை, கனயம்பிள்ளை ஆகியோர் தலைமையில் கும்பலாக கத்தி, கம்பு முத-ய

ஆயுதங்களோடு கிறிஸ்தவர்கள் வாழும் இல்லத்தை உடைத்து அங்குள்ள பெண்களின் ஆடைகளைக் கிழித்து அவர்களைக் காலால் மிதித்து, அடித்து துன்புறுத்தினர். இதனால் தாழக்குடிப் பகுதி பாலைவனமாய்க் காட்சியளிக்கிறது”[53] என எழுதினார்.

பொருள்சேதம் விளைவித்தல் : கிறிஸ்தவர்களின் வீடுகளிலுள்ள பொருள்களைக் கொள்ளையடித்து வாழ்வின் ஆதாரங்களான விளைநிலங்கள், தோட்டங்கள் அனைத்தையும் சேதப்படுத்தினர்.[54] நாடார் இனத்தவர்கள் பனை மரத்தி-ருந்து கள் இறக்கும் பணியில் ஈடுபட்டனர். இப்பணியில் ஈடுபட்ட பல கிறிஸ்தவ நாடார்களிடமிருந்து அவர்கள் பணிக்குரிய ஆயுதங்கள், அரிவாள் ஆகியவற்றைப் பறித்து எடுத்தனர். இதன் மூலம் யாரும் மாற்று ஆயுதங்கள் வாங்க முடியாது திகைத்தனர்[55]. நெய்யூர் அருள்பணித்தளத்தின் கட்டிடப் பணிக்காக சேகரிக்கப்பட்ட பல பொருள்களை கொள்ளையடித்து சென்று வேலையை தடுத்து நிறுத்தினர்[56]. 1859-ஆம் ஆண்டு ஜனவரி ஒன்பதாம் நாள் தண்டமுத்துப்பிள்ளை, தாணுமாலையப் பெருமாள்பிள்ளை, சிதம்பரம்பிள்ளை, நாராயணப்பிள்ளை ஆகியோர் தலைமையில் 100 பேர் திட்டுவிளையின் அருகிலுள்ள செம்பொன்விளை கிராமத்திலுள்ள கிறிஸ்தவர் மீது தாக்குதல் நடத்தி நாட்டுத் திருப்பணியரின் வீட்டையும், அங்குள்ள கிறிஸ்தவர்களின் வீடுகளையும் உடைத்து, வீடுகளில் உள்ள பொருள்கள், பணம், தங்க ஆபரணங்கள் அனைத்தையும் அழித்து புத்தகங்களைக் கிழித்து எறிந்த பொருள் சேதம் விளைவித்தனர். இதே கும்பல் காட்டுப்புதூர் வழிபாட்டுமனையில் நுழைந்து அங்குள்ள புத்தகங்களைக் கிழித்து எறிந்து, வழிபாட்டுமனையைப் பூட்டி திறவுகோலை எடுத்துச் சென்றனர்[57]. ஜனவரி 14-ஆம் நாள் திட்டுவிளையிலும், ஆண்டித்தோப்பிலும் தாக்குதல் நடத்தி கிறிஸ்தவர்களின் வீட்டுக் கதவுகளை உடைத்து, வீட்டு கூரைகளைக் கீழேத்தள்ளி சேதப்படுத்தினர். மரப்பொருள்களையும், பெண்களின் தங்க அணிகலன்களையும் கொள்ளையடித்தனர்[58]. நாடார் கிறிஸ்தவர்களின் உடைமைகளான நெல், கருப்புக்கட்டி, துணிகள் ஆகியவ்றைச் சிதைத்து சேதப்படுத்தினர்.

பணிக்கு கட்டாயப்படுத்துதல் : ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டிற்குச் சென்ற கிறிஸ்தவ ஆண்களை அடித்து வேலை செய்யக் கட்டாயப்படுத்தினர். இதற்கு மறுப்புத் தெரிவித்தவர்களை யானையின் பின் கா-ல் கட்டிவைத்து துன்புறுத்தினர்[59]. குன்னங்காடு, அழகன்பாறை, மண்டவிளை போன்ற இடங்களிலுள்ள கிறிஸ்தவர்கள், மரங்களை வெட்டி அரண்மனைப் பணிக்குக் கொண்டு வரக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஐந்து நாள் தொடர்ந்து உணவு இல்லாமல் பணி செய்ய கட்டாயப்படுத்தப்பட்ட இவர்கள் பணிக்குரிய ஊதியம் கேட்டபோது தகாத வார்த்தைகளால் பழித்துரைத்து வெறுமையாய் அனுப்பப்பட்டனர்[60]. அரண்மனை அதிகாரிகள் கிறிஸ்தவர்களாக மாறிய விடுதலைப்பெற்ற அடிமைகளிடம், மீண்டும் தாங்களாகவே அரசுக்கு அடிமைகளாகிக் கொள்ளும் விதத்தில் பத்திரம் எழுதி அதில் கையொப்பமிட கட்டாயப்படுத்தினர்[61]. இதன் மூலம் அடிமை விடுதலை ஆணை அரசால் பிறப்பிக்கப்பட்ட பிறகும் கிறிஸ்தவர்கள் பலர் அடிமைகளாகப் பணியாற்ற வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டனர்.

1828-ஆம் ஆண்டு டிசம்பர் 21-ஆம் நாள் ஞாயிறு காலை நாயர் குல மக்கள் கண்ணனூர் வழிபாட்டுமனைமுன் கூடி கிறிஸ்தவர் வழிபாட்டில் கலந்து கொள்ளாமல் தடுத்து அரசின் ஊழிய வேலையை செய்யவும், பத்மநாபபுரம் கோட்டையினுள் கட்டியிருந்த யானைகளுக்கு உணவாக தென்னை ஓலைகளை தலையில் சுமந்து செல்லவும் கிறிஸ்தவர்களைக் கட்டாயப்படுத்தினர். ஊழியப் பணியி-ருந்து அரசு விலக்கு அளித்தது குறித்த அரசு ஆணையை எடுத்துக்கூறி கிறிஸ்தவர்கள் மறுத்தபோது அவர்களை எள்ளி நகையாடி அடித்து துன்புறுத்தினர்[62]. உயர்சாதி இந்து மக்கள் தரும் துன்பங்களுக்கு அஞ்சி பெண்களும், முதியோரும், சிறுவர்களும் அவ்விடம் விட்டு ஓடி ஒளித்தனர்.

இந்து கோயிலுக்குரிய தேர் செய்வதற்கு கிறிஸ்தவர்கள் மரங்களைக் கொண்டு வரும்படி நாயர்கள் கட்டாயப்படுத்தினர்.

ஆனால் கிறிஸ்தவர்கள் இது தங்கள் சமய நம்பிக்கைக்கு முரணானது எனக் கூறி மறுத்ததால் கிறிஸ்தவர்கள் வரி செலுத்த மறுப்புத் தெரிவித்து அரசுக்கு எதிராக கலகம் செய்கின்றனர் என்று குற்றம் சாட்டினர்[63]. ஞாயிற்றுக்கிழமைகளில் இந்து அறநிலைய நிறுவனங்களுக்கு வேலை செய்ய கிறிஸ்தவர்கள் இழுத்துச் செல்லப்பட்டனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ சமயத்தைத் துறக்கவும், நெற்றியில் திருநீறு பூசவும் கட்டாயப்படுத்தினர்[64]. சுசீந்திரத்திலுள்ள இந்து கோயில் தேர் இழுப்பதற்கு மறுப்புத் தெரிவித்த கிறிஸ்தவர்களை பத்மநாபபுரத்தில் கொண்டு சென்று அடித்து துன்புறுத்தினர்[65].

1842-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் நடந்த L.M.S. – இன் 48-வது பொதுக்குழுக் கூடுகையில் சார்லஸ்மீட் தம் அறிக்கையில் "சிலை வழிபாட்டாளர் கிறிஸ்தவர்களை வீடுகளில் இருந்து இழுத்துச் சென்று இந்துக் கோவி-ல் உள்ள சிலைகள் வைக்கப்பட்ட தேர்களை (Idolatrous cars) பழுது பார்க்க கட்டாயப்படுத்தினர். இதற்கு மறுப்புத் தெரிவித்த கிறிஸ்தவர்களை அடித்து துன்புறுத்தி ஓய்வு தராமல், இரவு பகல் பாராது இந்து ஆலயங்களிலேயே தங்க வைத்துத் தேர்களை பழுதுபார்க்கவும், ஆலயப் பணிக்குரிய மரங்களைச் சரிசெய்யவும் கட்டாயப்படுத்தினர்"[66] எனக் குறிப்பிடுகிறார்.

L.M.S. கிறிஸ்தவத்தைத் திருவிதாங்கூரி-ருந்து வேரோடு அழிப்பதற்காக ஆற்றூர், பு-ப்பனம், சிறுவாரக்கோணம் முத-ய இடங்களிலுள்ள வழிபாட்டுமனைகளையும், கிறிஸ்தவர்களின் வீடுகளையும் தீயிட்டு எரித்தனர்[67]. 1828-ஆம் ஆண்டு டிசம்பர் 29-ஆம் நாள் கேசவப்பிள்ளை, நீலகண்டபிள்ளை, மாதவப்பிள்ளை என்பவர்கள் இணைந்து ஆற்றூரில் உள்ள வழிபாட்டுத்தலத்தை எரித்துச் சாம்பலாக்கினர். இதன் மதிப்பு 500 பணம் ஆகும். இந்நிகழ்ச்சியை திவானுக்கும் தாசில்தாருக்கும் புகார் மூலம் தெரியப்படுத்திய பாக்கியநாதன் வேதமாணிக்கத்தின் வீட்டை 1829-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் நாள் இந்து சமய மக்கள் வந்து தீக்கொழுத்தி 16,000 பணம் இழப்பு ஏற்படுத்தினர்[69].

1858-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாள் கல்லங்குழி வழிபாட்டுமனையையும் மேக்கோடு வழிபாட்டுமனையையும் தீக்கிரையாக்கினர்[70]. அத்தகைய கலவரத்தால் அகஸ்தீஸ்வரம், தோவாளை தாலுகாக்களிலும் அதிக பாதிப்புகள் ஏற்பட்டன. 1858-ஆம் ஆண்டு டிசம்பர் 29 -ஆம் நாள் ஜேம்ஸ்டவுண் பகுதியிலுள்ள மூன்று கிறிஸ்தவ நாடார்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன[71]. 1859 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் நாள் அருள்திரு. சி.சி.லெய்த் (C.C. Leith) அவர்களால், 1854 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வடக்கன்கரை வழிபாட்டுமனையும், நாகர்கோவி-ல் இருந்த ஆங்கிலப் பிரதிநிதியின் பங்களாவும் தீக்கிரையாக்கப்பட்டன[72]. திட்டுவிளையில் நாடார் சமூகத்தைச் சார்ந்த கிறிஸ்தவரும் அவரது மனைவியும் தாக்கப்பட்டு அவரது வீடும் அவ்வீட்டினை அடுத்திருந்த 27 வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன[73]. கிறிஸ்தவத்தை உறுதியாய் பற்றிக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களின் பற்றுறுதியில் அசைவை ஏற்படுத்த வழிபாட்டுமனைகளையும், இல்லங்களையும் கிறிஸ்தவ சமய எதிர்ப்பாளர்கள் எரித்தனர். என்றாலும் அக்கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் உள்ள பற்றுறுதியில் உறுதியாய் நிலைத்திருந்தனர்.

துன்புறுத்த-னால் ஏற்பட்ட விளைவுகள்

தென்திருவிதாங்கூர் பகுதியில் சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் பல துன்பங்களை சந்தித்தனர். திருவிதாங்கூர் அரசாலும், உயர்சாதி இந்துக்களாலும் துன்பத்தைச் சந்தித்த அருள்பணியர் கிறிஸ்தவம் அழிந்துவிடும் என எண்ணினர். சார்லஸ் மீட், L.M.S. பொதுக்குழுக் கூடுகைக்கு எழுதிய பணி அறிக்கையில் "திருவிதாங்கூர் அரசு அருள்பணியின் வளர்ச்சியைத் தடைசெய்து எங்கள் முயற்சியைச் செயல் இழக்கச் செய்கின்றது. இங்குச் சிலை வணக்கமும், சாதியக் கட்டமைப்புகளும் உயர்நிலையில் வைக்கப்படுகின்றன. இந்நிலையின் வழியாக உயர்சாதி இந்துக்கள் மட்டுமே பயன் பெறுகின்றனர். L.M.S. கிறிஸ்தவர்களைத் துன்பத்தி-ருந்து விடுவிக்கும் முழுமுழுயற்சியை நாங்கள் எடுத்தாலும், முழு பலனைக்காண முடியவில்லை. எனவே திருவிதாங்கூர் L.M.S. கிறிஸ்தவம் செல்வாக்குப் பெற்ற சமயமாக மாறுவதற்குரிய வாய்ப்பு

இல்லை"[74] என எழுதினார். அருள்பணியர் F. பேஸ், 1859-ஆம் ஆண்டு ஆங்கிலப்பிரதிநிதி கல்லனுக்கு, "கிறிஸ்தவர்கள் உயர்சாதி இந்துக்களாலும், காவல்துறையினராலும் அனுபவிக்கும் துன்பத்தின் மூலமாக கிறிஸ்தவர்களின் வாழ்வு சிதைந்து விடும். கிறிஸ்தவமும் வளர்ச்சி குன்றி விடும்"[75] என்ற தம் மன வருத்தத்தை தெரிவித்தார்.

உயர்சாதியினரின் கொடுமைகள் அதிகரித்தபோது கிறிஸ்தவ சமயத்தின் ஆற்றலும் வளர்ந்து கொண்டே வந்தது. உயர்சாதி இந்துக்கள் எந்த அளவுக்கு அதிகமாய் கிறிஸ்தவத்தை பகைத்து அழிக்க செயல்பட்டனரோ, அதைவிட பன்மடங்கு வேகமாக கிறிஸ்தவம் தென்திருவிதாங்கூர் பகுதியில் தழைத்தோங்கத் தொடங்கியது. கிறிஸ்தவ மக்களைத் தாக்குவதின் மூலம் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திவிடலாம் என்று எண்ணிக் கொடிய செயல்களில் உயர்சாதி இந்துக்கள் ஈடுபட்டனர். ஆனால் இதன் விளைவு அவர்களின் எண்ணத்திற்கு நேர்மாறாக அமைந்தது.

இறை உறவில் இறுக்கம் : துன்ப காலத்தில் மகராசன் வேதமாணிக்கம் அடைந்த வேதனைகள் இறையுறவில் இறுக்கத்தையும், பற்றுறுதியில் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியது. தம்முடைய நிலங்களை விற்று மைலாடியி-ருந்து தப்பிவிட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டபோது, "தான் செய்ய வேண்டியதைத் தனக்குத் தெரிவிக்க வேண்டும் என ஊக்கமாய் இறைவேண்டல் செய்தார். அது முதல் கடவுள் அவருக்கு நல்யோசனை அளித்தார்"[76]. இத்தகைய இறையுறவைத் துன்பத்தின் வழியாய் வேதமாணிக்கம் பெற்றார். "நம் எதிராளிகளால் நாம் சந்திக்கும் துன்பங்கள் கடவுளின் அதிகாரத்திற்கு மேற்பட்டவை அல்ல. இவை எல்லாவற்றி-ருந்தும் கடவுள் நம்மை பாதுகாப்பார்"[77] என்ற பற்றுறுதியை இளம் கிறிஸ்தவர்களுக்கு அறிவித்தார்.

தேவசகாயம் என்ற கிறிஸ்தவர் கொலை செய்யப்பட்டபோது நீதி விசாரணை எதுவும் செய்யப்படாமலும், குற்றவாளிகள்

தண்டிக்கப்படாமலும் இருந்த அநீதியை வெளிப்படுத்த 1858-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் நாள் அருள்பணியர் ஜான் காக்ஸ் ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார். அதில் "துன்பப்படுகின்ற கிறிஸ்தவர், வேதனை மத்தியிலும் ஆற்றல் பெற வேண்டும். துன்புறும் மக்களை இறைவன் பாதுகாப்பார். இத்தகைய துன்பங்களின் மூலம் இறைவன் மக்களுக்கு நல்வாழ்வு தருவார். தீய செயல்கள் செய்கிறவர்கள் கடவுளால் தண்டிக்கப்படுவார்கள். மனித இரத்தத்தை பூமியிலே சிந்தச் செய்கிறவனுடைய இரத்தமும் மனிதராலே பூமியில் சிந்தப்படும் (Whoso sheddeth Man's blood by man shall his blood be shed)"[78] என்ற பற்றுறுதியை கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தி இறை உறவில் நிலைத்திருக்கக் கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தினர்.

அருள்பணியர் ஆப்ஸ் (Abbs) தம் அறிக்கையில், "கிறிஸ்தவர்களின் பற்றுறுதியும் இறை உறவும், துன்பம், வேதனை இவற்றால் பெலப்படுகின்றது. எத்தகைய கொடூரமான துயரங்கள் வந்தாலும், எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தினாலும், கிறிஸ்தவர்கள் எதற்கும் அஞ்சாது துன்பத்திலும் பற்றுறுதியில் நிலைத்திருப்பதை, திருவிதாங்கூர் கிறிஸ்தவர்களிடம் பார்த்தேன்"[79] என எழுதினார்.

கிறிஸ்தவத்தின் வளர்ச்சி : துன்புறுத்த-ன் மூலம் அருள்பணித் தளங்களில் சில தொய்வுகள் ஏற்பட்டாலும், தீவிர கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் எண்ணியதற்கு மாறாக அருள்பணியினால் பல நிகழ்வுகள் நடந்தன. நற்செய்திப் பணியினால் பல நற்பயன்கள் ஏற்பட்டதைக் கண்டு அருள்பணியர் மகிழ்ந்தனர். துன்பத்தின் மூலம் சிலர் கிறிஸ்தவத்தை மறுத-த்தாலும், பலர் கிறிஸ்தவத்தை ஏற்றனர். துன்புறுத்தல் அதிகம் உள்ள திருச்சபைகளில் வழிபாட்டிற்கு வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அதிக ஆவலுடன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ வினாவிடைகளைப் படித்தனர்[80]. நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மக்கள் தாங்கள் அறிந்த நற்செய்தியை மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து தீவிரமாய் செயல்பட்டனர்.

கிறிஸ்தவத்தின் வளர்ச்சி குறித்த புள்ளி விவரப் பட்டியல்

1) 01.03.1807-ஆம் ஆண்டு மைலாடியில் நாற்பது பேர் றிங்கல்தெளபே அவர்களால் திருமுழுக்குப் பெற்றார்கள்[81].

1815 ஆம் ஆண்டு புள்ளி விவரம்[82].

எண்.	சபைகள்	கிறிஸ்தவர்கள்	பள்ளிச் சிறுவர்கள்
1.	மைலாடி	204	32
2.	பிச்சைக்குடியிருப்பு	57	33
3.	தாமரைகுளம்	277	27
4.	புத்தளம்	152	28
5.	சீயோன்புரம் (ஆத்திக்காடு)	76	25
6.	கோயில்விளை	87	34
7.	ஈத்தாமொழி	166	9
	மொத்தம்	1019	188

1828 ஆம் ஆண்டு புள்ளி விவரம்[83]

விபரங்கள்	நாகர்கோவில் பகுதி	நெய்யூர் பகுதி
சபைகள்	14	12
உபதேசிமார்	17	16
கிறிஸ்தவர்கள்	1410	1441
திருமுழுக்குப் பெற்றவர்	440	95
பாடசாலை	36	21
மாணவர்கள்	1344	541

1851 ஆம் ஆண்டு புள்ளி விவரம்[84]

விவரங்கள்	நாகர்கோவில்	ஜேம்ஸ்டவுண்	சாந்தபுரம்	நெய்யூர்
நீடர்மார்	40		-	34
சபைகள்	-	25	-	42
கிறிஸ்தவர்கள்	-	3333	-	3150
திருமுழுக்கு பெற்றவர்	-	260	-	185
திருச்சபையார்	340	-	61	93
பள்ளிகள்	57	24		

மாணவர்கள்	2402	1669	530	1176

1867 ஆம் ஆண்டு புள்ளி விவரம்[85]

	கொட்டாரம்	நாகர்கோவில்	திட்டுவிளை	நெய்யூர்	பாறசாலை
சபைகள்	29	34	13	59	93
ஊழியர்கள்	58	72	18	84	121
கிறிஸ்தவர்கள்	4440	4848	1478	8176	10999

சகிப்புத் தன்மை வளர்தல் : நாடார் இனத்தவர் முரட்டுக் குணம் கொண்டவர்கள் என்றும் நாகரீகமற்ற நிலையில் இருந்தவர்கள் என்றும்[86] ஹார்டுகிரேவ் என்பவர் குறிப்பிடுகிறார். ஆனால் அருள்பணியரின் அறப்போதனையால் கிறிஸ்தவர்களாக மாறிய நாடார் இன மக்கள் அறவாழ்வில் பல மாற்றங்களைப் பெற்றனர். றிங்கல்தௌபேயின் பணியால் கிறிஸ்தவத்தை ஏற்ற களியக்காவிளைக்கு பக்கத்திலுள்ள Kadeysdile என்ற கிராமத்தைச் சார்ந்த கிறிஸ்தவர் தாம் பிராமண அதிகாரிகளால் அதிகம் துன்புறுவதைக் குறித்து றிங்கல்தௌபேயிடம் தெரிவித்தார். அதற்கு றிங்கல்தௌபே, "நீ கிறிஸ்தவன் பொறுமையாய் துன்பங்களை சகித்தால் விண்ணுலகின் பேற்றினை அடைய முடியும்"[87] என்ற ஆறுத-ன் வார்த்தை மூலம் தேற்றினார். துன்பத்தின் வழியாய் விண்ணுலக பேரின்பம் கிட்டும் என்ற அறப்போதனையினால் திருவிதாங்கூர் கிறிஸ்தவர்களிடையே துன்பங்கள் அதிகரித்த போதும் கிறிஸ்தவர்களின் அறவாழ்விலும் வளர்ச்சியைக் காணமுடிந்தது.

நாட்டுத் திருப்பணியரின் வளர்ச்சி : மேலாடைக் கலகங்கள், இயற்கையின் சீற்றங்கள், உயர்சாதி இந்துக்களின் துன்புறுத்தல்கள் எனத் திருவிதாங்கூர் அருள்பணித் தளத்தில் பல சோதனைகள் இருந்தாலும், அவை அருள்பணியின் வளர்ச்சிக்கு மறைமுகமாக ஊக்கம் அளித்தன. தங்கள் வாழ்வின் வளர்ச்சிக்காக அருள்பணியர் சந்திக்கும் இடர்பாடுகள் திருவிதாங்கூர் கிறிஸ்தவர்களுக்குப் பெரிய அறைகூவலாகவே அமைந்தன. அருள்பணியரோடு இணைந்து விடுதலைப் பணியிலும், அதனால் ஏற்பட்ட துன்பத்திலும் இணைய பல கிறிஸ்தவர்கள் எழும்பினர். திருப்பணியருக்குரிய பயிற்சி

பெற்றுப் பலர் திருப்பணியராய் சொந்த மண்ணில் பணியாற்றினர். குறிப்பாக தேவதாசன், மாசில்லாமணி, ஞானக்கண், வேதமாணிக்கம், நத்தானியேல், சகரியா, தானியேல், குருபாதம், கமலம்[88] ஆகியோர் முக்கியமானோர்.

1860-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் வட்டாரக் கமிட்டியின் அறிக்கைப்படி "ஜேம்ஸ்டவுண், நாகர்கோவில், சாந்தபுரம், நெய்யூர் ஆகிய நான்கு சேகரங்களிலும் மொத்தம் 230 நாட்டுத்திருப்பணியரும், 106 சபைகளும், 8566 கிறிஸ்தவர்களும் இருந்தனர்"[89]. துன்புறுத்தல் காலங்களில் நாட்டுத் திருப்பணியர் "அதிக வைராக்கியமாய், விவேகமாய் வீடுகள் தோறும் சென்று இடைவிடாமல் போதனை செய்து கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் பிரசங்கித்தார்கள்". நற்செய்தியை அறிவிப்பதில் நாட்டுத் திருப்பணியர் காட்டிய ஆர்வம் இங்கிலாந்து மக்களை அதிகம் கவர்ந்தது. துன்பவேளையிலும், துன்பத்தை பொருள்படுத்தாது துன்பத்தில் அமிழ்ந்து கிடக்கும் மக்களை மீட்க அருள்பணியரோடு இணைந்து பணியாற்றி விடுதலை வாழ்வை மக்களுக்கு பெற்றுக்கொடுத்ததோடு மட்டுமல்லாது, நற்செய்திப் பணியின் மூலம் கிறிஸ்தவம்தான் விடுதலை வாழ்வுக்குரிய அடித்தளம் என்பதை நாட்டுத் திருப்பணியர் வெளிப்படுத்தினர்.

கிறிஸ்தவத் தலைவர்கள் உருவாக்கப்படல் : "சந்தர்ப்ப சூழ்நிலைகள் தலைவர்களையும், வீரர்களையும் உருவாக்குகின்றன" என்பது பழமொழி. இத்தகைய முதுமொழிக்கேற்ப கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பங்களின் மூலமாக தென்திருவிதாங்கூரில் கிறிஸ்தவத் தலைவர்கள் எழும்பினர். கிறிஸ்தவர்கள் சந்திக்கும் துன்பங்களைக் கண்ட கிறிஸ்தவர்கள் கொதித்தெழுந்தனர். கண்ணனூர் சிற்றாலயத்தை எதிரிகள் தாக்கிச் சிற்றாலயத்தில் வழிபாடு செய்த மக்களை ஊழிய வேலை செய்ய அடித்து இழுத்துச் சென்றபோது கண்ணனூர் கிறிஸ்தவர்களைக் காப்பாற்றக் கண்ணனூர் தச்சன்விளை வேதமாணிக்கம், சடையன், பு-ப்புனம் இசக்கிமாடன் தண்டல்காரன் ஆகிய மூன்று தலைவர்கள் திருச்சபை வரலாற்றில் இடம் பெறுகின்றனர். இம்மூவரும் நாயர் குல மக்களின்

வன்முறைகளை எதிர்த்து நின்று போரிட்டு வெற்றி பெற்றனர்[92]. இதைப்போன்று தென்திருவிதாங்கூர் பகுதியில் துன்புறுத்தல் அதிகம் காணப்பட்ட திருச்சபைகளில் கிறிஸ்தவத் தலைவர்கள் எழும்பினர். இதில் மருதூர்க்குறிச்சி குஞ்சன் தண்டல்காரன், தாநிவிளை காளி, பிச்சை, வீமன், ஆற்றூர் காளியாம்விளை கருமன், எருக்கலன்விளை மல்லன், வ-யதுறை ஞானப்பிரகாசம் ஆகிய ஏழுபேர் முக்கியமானவர்கள். எதிரிகளின் கைகள் வலுப்பெற்றக் காலத்தில் இவர்கள் சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டனர்.

எதிர் விளைவுகளை வெளிப்படுத்தல் : 1828-ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் நாள் ஞாயிறு காலை வழிபாட்டில் கலந்து கொண்ட கிறிஸ்தவர்களை நாயர்குல மக்கள் பிடித்து அவர்கள் தலையின்மீது தென்னை ஓலைகளை ஏற்றி பத்மநாபபுரம் கோட்டைக்கு இழுத்துச் சென்றனர். பல நாயர்கள் ஆயுதம் தாங்கியபடி அணிவகுத்துச் சென்றனர். எனினும் இசக்கிமாடன், வேதமாணிக்கம், சடையன் ஆகியோர் தலைமையிலான கிறிஸ்தவர் அணி நாயர்களின் இச்செயலைத் தோல்வியடையச் செய்து ஓலை சுமந்து சென்ற கிறிஸ்தவர்களை விடுவித்தனர். நாயர்களின் தலைகளில் இந்த ஓலை சுமைகளை ஏற்றி வைத்து அவற்றைக் கண்ணனூர் வழிபாட்டுமனை வரைக்கும் கொண்டு வரக்கட்டாயப்படுத்தினர்[93]. இந்நிகழ்ச்சி அடக்கி ஆளும் நாயர்குல மக்களை, இவர்களிடம் அடங்கி வாழ்ந்த நாடார் இன் கிறிஸ்தவர்கள் நீதியினிமித்தம் எதிர்த்து நிற்க வேண்டும் என்ற உணர்வை வெளிப்படுத்தியது. மேலை நாட்டு கல்வியறிவைப் பெற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள் "உயர்சாதி இந்துக்களுக்கு இனி அடிமைகளாக இருக்க மாட்டோம்" என இணைந்து குரல் கொடுத்தனர்.

கிறிஸ்தவ சமுதாய ஐக்கிய உறவு : திருவிதாங்கூரில் தொடக்கமுதலே கிறிஸ்தவர்கள் இந்து சமயத்தவரால் துன்புறுத்தப்பட்டனர். இத்துன்பம் கிறிஸ்தவர்களை அதிகம் பாதிக்காதவாறு கிறிஸ்தவர்களுக்குள் உறவு பரிமாற்றங்களுக்குரிய கூடுகைகளை அருள்பணியர் அமைத்துத் தந்தனர். கிறிஸ்து பிறப்பு மற்றும் சிறப்பு பண்டிகை நாள்களில் திருவிதாங்கூரிலுள்ள அனைத்து

L.M.S. கிறிஸ்தவர்களையும், மைலாடி வழிபாட்டுமனையில் கூடிவரச் செய்து விழா எடுத்து மகிழ் உணவைப் பகிர்ந்து உறவை வலுப்படுத்தினர்[95]. இவ்வுறவின் மூலம் துன்பங்கள் பகிரப்படவும் அறம் சார்ந்த உறவில் வளரவும் வாய்ப்புப் பெற்றனர்.

கிறிஸ்தவர்களின் பொருளாதார வளர்ச்சி : அருள்பணியரால் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட L.M.S. கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவத்தை ஏற்றதினால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதை அறிந்து, அருள்பணியர் கிறிஸ்தவர்கள் மீதும், அவர்களின் வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்தினர். 1810-ஆம் ஆண்டு முதல் 1812-ஆம் ஆண்டு வரையிலும் ஏற்பட்ட அதிக மழையினாலும், சமச்சீரற்ற கால நிலையினாலும் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். இத்தகைய இயற்கையின் சீற்றத்தின் மூலம் ஏற்கனவே உயர்சாதி இந்துக்களால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் இயற்கையின் சீற்றத்தினால் துன்பம் அடையக்கூடாது என்பதற்காக அருள்பணியர் பல உதவிகளை செய்தனர். குறிப்பாக றிங்கல்தௌபே மைலாடியில் கிணறு வெட்ட கூ- கொடுத்து கிணறு வெட்டி, இதன் மூலம் மக்கள் நிலங்களில் பயிரிட்டு வாழ வழி செய்தார். குளம் வெட்டக் கிறிஸ்தவர்களை ஈடுபடுத்தி கூ-கொடுத்தார். மருத்துவாழ்மலைக்குப் போய் அங்குள்ள சிவப்புநிறக் கற்களைப் பொறுக்கி வரும்படி கிறிஸ்தவர்களை அனுப்பினார். இக்கற்களை பொன், வெள்ளி, மோதிரங்கள் மற்றும் சட்டை பொத்தான்களில் பதித்து, ஆங்கிலேயருக்கு விற்று இதன் மூலம் பணம் திரட்டி[96] கிறிஸ்தவர்கள் பொருளாதாரத்தில் வளர உதவிகள் செய்தார். இதன் மூலம் துன்பத்தை அனுபவித்து வந்த L.M.S. கிறிஸ்தவர்கள் பொருளாதாரத்தில் உயர்வை பெற்றனர்.

அருட்பணியரின் அர்ப்பணிப்பு உறுதிப்படல் : நற்செய்தி பணிக்காக திருவிதாங்கூர் வந்த அருள்பணியர் சமுதாயத்தால் நசுக்கப்பட்ட மக்களுக்கு உயர்வைக் கொண்டுவர தம் முழு ஆற்றலையும் வெளிப்படுத்தினர். இதன் மூலம் நசுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் புதிய துளிர்கள் எழும்பின. புதிய மாற்றங்கள் சமுகத்தில் ஏற்பட்டன. எனவே தென்திருவிதாங்கூரில் அரசுக்கும்

ஆரம்பகால L.M.S. அருள்பணியருக்குமிடையே நீண்ட இழுவை நிலை இருந்து வந்தது. தொடர்ந்து அருள்பணியரின் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு சார்ந்த கிளர்ச்சி பெரும் பகையாக உருவெடுத்து அதிக வேகத்தில் வளர்ந்தது[97]. எனவே திருவிதாங்கூர் அரசு, அருள்பணியரையும் L.M.S. கிறிஸ்தவர்களையும் துன்புறுத்தியது. இத்துன்பம் அருள்பணியரை உற்சாகப்படுத்தியது. புது வேகத்துடன் ஏழைகளுக்காகவும், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களின் விடுதலைக்காகவும் உழைக்க வேண்டும், என்ற உந்துதலையும், உற்சாகத்தையும் தந்தது.

பண்பாட்டு மாற்றம் : திருவிதாங்கூரில் பெண்கள் தங்கள் உடலை மூடி மறைப்பதற்கு உரிமை மறுக்கப்பட்ட நிலையில் அரை நிர்வாணமாக காட்சியளித்தனர். இத்தகைய நாகரீகமற்ற கலாச்சாரத்தை மாற்றியமைக்க பலர், பல முயற்சிகள் செய்தனர். மொகலாய சர்தார் முகிலன் என்பவர் தென்திருவிதாங்கூரைத் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தபோது, இங்குள்ள நாகரீகமற்ற நிலையை மாற்றியமைக்கும் வகையில் பெண்கள் தம் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது, தம் உடலை மறைத்துச் செல்ல வேண்டும். குறிப்பாக சூத்திர இனப் பெண்களும் ஆடை அணிய வேண்டும் என ஆணையிட்டார். ஆனால் சர்தார் முகிலனின் மரணத்திற்குப்பின் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் அழிந்து பழையநிலை திரும்பியது.

1812-ஆம் ஆண்டு அருள்பணியரின் தூண்டுதலோடு கர்னல் மன்ரோ கிறிஸ்தவர் ஆடை அணிவதற்குரிய அனுமதியை அளித்தார். இது அறம் சார்ந்த கிறிஸ்தவ ஒழுக்கம் என அருட்பணியர் போதித்துக் கட்டாயப்படுத்தியதால் கிறிஸ்தவப் பெண்கள் இதைப் பின்பற்றினர். கிறிஸ்தவப் பெண்களைப் பின்பற்றி, நாயர் இனப் பெண்களும், இந்து நாடார் பெண்களும் ஆடை அணிந்தனர். இந்நிகழ்வை உயர்சாதி இந்துக்கள் தங்கள் அதிகாரச் சமநிலையில் இழப்பு ஏற்படுவதாக கருதியதால் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர். இத்துன்புறுத்தலை எதிர்த்து நின்று, தாங்களும் மனிதர்களாய் வாழ வேண்டும் என்ற உரிமைக் குரலை எழுப்ப அருள்பணியர் ஆதரவுத் தந்து

[illegible]

கிறிஸ்தவர்களின் நேர்மை வெளிப்பாடு : [illegible] நாகர்கோவிலில் [illegible] கிறிஸ்தவர்கள் [illegible] மனுவில், "நாங்கள் கிறிஸ்தவத்தை [illegible] வரி செலுத்துவதில்லை என்றும், அரசுக்கு [illegible] என்றும் இந்து சட்டப்படி [illegible] எனவே ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கிறிஸ்தவ பொறுப்பாளரை வரிவசூலிக்க அரசு நியமிக்க வேண்டும். அதன் மூலமாய் அரசுக்குரிய அனைத்துக் கடமைகளையும் நாங்கள் நிறைவேற்றுவது உறுதிப்படுத்தப்படும்"[101] என்று தங்கள் தேசப்பற்றையும், நேர்மைத் தன்மையையும் [illegible] வெளிப்படுத்தினர்.

கிறிஸ்தவ ஒப்படைப்பில் உறுதி காணல் : கிராமங்களிலுள்ள தலைவர்கள் தங்கள் கிராமத்திலுள்ள கிறிஸ்தவர்களையும், புதிதாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட மக்களையும் அதிகமாக துன்புறுத்தினர். கிறிஸ்தவத்தை விட்டுவிட்டு மீண்டும் இந்து சமயத்தில் இணையக் கட்டாயப்படுத்தினர். இந்த சமயத்திற்கு வர மறுத்தவர்களை தீய ஆவிகள் அழித்து விடும் என சிலை வணங்குவோர் தங்கள் தெய்வத்தின் ஆற்றலை வெளிப்படுத்தி பயமுறுத்தினர்[102]. ஆனால் அருள்பணியர் மூலமாக கிறிஸ்தவ சமய நம்பிக்கை மூலம் தீய ஆவிகள் செயலற்றவை என்பதை உணர்ந்து கொண்ட கிறிஸ்தவர்கள் அனைத்து அச்சுறுத்தல்களையும் கண்டு பின் வாங்காது உறுதியாய் நிலைத்திருந்தனர். தீய ஆவிகள் கிறிஸ்தவர்களை எதுவும் செய்யாது கண்ட பலர் இந்து சமயத்தினர்

தங்கள் தெய்வத்தின் செயலற்ற தன்மையை உணர்ந்தனர்[103]. இதனால் பலர் கிறிஸ்தவத்தை ஏற்றனர்.

போ- கிறிஸ்தவர்களின் மாற்றம் : திருவிதாங்கூரில் பல மக்கள் L.M.S. கிறிஸ்தவத்தின் தாக்கத்தால் நற்செய்தியின் சாரத்தை சொந்தமாக்கி கிறிஸ்தவத்தை ஏற்றனர். ஆனால் சிலர் உலகியல் சார்ந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கிறிஸ்தவத்தை ஏற்றனர். இன்னும் சிலர் நீதிபதியாய் பொறுப்பேற்ற சார்லஸ் மீட் தங்கள் வழக்குகளில் சாதகமான தீர்ப்புச் செய்வார் என கிறிஸ்தவத்தை ஏற்றனர்[104]. இவ்வாறு சுயம் சார்ந்த நன்மைக்காக கிறிஸ்தவத்தை ஏற்றவர்கள் இந்து சமயத்தவரால் துன்புறுத்தப்படும்போது தாங்கள் ஏற்ற கிறிஸ்தவ சமயத்தி-ருந்து விடுபட்டு தங்கள் பழைய சமயத்தில் இணைந்தனர்[105]. இத்தகைய துன்பத்தின் மூலம் யார் உண்மை கிறிஸ்தவர்கள் என்பதை தெளிவாய் அறிய முடிந்தது.

1. மைலாடியிலுள்ள் மகராசன் வேதமாணிக்கம் சகோதரர் மகன், 1818-ஆம் ஆண்டு சார்லஸ் மீட் தொடங்கிய செமினறியில் கற்ற 10 மாணவர்களில் இவரும் ஒருவர். நெய்யூர் நாகர்கோவில் அருள்பணித்தளங்களில் பணிபுரிந்த திருப்பணியரில் மிகவும் சாதுரியமானவர். கீர்த்தனைப் பாடல்கள் இயற்றுவதில் அதிக திறமைமிக்கவர். 1827-ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட கிறிஸ்தவத் துன்புறுத்தல் நேரத்தில் இப்பாடலைப் பாடினார்.

1. C.M. Agur, op.cit., pp.478, 479.
2. சாமுவேல் சகரியா, op.cit., p.131
3. C.M. Agur, *op cit.,* p.591.
4. R.N. Yesudas, '*A People's Revolt Travancore,* p.104.
5. William Robinson, op.cit., p.93.
6. சாமுவேல் சகரியா, *op. cit.,* p.53.
7. *Ibid.,* p.121.
8. Samuel Mateer, *The Land of Charity,* p. 278.
9. *The Missionary Magazine and Chronicle,* Vol.XIV, No: CLXXIII, London, October 1850, p.187.

10. Letter from Rev. James Russel to the Resident, dated January 31, 1859, R.N. Yesudas, *A People's Revolt in Travancore*, Appendix : XXIII.
11. *Ibid.*
12. *Ibid.*
13. Petition from the Chanoo ad Cauvathy Christian inhabitants of Eraniel, Kalcoolum, Coolitorah, Talooks in Travancore Sircar to the Resident (Undated Letter) ஐவி பீட்டர் *சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும்.* பின் இணைப்பு :3.
14. C.M. Agur, op. cit., p.834.
15. Letter of Autoor Adigaram Christian to the Acting Resident of Travancore, dated : Vykasi 7th 1005 (1829) ஐவி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும் தமிழர்விடுதலையும் பின் இணைப்பு.
16. C.M. Agur, *op.cit.*, p.840.
17. Summary of Complaints lodged at the padbanabapuram Cutchery in January 1829, ஐவி பீட்டர், டி. பீட்டர் *மலையாளி ஆதிக்கமும், தமிழர் விடுதலையும்,* பின் இணைப்பு.
18. William Robinson, *op. cit.*, p. 838.
19. C.M. Agur, *op.cit.*, p.838.
20. *Ibid.*, p.56.
21. *Ibid.*, p. 833.
22. Samuel Mateer, *The Land of Charity*, p.301.
23. *The Missionary Magazine and Chronicle* Vol XIV, No : CIXXII, London, October 1850, p. 187.
24. ஜி.ஐசக் அருள்தாஸ், தென் எல்லைக் காவலன் நேசமணி, நேசமணி தமிழ்ப்பதிப்பகம், நாகர்கோவில் 2002 p.29.
25. C.M. Agur, *op. cit.*, pp.897-898.
26. Petition of Raman Thampi to the British Resident of Travancore regarding his sufferings in the Jail, dated Audy 3rd 1009, ஐவி பீட்டர், டி. பீட்டர், *சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும்,* பின் இணைப்பு : 7.
27. Letter of Autoor Adigaram Christian to the Acting Resident of Travancore, dated Vykasi 7th 1005 (1829) ஐவி பீட்டர், டி. பீட்டர்,

மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும், பின் இணைப்பு.11.

28. ஐவி. பீட்டர் டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும், தமிழர் விடுதலையும் p.38.

29. Arszee written by the Padacars of Madalam Adigarom in Yaraneal District, dated Margally 14th, 1004, ஐவி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும் பின் இணைப்பு : 6

30. P. Shungoonny Menon, p.507.

31. Letter from the acting Dewan to the Resident, dated March 8th 1858, R.N. Yesudas, *A People's Revolt in Travancore,* Appendix : V.

32. S.S. ஹெக்டர், op.cit., p.2.

33. Letter of L.M.S. Missionaries – Rev. Charles Mead and Rev. Charles Mault – to the British Resident regarding "Shannar Oppression". Dated December 21, 1828, ஐவி பீட்டர், டி. பீட்டர், *சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும்,* பின் இணைப்பு :5.

34. C.M. Agur, *op.cit.,* pp.776,777.

35. R.N. Ysudas, *op.cit.,* p. 105.

36. The petition of Visvasam Vedanayagam, Catechist to the Resident, 19.21858, R.N. Yesudas, *A People's Revolt in Travancore,* Appendix : III.

37. A Letter to col. Morrison, Resident, dated January 27th , 1829 by Rev. C. Mault, ஐவி பீட்டர், டி. பீட்டர், *மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும்* பின் இணைப்பு: 10.

38. R.N. Yesudas, *Briish Policy in Travancore, 1805-1859,* p. 25.

39. Ibid., p.31.

40. Samuel Mateer, *The Land of Charity,* p.279.

41. *Ibid.,* p.280.

42. சாமுவேல் சகரியா, *op, cit.,* p.127.

43. A Letter to Col.Morrison, Resident, dated January 27th, 1829 by Rev. C. Mault, ஐவி பீட்டர், டி. பீட்டர், *மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும்,* பின் இணைப்பு : 10.

44. Letter of L.M.S. Missionaries – Rev. Charles Mead and Rev. Charles Mault – to the British Resident regarding, "Shanar

Opperession", dated December 21, 1828, ஜவி பீட்டர், பீட்டர் சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும், பின் இணைப்பு : 5.

45. *Ibid.*

46. *Ibid.*

47. C.M. Agur, *op cit.*, p.835.

48. Petition from the Chanoo and Cauvathy Christian inhabitants of Eraniel, Kulcoolum, Coolitorah, Talooks in Travancore Sircar to the Resident (Undated Letter) ஜவி பீட்டர். டி. பீட்டர் சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும் பின் இணைப்பு :3.

49. Letter from Rev. James Russel to the Resident, dated January 31st 1859, R.N. Yesudas, A people's Revolt in Tranvore, Appemdox : XXIII

50. C.M. Agur, Opcit., p.536.

51. Ibid., pp.915, 916.

52. Annual Report of the Directors of the Missionary Society usually called the L.M.S., 1815 to 1860, p.65.

53. Letter from Rev. James Russel to the Resident, dated January 31, 1859, R.N. Yesudas, A people's Revolt in Travancore, Appendix: XXIII

54. Petition from the Chanoo and Cauvathy Christian inhabitants of Eraniel, Kulcoolum, Coolitorah, Talooks in Travancore Sircar to the Resident (undated letter) ஜவி பீட்டர். டி. பீட்டர் சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும் பின் இணைப்பு :5.

55. Letter of L.M.S. Missionaries – Rev. Charles Mead and Rev. Charles Mault – to the British Resident regarding "Shanar Oppression". Dated December 21, 1828, ஜவி பீட்டர். டி. பீட்டர் சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும் பின் இணைப்பு : 3.

56. சாமுவேல் சகரியா, op. cit., p.121.

57. Letter from Rev. James Russel to the Resident, dated January 31, 1859, R.N. Yesudas, A people's Revolt in Travancore, Appendix: XXIII.

58. Ibid.

59. Samuel Mateer, *The Land of Charity,* p.279.

60. Petition from the Chanoo and Cauvathy Christian inhabitants of Eraniel, Kulcoolum, Coolitorah, Talooks in Travancore Sircar to the Resident (Undated Letter) ஜவி பீட்டர். டி. பீட்டர் சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும் பின் இணைப்பு : 3.

61. R.N. Yesudas, British Policy in Travancore, p.32.

62. டி.எச். ஜார்ஜ், குமரிமாவட்டப் பெண்ணுரிமைப் போராட்டம், Institute of Asian Studies, Chennai, 1997, p.46.

63. R.N. Yesudas, British Policy in Travancore, p.25.

64. Letter from Rev. James Russel to the Resident, dated January 31, 1859, R.N. Yesudas, A people's Revolt in Travancore, Appendix: XXIII.

65. Letter from Rev. James Russel to the Resident, dated January 10th, 1859, R.N. Yesudas, A people's Revolt in Travancore, Appendix: XXIII.

66. The Report of the Directors to the Forth Eighth General Meeting of the L.M.S. May 12th 1842, p.65.

67. சாமுவேல் சகரியா, op. cit., p.121.

68. டி.எச். ஜார்ஜ், op. cit., p.47.

69. A Letter to Col.Morrison, Resident, dated Vykasi 7th, 1829 by Rev. C. Mault, ஜவி பீட்டர், டி. பீட்டர், மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும், பின் இணைப்பு : 10.

70. ஜாண்ஜேக்கப், op. cit., p.69.

71. Samuel Mateer, *The Land of Charity,* p.302.

72. Letter from Rev. James Russel to the Resident, dated January 31, 1859, R.N. Yesudas, A people's Revolt in Travancore, Appendix: XXIII.

73. V. Nagam Aiya, *op.cot.,* p.529.

74. Annual Report of the Directors of the Missionary Society usually called the L.M.S., 1815 to 1860, p.65.

75. Letter from Rev. F. Baylis to the Resident, dated January 17, 1859, R.N. Yesudas, A People's Revolt in Travancore, Appendix:XVII.

76. William Robinson, *op cit.,* p.94.
77. Ibid.
78. C.M. Agur, *op cit.,* pp.922, 923.
79. Annual report of the Directors of the Missionary Society, usually called L.M.S., 1815 to 1860, p.66.
80. சாமுவேல் சகரியா, op. cit., p.128.
81. G. கிறிஸ்துதாஸ், பாதச்சுவடுகள், தென் இந்தியத்திருசபை கன்னியாகுமரிப் பேராய வரலாறு கி.பி. 1795 - கி.பி. 2000. C.M.S., Printing Press, நாகர்கோவில், 2005, p.35.
82. ஜான் A. ஜேக்கப், op. cit., p.35.
83. C.M. Agur, *op cit.,* pp.815, 816.
84. சாமுவேல் சகரியா, op. cit., p.128.
85. கிறிஸ்துதாஸ், op. cit., p.153.
86. இராபர்ட். எல். ஹார்டுகிரேவ், op. cit., p.41.
87. R.N. Yesudas, A People's Revolt in Travancore p.94
88. C.M. Agur, *op cit.,* pp. 938.
89. S.S. ஹெக்டர், *op cit.,* p. 44.
90. சாமுவேல் சகரியா, *op cit.,* p. 128.
91. டி.எச். ஜார்ஜ், *op cit.,* p. 45.
92. சாமுவேல் சகரியா, *op cit.,* p. 129.
93. டி.எச். ஜார்ஜ், *op cit.,* pp. 46 - 47.
94. R.N. Yesudas, A People's Revolt in Travancore p.113.
95. சாமுவேல் தாசன், *op. cit.,* p.85.
96. William Robinson, *op cit.,* p.108.
97. P. Shungoony Menon, *op. cit.,* P.505.
98. R.N. Yesudas, British Policy in Travancore, p.26.
99. Nagam Aiya, op.cit., pp.312, 313.
100. C.M. Agur, *op. cit.,* Appendix:XVIII.
101. Letter of L.M.S. Missionaries – Rev. Charles Mead and Rev. Charles Mault – to the British Resident regarding, "Shanar Opperession", dated December 21, 1828, ஜவி பீட்டர், பீட்டர் சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும், பின் இணைப்பு : 5.
102. Ibid.
103. Ibid.
104. சாமுவேல் சகரியா, *op. cit.,* p.55.
105. Ibid., p.56.

நிறைவுரை

மகராசன் வேதமாணிக்கத்;தின் மூலம் தென்திருவிதாங்கூரில் முதன் முதல் சீர்திருத்தக் கிறிஸ்தவப்பணி தொடங்கினாலும், L.M.S. அருள்பணியர் றிங்கல்தௌபே வருகைக்குப்பின் அருள்பணியில் புதிய வேகம் ஏற்பட்டது. 1805-ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், திருவிதாங்கூர் அரசுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் மூலம் தம் அதிகாரத்தை திருவிதாங்கூரில் தக்கவைத்து கொண்ட ஆங்கிலக் கம்பெனி, தம் பிரதிநிதிகள் மூலம் இறைப்பணிக்கு ஆதரவு அளித்தது. கர்னல் மெக்காலே தென்திருவிதாங்கூரில் L.M.S. கிறிஸ்தவம் வருவதற்குரிய அடித்தளம் அமைத்தாலும், திருவிதாங்கூரில் கிறிஸ்தவ மிஷன்களின் தந்தை என அழைக்கப்பட்ட கர்னல் மன்றோ ஆங்கிலப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றபின், ஆங்கில அரசின் முழுமையான ஆதரவையும் அருள்பணிக்கு அளித்தார். கிறிஸ்தவத்திற்கு ஆதரவான இவரது செயல்பாடுகள் திருவிதாங்கூரில் வாழ்ந்த நாயர்களுக்கு வெறுப்புணர்வையும், கிளர்ச்சியையும் ஏற்படுத்தியது. தென்திருவிதாங்கூர் மக்கள் கிறிஸ்தவத்தை ஏற்பதை தென்திருவிதாங்கூர் அரசும் விரும்பவில்லை. கிறிஸ்தவத்தை ஏற்பவர்கள் அரசு ஆணையை மீறும் குற்றவாளிகாளாக கருதப்பட்டனர்.

தென்திருவிதாங்கூரில் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு நற்செய்தி அறிவித்து, விடுதலை உணர்வையூட்டி, அடிமைத்தனத்தி-ருந்து மீட்க, அருள்பணியர் அரும்பாடுபட்டனர். கிறிஸ்தவத்தை ஏற்ற மக்கள் முழுவிடுதலைப் பெற வேண்டும் என உரிமை கோரினர். அருள்பணியரின் இந்த செயல்பாடு மறுமலர்ச்சி ஏற்படுத்தும் ஓர் இயக்கமாக தென்திருவிதாங்கூரில் உருவெடுத்தது. எதிர்ப்புகளின் மத்தியிலும் அருள்பணியர் துணிந்து நின்று சமத்துவம், அடிப்படை உரிமைகள், நீதி, அங்கீகாரம் அனைத்தையும் பெற்றுத் தந்தனர். அருள்பணியரின் தலைமையில் நடைபெற்ற சமூக விழிப்புணர்வு என்ற சீர்திருத்தம் திருவிதாங்கூர் அரசோடு பகை உணர்வை ஏற்படுத்தியது. ஆனால் அருள்பணியர் ஆங்கில அரசின்

பிரதிநிதிகளாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டதாலும், ஆங்கில அரசின் அதிகார ஒத்துழைப்பு இவர்களுக்கு கிடைத்தாலும், சமயம் சார்ந்த பணிகளுக்குரிய பொருளாதார உதவிகள் ஆங்கில அரசிடமிருந்து பெற்றதாலும், அருள்பணியர் இப்பகைக்கு பயாகாது தப்பினர். ஆனால் அருள்பணியரின் வழியாக கிறிஸ்தவத்தை ஏற்ற தென்திருவிதாங்கூர் கிறிஸ்தவர்கள் அரசாலும், அதிகாரிகளாலும் துன்புறுத்தப்பட்டனர்.

அருள்பணியரின் அறப்போதனையால் பயிற்றுவிக்கப்பட்ட தென்திருவிதாங்கூர் கிறிஸ்தவர்கள், தங்கள் வாழ்வின் மறுபக்கத்தை திரும்பிப் பார்த்தனர். அருள்பணியர் விதைத்த மறுமலர்ச்சிக்கான விதைகள் துளிர்விட ஆரம்பித்தன. துளிர்த்து வரும் மறுமலர்ச்சி என்னும் தளிர் முளையிலேயே கிள்ளி எறியப்படாமல் பாதுகாக்க நாட்டுத் திருப்பணியரும் தங்களை அர்ப்பணித்தனர். பொய் வழக்குகள், அங்கீகாரம் இழத்தல், தீக்கிரையாக்கப்படல், சிறையில் வேதனைகளை அனுபவித்தல், இரத்தம் சிந்துதல் போன்ற வேதனைகளையும் சகித்து அடிமைத்தனத்தி-ருந்து விடுதலை பெறுவதற்கும், திருச்சபையை கட்டி எழுப்பவும் துன்பங்களையே படிக்கற்களாய் மாற்றினர். கடைசிவரையிலும் துணிவுடன் இணைந்து நின்று விடுதலைக்காய் பாடுபட வேண்டும் என்ற உணர்வு பெண்கள் மத்தியிலும் பரவியது. வெற்றி பெறும்வரை தோள்சீலை அணிவதை நிறுத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்தனர். வன்முறையற்ற அறப்போராட்டம் கிறிஸ்தவ மாண்பினை உலகிற்கு எடுத்தியம்பியது. எந்த சூழ-லும் இந்து கோவில்களை உடைத்ததாகவோ, இந்து சமய மக்களை அடித்து துன்புறுத்தியதாகவோ, அவர்கள் மீது பொய் குற்றம் சுமத்தி சிறையில் அடைத்ததாகவோ வரலாற்றுத் தடயங்கள் ஏதுமில்லை. கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பங்கள், சமுதாய, பொருளாதார, கலாச்சார விடுதலையை அளித்தாலும், இத்துன்புறுத்தல் கிறிஸ்தவ பற்றுறுதியில் வளரவும், திருச்சபைகள் கட்டி எழுப்பப்படவும் அடித்தளமாய் அமைந்தது.

கி.பி. 180-ஆம் ஆண்டு கார்த்தேஜ் நகரத்தில் இரத்த சாட்சிகளின் தைரியத்தைக் கண்டு மனமாற்றம் அடைந்த

தொர்த்துல்-யன் என்னும் திருச்சபையின் முன்னோடி, தம் வாழ்வோடு தொடர்புடைய ***"இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து"*** என்ற பற்றுறுதியறிக்கையை கிறிஸ்தவ வரலாற்றில் தடம் பதித்தார். இக்கூற்று கிறிஸ்தவ வரலாற்றில் உறுதிச்செய்யப்பட்ட கூற்று என்பதை வரலாற்றினூடாய் அறியலாம். பல கால சூழ-ல், வித்தியாசமான கோணங்களில் கிறிஸ்தவத்தை அழிக்க வேண்டும் எனத் திட்டமிட்டு கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் செயல்பட்டனர். ஆனால் கிறிஸ்தவத்தை முடிவுக்கு கொண்டுவர இயலவில்லை. தொர்த்துல்-யனின் இக்கூற்று கிறிஸ்தவத்தில் அநேக இரத்த சாட்சிகளை உருவாக்கும் வித்தாக அமைந்தது.

தென்திருவிதாங்கூரிலும் சீர்திருத்த கிறிஸ்தவம் வேரூன்றிய குறுகிய காலகட்டத்தில் ஏற்பட்ட அதிகபட்ச வளர்ச்சிக்கு உரமூட்டி, உயிரூட்டம் அளித்தது கிறிஸ்தவர்கள் அடைந்த துன்பம் எனலாம். இத்துன்பங்கள் கிறிஸ்தவத்தை வளர செய்து, சமுதாயத்தையே மாற்றியமைத்து புதிய வரலாறு படைக்கும் நிலைக்கு கொண்டு சென்றது.

இன்றைய சூழ-ல் கிறிஸ்தவத்திற்கு எதிரான தடைச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டு வழிபாட்டுமனைகள் மதவாதிகளால் எரிக்கப்பட்டாலும், கிறிஸ்தவம் ஒருபோதும் அழிந்து போகாது. கிறிஸ்துவின் பெயரில் நிகழும் தியாகங்கள் வித்தாகவே அமையும். துன்பத்தின் மத்தியில் தான் கிறிஸ்தவம் துளிர்விட்டு வளரும்.